
# ஐக்கிய நாடுகள்

## 60 ஆண்டுகால செயல் மதிப்பீடு




**UNITED NATIONS : SIXTY YEARS OF PROGRESS (TAMIL)**

ஐக்கிய நாடுகளின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
தொகுக்கப்பட்டது.

# ஐக்கிய நாடுகள்

## 60 ஆண்டுகால செயல் மதிப்பீடு

ஐக்கிய நாடுகளின் 60 ஆவது ஆண்டு
நிறைவை முன்னிட்டு
ஐக்கிய நாடுகள் தகவல் மையத்தால்
தொகுத்து வெளியிடப்பட்டது.

2005, ஒற்றோபர்

(இலவச விநியோகத்திற்கு மாத்திரம்)

ஐக்கிய நாடுகள் தகவல் மையம்,
2002/2004, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
இலங்கை.

2-CM, 005453

CM 005453-4,000(2005/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

"ஐக்கிய நாடுகள் : 60 வருடகால செயல் மதிப்பீடு"

## பொருளடக்கம்


*அறிமுகம்* *பக்கம்*

1 அத்தியாயம் ... ... ... ... ... 1
ஐக்கிய நாடுகள் பற்றிய அறிமுகம்

2 அத்தியாயம் ... ... ... ... ... 8
ஐக்கிய நாடுகள் குடும்பம் : ஒவ்வொரு நிறுவனமும் எவ்வாறு இயங்குகின்றன ?

3 அத்தியாயம் ... ... ... ... ... 22
சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் செயல் மதிப்பீடு

4 அத்தியாயம் ... ... ... ... ... 33
நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி

5 அத்தியாயம் ... ... ... ... ... 42
மனித உரிமைகள்

6 அத்தியாயம் ... ... ... ... ... 50
60 வருடகால முன்னேற்ற அறிக்கை

7 அத்தியாயம் ... ... ... ... ... 55
ஐக்கிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு

சர்வதேச தொழில் ஸ்தாபனம் (ILO) ... ... ... 56
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் (UNHCR) ... 57
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) ... ... 58
உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) ... ... ... 60
உலக உணவுத் திட்டம் (WFP) ... ... ... 62
உணவு விவசாய ஸ்தாபனம் (FAO) ... ... ... 64
ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA) ... ... 65
புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (IBRD) (World Bank) ... 66
சர்வதேச நாணய நிதியம் (IMF) ... ... ... 67
ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ... ... 68
ஐக்கிய நாடுகள் தகவல் மையம் (UNIC) ... ... ... 70

8 அத்தியாயம்
இலங்கையில் இருந்து ஐக்கிய நாடுகளுக்கு ... ... 71

# அறிமுகம்

1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி உருவான ஐக்கிய நாடுகளின் 60 ஆவது ஆண்டு நிறைவு இவ்வருடம் (2005) அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டே "ஐக்கிய நாடுகள் : 60 வருடகால செயல் மதிப்பீடு" என்ற நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனிதகுல வரலாற்றின் மிகவும் கொடுமையான யுத்தமான இரண்டாவது உலக மகாயுத்தத்தை பின்னணியாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதாகும். அனைவருக்கும் மிகவும் சிறந்த உலகத்தை உருவாக்க வேண்டுமென்பது அதன் நோக்கம். அனைத்துலக சமாதானம், பாதுகாப்பை உறுதிசெய்வது முதற்கொண்டு மனிதகுலம் எதிர்நோக்கியிருக்கும் வறுமை, சுற்றாடல் மாசடைதல், தண்ணீர் நெருக்கடி, எச்ஐவி/எயிட்ஸ் போன்ற அனைவருக்கும் பொதுவான சவால்களை வெற்றிகொள்ளும் அபிலாஷைகள் அந்த நோக்கத்தில் அடங்கியிருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு மனிதரதும் நாளாந்த வாழ்க்கைக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் இடையில் ஒருவகையான நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. மனித குலத்தைப் பாதிக்கும் ஏதேனும் அனர்த்தங்கள் இடம்பெறுகையில் துணைக்கு வரும் மிகப்பெரிய அமைப்பு ஐக்கிய நாடுகள் தான். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கை உள்ளிட்ட பல நாடுகளை சுனாமி தாக்கியபோது இதனைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறான ஒரு அமைப்பைப் பற்றி பாடசாலை மாணவர்கள் அடங்கலாக சகலர் மத்தியிலும் புரிந்துணர்வை ஏற்படுத்துவது காலத்தின் தேவை.

இந்த நூலின் முதல் ஆறு அத்தியாயங்களும் ஐக்கிய நாடுகளின் தோற்றம், ஸ்தாபன ரீதியான கட்டமைப்பு, உலக சமாதான, பாதுகாப்பு விடயங்களில் பங்களிப்பு, மனித உரிமைகள் ஆகிய தலைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழாவது அத்தியாயம் இலங்கையில் உள்ள விசேட ஐக்கிய நாடுகள் காரியாலயங்களின் செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான தகவல்களைக் கொண்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் இலங்கை ஐக்கிய நாடுகளின் அங்கத்துவத்தைப் பெற்று 50 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. அதனால், ஐக்கிய நாடுகளில் இலங்கையின் பங்களிப்பு பற்றிய சிறு குறிப்புக்களும் இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

# 1 ஐ. நா. குடும்பம் பற்றிய ஓர் அறிமுகம்

உலகின் சனத்தொகை வருடாந்தம் 70 மில்லியனால் அதிகரிக்கிறது. 1999 இல் 6 பில்லியனாக இருந்த சனத்தொகை 2050 ஆம் ஆண்டளவில் 7.7 பில்லியனுக்கும் 11.1 பில்லியனுக்கும் இடைப்பட்டதாக அதிகரித்துவிடும். உலக மக்களில் ஒரு பில்லியனுக்கு மேற்பட்டவர்களின் அன்றாட வருமானம் ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே இருக்கிறது. வளர்முக நாடுகளில் வசிக்கும் 4.4 பில்லியன் மக்களில் ஐந்திலொரு பங்கினர் போஷாக்குக் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். நியூயோர்க் நகரில், பரிஸில் அல்லது லண்டனில் பிறக்கும் ஒரு குழந்தை வளர்முக நாடொன்றில் பிறக்கும் 50 பிள்ளைகளைப் பார்க்கிலும் கூடுதலானவற்றைத் தனது வாழ்நாளில் நுகர்கிறது, விரயமாக்குகிறது, மாசுபடுத்துகிறது. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான அரசாங்கச் செலவினம் லக்ஸம்பேர்க்கில் ஒரு ஆளுக்கு 15,500 அமெரிக்க டொலர் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால், சீனாவில் அது 57 அமெ. டொலர் மட்டுமே. பின்லாந்தில் உடல்நலப் பராமரிப்புக்கான செலவினம் ஒரு ஆளுக்கு 2000 அமெரிக்க டொலர்கள். வியட்நாமில் அது 3 அமெரிக்க டொலர்கள் மட்டுமே. உலகில் அனைவருக்கும் அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டுமாயின் ஆண்டுதோறும் 6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிகமாகத் தேவைப்படும். அனைவருக்கும் அடிப்படை மருத்துவ வசதிகளையும் போஷாக்கையும் வழங்க வேண்டுமாயின் ஆண்டுதோறும் 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிகமாகத் தேவைப்படும். அதேவேளையில், ஐரோப்பிய நாடுகளிலுள்ளவர்கள் ஆண்டுதோறும் மதுபானத்திற்காக 105 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் சிகரட்டுகளுக்காக 50 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் செலவிடுகின்றனர். உலகிலுள்ள அனைவருக்கும் சுத்தமான நீரும் மலசலகூட வசதிகளும் கிடைப்பதை உறுதிப்படுத்த வருடாந்தம் 9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும். இதைப்போல இரண்டு மடங்கு பணம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் செல்லப் பிராணிகளின் உணவுக்காகச் செலவிடப்படுகிறது.

# 1 ஐ. நா. குடும்பம்

## பற்றிய ஓர் அறிமுகம்

**ஐக்கிய நாடுகள் என்றால் என்ன ?**

ஐக்கிய நாடுகள் என்பது உலக சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காக உழைக்கும் பொருட்டு சுயவிருப்பின் பேரில் ஒருங்கிணைந்த சுதந்தர நாடுகளின் தனித்துவமான அமைப்பாகும். இந்த அமைப்பு 1945, ஒக்டோபர் 24 ஆம் திகதி 51 நாடுகளுடன் உதயமானது. இன்று இதில் 191 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஐ. நா. விலிருந்து எந்தவொரு நாடும் எக்காலத்திலும் முற்றாக வெளியேறியதில்லை. வெளியேற்றப்படவுமில்லை. 1965 இல் இந்தோனேஷியா அதன் அயல் நாடான மலேசியாவுடன் கொண்டிருந்த ஒரு பிணக்குக் காரணமாகத் தற்காலிகமாக வெளியேறியபோதிலும் மறு வருடமே மீண்டும் இணைந்து கொண்டது. 2002 செப்டம்பர் 20 ஆம் திகதி அங்கத்துவம்பெற்ற தீமோர்-லெஸ்தே கடைசியாக சேர்ந்துகொண்ட நாடாகும்.

**ஐ. நா. ஓர் உலக அரசாங்கம் போன்றதா ?**

இல்லை. அரசாங்கங்கள் நாடுகளையும் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஆனால், ஐ. நா. ஒரு நாட்டையோ அல்லது ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தையோ பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அது சகல அங்கத்துவ நாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. அங்கத்துவ நாடுகள் விரும்புவதை மட்டுமே அதனால் செய்ய முடியும். இன்னுமொரு வழியில் சொல்வதானால், ஐ. நா. என்பது சுதந்திரமான நாடுகள் தனித்தனியாகவும் பொதுவாகவும் தம்மைப் பாதிக்கின்ற உலகப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு ஒன்றுகூடுகின்ற ஒரு சர்வதேசப் பாராளுமன்றம் போன்றதெனலாம்.

**ஐ. நா. வின் பணிகளை நெறிப்படுத்தும் விதிகளையும் கோட்பாடுகளையும் கொண்ட ஆவணம் ஒன்று உள்ளதா ?**

ஆம். அதுவே ஐக்கிய நாடுகள் சாசனம். அங்கத்துவ நாடுகளின் உரிமைகள், கடமைகள் பற்றியும் பொது இலட்சியங்களை எய்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிக்கும் வழிகாட்டிகள் அதில் அடங்கியுள்ளன. ஒரு நாடு ஐ. நா. வில் அங்கத்துவம் பெறும்போது இச்சாசனத்தின் நோக்கங்களையும் விதிகளையும் ஏற்றுக்கொள்கிறது. ஐ. நா. சாசனம் 1945 ஜூன் 26 ஆம் திகதி சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் 50 நாடுகளின் பிரதிநிதிகளினால் கைச்சாத்திடப்பட்டது. போலந்து தனது உள்நாட்டு நிலைமை காரணமாக இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாவிடினும் பிறிதொரு தினத்தில் கைச்சாத்திட்டு ஐ. நா. வின் 51 ஆவது ஆரம்பகால அங்கத்துவ நாடாகியது.

**ஐ. நா. வின் நான்கு பிரதான நோக்கங்கள் :**

1. உலகம் முழுவதும் சமாதானத்தைக் காத்தல்.
2. நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்.
3. வறிய மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் பசி, பிணி, கல்வியின்மை ஆகியவற்றை ஒழிக்கவும் மனித உரிமைகள், சுதந்திரங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவிக்கவும் கூட்டாக முயற்சி செய்தல்.
4. இந்தக் குறிக்கோள்களை எய்துவதில் உலக நாடுகளுக்கு உதவும் பொருட்டு ஒரு பொது அரங்கமாகச் செயற்படுதல்.

மாநாடு நடைபெற்ற நாடு என்ற வகையில் சாசனத்தின் மூலப்பிரதியைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு ஐக்கிய அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, ஐ. நா. சாசனம் இப்பொழுது வொஷிங்டன் நகரிலுள்ள தேசிய சுவடிகள் கூடத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. அதன் சரியொத்த பிரதியொன்று நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமை யகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

### ஐக்கிய நாடுகள் ஆரம்பமானது எப்படி ?

இரண்டாவது உலகப் போர் (1939-1945) நடைபெற்ற துன்பகரமான நாட்களிலேயே ஐக்கிய நாடுகள் பற்றிய எண்ணம் கருக்கொண்டது. அப்பொழுது இலட்சக்கணக்கான மக்கள் மடிந்துகொண்டிருந்தனர். இன்னும் பெருந் தொகையான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். நகரங்கள் அழிந்துகொண்டிருந்தன. இந்த நிலைமையிலேயே போரை நிறுத்தும் நோக்கத்துடன் உலகத் தலைவர்கள் சிலர் ஒன்று கூடினர். சமாதானத்தை நிலை நாட்டவும் எதிர்காலத்தில் இத்தகைய யுத்தங்கள் ஏற்படுவதைத் தடுக்கவும் ஒரு வழிமுறை அவசியம் என்று அவர்கள் கருதினர். சகல நாடுகளும் ஓர் உலக அமைப்பின் ஊடாகச் செயற்படுவதன் மூலமே இது சாத்தியமாகும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். இதன் பயனாக உருவான அமைப்பே ஐக்கிய நாடுகள் தாபனமாகும்.

---

ஐக்கிய நாடுகளுக்கு வழிகோலிய பாதை : காலவரிசைப் பட்டியல் : பக். 5-6 பார்க்கவும்.

---



நியூயோர்க் நகரில் ஐ. நா. தலைமையகக் கட்டடம்.

### "ஐக்கிய நாடுகள்" என்ற பெயர் எப்படி வந்தது ?

ஐக்கிய நாடுகள் என்ற பெயரை முன்மொழிந்தவர் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்லின் ரூஸ்வேல்ட் ஆவார். 1942 ஆம் ஆண்டு 26 நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாட்டுப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டபோதே இப்பெயர் முதன்முதலில் உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது. ஐ. நா. சாசனம் கைச்சாத்திடப்படுவதற்குச் சில வாரங்கள் முன்பாக ஜனாதிபதி ரூஸ்வேல்ட் காலமானார். அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவர் முன்மொழிந்த "ஐக்கிய நாடுகள்" என்ற பெயரையே ஏற்றுக்கொள்ள சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் பங்குபற்றிய சகல நாடுகளும் சம்மதித்தன.

### முதலாவது உலக அமைப்பு ஐக்கிய நாடுகளா ?

இல்லை. ஐக்கிய நாடுகளுக்கு முன்னர் பல சர்வதேச அமைப்புக்கள் உருவாகியிருந்தன. இவற்றிற்கு 1865 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம், 1864 ஆம் ஆண்டு உருவான அனைத்துலக தபால் ஒன்றியம் ஆகியவற்றை உதாரணமாகக் காட்டலாம்.

முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் 1919 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சங்கம் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. ஐக்கிய நாடுகளைப் போன்றே அதுவும் உலக சமாதானத்தை பேணுதல் என்ற பிரதான நோக்கத்தைக் கொண்டிருந்தது.

துரதிஷ்டவசமாக அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் சேரவில்லை. உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா ஒருபோதும் அங்கத்துவம் பெறவில்லை. அங்கத்துவம் பெற்ற ஏனைய நாடுகள் பின்னர் விலகிச் சென்றன. சில நாடுகள் எதுவித தீர்மானங்களையும் மேற்கொள்ளத் தவறியிருந்தன. படைப் பலத்தை பிரயோகிப்பது உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் எதுவித அதிகாரங்களும் இந்தச் சங்கத்திற்கு இருக்கவில்லை. அதன் தோல்வியே இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குக் காரணமான சண்டை வழிகளை தீவிரப்படுத்தியது. இந்தச் சங்கம் தோல்வியடைந்த போதிலும் முழு உலகிற்கான அமைப்பு பற்றி கனவுகள் அதிலிருந்தே தோற்றம் பெற்றதெனலாம். அதன் விளைவே ஐக்கிய நாடுகள்.

3-CM 005453

ஐ. நா. செயலகம் பற்றி மேலும் அறிய இன்டர்நெட்டில் ஐ. நா. வெப்சைட் நாடுங்கள் : www.un.org/aboutun

**ஐ. நா. தலைமையகம் யாருக்குச் சொந்தமானது ?**

ஐ. நா. தலைமையகத்தின் காணியும் கட்டடங்களும் ஒரு சர்வதேச வலயமாகும். அதாவது ஐக்கிய நாடுகள் அமைந்துள்ள இடம் அமெரிக்காவுக்கு மாத்திரமன்றி சகல ஐ. நா. அங்கத்துவ நாடுகளுக்கும் சொந்தமானது. ஐ. நா. தனக்கென ஒரு கொடியையும் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் கொண்டுள்ளது. சொந்தத்தில் தபால் அலுவலகம் ஒன்றை நடத்துவதுடன் முத்திரைகளையும் வெளியிடுகின்றது. இம்முத்திரைகளை ஐ. நா. தலைமையகத்திலிருந்தும் வியன்னா, ஜெனீவா ஆகிய இடங்களிலுள்ள ஐ. நா. அலுவலகங்களில் இருந்தும் மட்டுமே பயன்படுத்த முடியும்.

**ஐக்கிய நாடுகளின் அமைப்பு முறை யாது ?**

ஐக்கிய நாடுகளின் பணி ஆறு பிரதான உறுப் பாண்மைகள் மூலம் உலகெங்கும் மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன :

* பொதுச் சபை
* பாதுகாப்புச் சபை
* பொருளாதார சமூகநலச் சபை
* நம்பிக்கைப் பொறுப்புச் சபை
* சர்வதேச நீதிமன்றம்
* செயலகம்

நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய ஐந்து பிரதான உறுப் பாண்மைகளும் நியுயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமை யகத்திலிருந்தே இயங்கி வருகின்றன.

ஐக்கிய நாடுகளுடன் தொடர்புடைய வேறு 16 அமைப் புக்களும் உள்ளன. அவை விசேட முகவராண்மைகள் எனப்படும். அவை சுகாதாரம், விவசாயம், தொலைத் தொடர்பு, வானிலை போன்ற பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றன. இவற்றைவிட, குறிப்பிட்ட துறைகளில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட 35 நிகழ்ச்சித் திட்டங்கள், நிதியங்கள், விசேட நிறுவனங்கள் என்பனவும் உள்ளன. இவை யாவும் இணைந்த பெருந்தொகுதியே ஐக்கிய நாடுகள் தாபனமாகும்.

**ஐக்கிய நாடுகளுக்கு வழிகோலிய பாதை : காலவரிசைப் பட்டியல்**

1939 செப்டெம்பர் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கிய சில வாரங்களில் வோர்ஸோ (போலந்து) இப்படித்தான் காட்சியளித்தது. யுத்தத்தினால் ஐரோப்பாவின் பெரும்பகுதி சின்னாபின்னமாகியது.



1941 ஓகஸ்ட் 14 ஆம் திகதி ஜனாதிபதி ரூஸ்வேல்டும் பிரதம மந்திரி சேர்ச்சிலும் அத்தி லாந்திக் சமுத்திரத்தில் தரித்து நின்ற போர்க்கப்பல் ஒன்றில் சந்தித்து உலக சமாதானத் திற்கான திட்டத்தை உள்ள டக்கிய அத்திலாந்திக் சாச னத்தை அறிவித்தனர்.



1942 ஜனவரி 1 ஆம் திகதி 26 நாடுகளின் பிரதிநிதிகள் வொஷிங்டனில் சந்தித்து ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர்.

1943 ஒக்டோபர் 30 ஆம் திகதி சீனா, சோவியத் யூனியன், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள் மொஸ்கோவில் கூடி, போர் முடிவுற்றதும் சமாதா னத்தைப் பேணுவதற்கான அமைப்பு ஒன்றை ஏற்படுத்த உடன்பட்டனர். இவ்வுடன் படிக்கை மொஸ்கோ பிரகடனம் எனப்பட்டது.

1944 கோடை மற்றும் இலையுதிர் காலங்களில் சீனா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றின் தலைவர்கள் வொஷிங்டன், டம்பார்டன் ஒக்ஸ் பகுதியில் சந்தித்து உத்தேச ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்கள், கோட்பாடுகள் சம்பந்தமாக இணக்கத்திற்கு வந்தனர்.

1945 பெப்ரவரி 11 ஆம் திகதி ஜனாதிபதி ருஸ்வேல்ட், பிரதம மந்திரி சேர்ச்சில், பிரதமர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் சோவியத் நகரான யால்டாவில் கூடி, ஐக்கிய நாடுகள் அமைப்பை ஏற்படுத்துவதற்கான தமது தீர்மானத்தை அறிவித்தனர். பாதுகாப்புச் சபைக்கான வாக்களிப்பு முறை பற்றியும் அங்கு இணக்கம் காணப்பட்டது.



1945 ஜூன் 26 ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் பங்கு பற்றிய 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சாசனத்தை ஏகமனதாக அங்கீகரித்தனர்.

1945 ஒக்டோபர் 24 ஆம் திகதி பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் (சீனா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சோவியத் யூனியன்) உட்பட பெரும்பான்மையான நாடுகள் ஐ. நா. சாசனத்தில் கைச்சாத்திட்டு அதனை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த பின்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பு உதயமானது. இதன் காரணமாகவே, ஒக்டோபர் 24 ஆம் திகதி வருடாவருடம் ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

மேலும் அறிய : www.un.org/aboutun; www.un.org/av (நிழற்படங்களுக்கு)




## ஐக்கிய நாடுகளுக்கு எவ்வாறு நிதி கிடைக்கிறது ?

ஐக்கிய நாடுகளின் 191 அங்கத்துவ நாடுகளும் ஐக்கிய நாடுகள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் பணம் வழங்குகின்றன. அதற்கு வேறு வருவாய் வழிகள் கிடையாது. ஐக்கிய நாடுகளின் வரவு செலவுகள் இரு வகையானவை :

* நியூயோர்க் தலைமையகம் மற்றும் உலகெங்கிலும் உள்ள ஐ. நா. காரியாலயங்கள் ஆகிய வற்றின் செயற்பாடுகள் நிலையான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடங்கும்.

* ஆங்காங்கே உலகில் நெருக்கடிகள் இடம்பெறும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அமைதி காப்பதற்கான வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் இரண்டு வரவு செலவுத் திட்டங்களுக்கும் பணம் செலுத்துவது கட்டாயமானது. அனைத்து அங்கத்துவ நாடுகளும் தாம் உடன்பட்ட மதிப்பீட்டு அளவுகளுக்கு அமைய கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றன. இந்த அளவு ஒரு நாட்டின் பணம் செலுத்தக்கூடிய ஆற்றல், தேசிய வருமானம், சனத்தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2004, 2005 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட தொகை 3.16 பில்லியன் டொலர்களாகும். அவை அங்கத்துவ நாடுகள் மத்தியில் பின்வருமாறு பகிர்ந்து கொள்ளப்பட்டன :

| | | | |
|---|---|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | 22% | 2. ஜப்பான் | 19.46% |
| 3. ஜெர்மனி | 8.66% | 4. பிரான்ஸ் | 6.03% |
| 5. இத்தாலி | 4.89% | 6. ஐக்கிய இராச்சியம் | 6.13% |
| 7. கனடா | 2.81% | 8. ஸ்பெயின் | 2.52% |
| 9. நெதர்லாந்து | 1.69% | 10. ரஷ்ய சம்மேளனம் | 1.1% |

இவை ஐக்கிய நாடுகள் வரவு செலவுத் திட்டத்தில் 75% சதவீதத் தொகைக்கு பொறுப்பானவை.

## சமீப நோக்கு

### ஒரு புதிய நாடு அல்லது அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவது எப்படி ?

ஒரு புதிய நாட்டை அல்லது அரசாங்கத்தை அங்கீகரிப்பதா இல்லையா என்று தீர்மானிக்கும் அதிகாரம் மற்றைய நாடுகளுக்கும் அரசாங்கங்களுக்கும் மட்டுமே உள்ளது. அங்கீகாரம் என்பதன் அர்த்தம் இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தச் சம்மதம் தெரிவிப்பதாகும். ஐக்கிய நாடுகள் என்பது ஒரு நாடோ அரசாங்கமோ அல்ல. எனவே, ஒரு நாட்டை அல்லது அரசாங்கத்தை அங்கீகரிக்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது. எனினும், சுதந்திர நாடுகளின் அமைப்பு என்ற வகையில் புதிய நாடுகளைத் தனது அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளவும் புதிய அரசாங்கங்களினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்ளவும் அதற்கு உரிமை உண்டு

ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி, இத்தாபனத்தில் அங்கம் வகிக்கும் உரிமையானது "ஐ. நா. சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகளை ஏற்றுக்கொள்கின்ற, அக்கடப்பாடுகளை நிறைவேற்ற முடியுமெனத் தாபனத்தினால் கருதப்படுகின்ற, சமாதானத்தை விரும்புகின்ற சகல நாடுகளுக்கும்" உண்டு. புதிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கமைய பொதுச்சபையினால் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. இதற்கான வழிமுறை பின்வருமாறு :


1. புதிய நாடு தனது விண்ணப்பத்தையும் ஐ. நா. சாசனத்தின் கடப்பாடுகளை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கும் ஒரு கடிதத்தையும் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கிறது.
2. பாதுகாப்புச் சபை அந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்கிறது. விண்ணப்பம் சிபாரிசு செய்யப்பட வேண்டுமாயின் பாதுகாப்புச் சபையிலுள்ள 15 நாடுகளில் சீனா, பிரான்ஸ், ரஷ்ய சம்மேளனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகள் உட்பட மொத்தம் 9 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.
3. பாதுகாப்புச் சபை சிபாரிசு செய்யும் பட்சத்தில், அச்சிபாரிசு பொதுச் சபையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். புதிய நாடொன்றை அனுமதிப்பதற்குப் பொதுச்சபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் அவசியமாகும்.
4. அனுமதிப்பதற்கான தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து புதிய நாட்டின் அங்கத்துவம் நடைமுறைக்கு வருகிறது.

பொதுச்சபையானது அதன் ஒவ்வொரு கூட்டத்தொடரின்போதும் அதில் பங்குபற்றுகின்ற அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த சகல பிரதிநிதிகளினதும் நியமனத் தகைமைகளைப் பரிசீலனை செய்கிறது. வழமையாக இப்பணி ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட தகைமைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், வேறு சந்தர்ப்பங்களிலும் பிரதிநிதிகளின் தகைமைகள் பரிசீலனைக்கு உள்ளாகலாம். இப்பரிசீலனைகளின்போது, ஒரு பிரதிநிதி உண்மையாகவே அதிகாரத்திலுள்ள ஓர் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவரா என்ற கேள்வி எழுப்பப்படலாம். இவ்விடயத்தில் கருத்து வேறுபாடுகள் நிலவுமாயின் பொதுச்சபையில் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். ஜனநாயகத் தேர்தல் போன்ற வழமையான வழிகளில் அரசாங்கம் மாறும்போது அந்த நாட்டுப் பிரதிநிதியின் தகைமைகள் சம்பந்தமாகப் பிரச்சினை எழுவதில்லை.

1945 இல் 51 நாடுகளுடன் ஆரம்பித்த ஐக்கிய நாடுகளில் தற்போது 191 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.



1945 இல் 51 அங்கத்தவர்கள்



2005 இல் 191 அங்கத்தவர்கள்

மேலும் அறிய :
www.un.org/aboutun,
www.un.org/members

## ஐக்கிய நாடுகளினால் பயன்படுத்தப்படும் மொழிகள் எவை ?

அரபு, சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானியம் என்பன ஐக்கிய நாடுகளில் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ மொழிகளாகும். ஐ. நா. செயலகத்தின் அலுவல்கள் ஆங்கில்ம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் நடத்தப்படுகின்றன. பிரதிநிதிகள் ஏதேனும் ஓர் உத்தியோகபூர்வ மொழியில் தனது உரையை நிகழ்த்தலாம். அவ்வுரையின் சமகால மொழிபெயர்ப்பு மற்றைய உத்தியோகபூர்வ மொழிகளில் வழங்கப்படும். பெரும்பாலான ஐ. நா. ஆவணங்கள் இந்த ஆறு உத்தியோகபூர்வ மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில், பிரதிநிதிகள் உத்தியோகபூர்வ மொழியல்லாத ஒரு மொழியில் பேச விரும்புவதுண்டு. அவ்வேளைகளில் அவர்கள் தமது பேச்சின் சமகால மொழிபெயர்ப்பை அல்லது எழுத்துப் பிரதியை ஏதேனுமொரு உத்தியோகபூர்வ மொழியில் வழங்க வேண்டும்.

**ஆரம்பத்தில் ஆங்கிலமும் பிரெஞ்சும் மட்டுமே** ஐ. நா. வில் அலுவல் மொழிகளாக இருந்தன. பின்னர், பொதுச்சபையிலும் பொருளாதார-சமூகச் சபையிலும் அரபு, சீனம், ரஷ்யன், ஸ்பானியம் என்பனவும் அலுவல் மொழிகளாக சேர்த்துக்கொள்ளப்பட்டன. பாதுகாப்புச் சபையில் ஆங்கிலம், பிரெஞ்சு, சீனம், ரஷ்யன், ஸ்பானியம் என்பனவே அலுவல் மொழிகளாகும்.



இதுதான் ஐக்கிய நாடு களின் கொடி. இது நீலநிறப் பின்னணியையும் அதன் நடுவே வெள்ளைநிற இலச்சினையையும் கொண்டுள்ளது. இலச்சினையில் உலக சமாதானத்தைக் குறிக்கும் வகையில் ஓர் உலகப் படமும் அதனைச் சூழ்ந்துள்ள ஒலிவ் கிளைகளும் காணப்படுகின்றன. ஐ. நா. கொடியைச் செய்யும்போது இலச்சினையானது சரிநடுவிலும் கொடியின் உயரத்தில் அரைவாசி அளவுடையதாகவும் அமைவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## 2 ஐ. நா. குடும்பம்
### ஒவ்வொருவரும் செய்வது என்ன

உலகின் அபிவிருத்தி குன்றிய நாடுகளில் வாழும் அரைவாசிக்கு மேற்பட்ட மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. அந்நாடுகளில் 18,650 பேருக்கு ஒரு வைத்தியர்தான் உள்ளார். பிரசவ வேளையில் ஏற்படும் சிக்கல்களினால் மரணமடையும் சாத்தியம் ஒரு மேற்கு ஐரோப்பிய நாட்டுப் பெண்ணைப் பார்க்கிலும் ஓர் ஆபிரிக்கப் பெண்ணுக்கு 180 மடங்கு அதிகமாக உள்ளது. சாதாரணமாக ஒரு ஜப்பானியர் 79.5 வருடங்கள் வரை வாழ்கிறார். ஆனால், சியரா லியோனில் ஒருவரின் சராசரி ஆயுட்காலம் 39 வருடங்கள் மட்டுமே. உலகில் ஆண் தொழிலாளிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் முக்கால்வாசிக்கும் குறைவாகவே பெண் தொழிலாளிகளுக்கு வழங்கப்படுகிறது. வாக்காளர்களில் அரைப்பங்கினர் பெண்களாக இருந்த போதிலும் உலகிலுள்ள பாராளுமன்றங்களில் அவர்களுக்கு 13% ஆசனங்களே உள்ளன. வளர்முக நாடுகளில் ஒருவர் இன்டர்நெட்டைப் பயன்படுத்துகிறபோது கைத்தொழில் நாடுகளில் 149 பேர் அதனைப் பயன்படுத்துகின்றனர். அவுஸ்திரேலியாவில் கிட்டத்தட்ட ஐந்து பேரில் ஒருவர் கொம்பியூட்டர் வைத்திருக்கிறார். ஆனால், இந்தியாவிலும் சூரினாமிலும் ஆயிரத்தில் ஒருவரிடமே கொம்பியூட்டர் உள்ளது. குடும்பச் செலவுகள் பெண்ணின் பொறுப்பில் இருக்கும்போது உணவுக்கான செலவு 9% அதிகரிக்கிறது என்பதையும் மதுபானத்திற்கான செலவு 99% வீழ்ச்சியடைகிறது என்பதையும் ஓர் ஆய்வு எடுத்துக்காட்டியது.

# 2 ஐ. நா. குடும்பம்

## ஒவ்வொருவரும் செய்வது என்ன ?

**ஐ. நா. உறுப்பாண்மைகள் ஒவ்வொன்றினதும் பிரதான பணிகள் யாவை ?**

ஐ. நா. சாசனத்தின்படி, ஐக்கிய நாடுகள் தாபனம் ஆறு பிரதான உறுப்பாண்மைகளைக் கொண்டுள்ளது. அவற்றின் அமைப்புக்களும் பணிகளும் இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன :

பொதுச்சபை : பொதுச்சபையே ஐக்கிய நாடுகளின் நடுநாயகமான உறுப்பாண்மையாகும். இங்கு எந்தவொரு நாடும் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்க முடியும். ஐக்கிய நாடுகளின் சகல அங்கத்துவ நாடுகளும் இச்சபையில் இடம்பெறுகின்றன. நாட்டின் அளவோ செல்வ நிலையோ கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் ஒவ்வொரு நாட்டிற்கும் இங்கு ஒரு வாக்கு உண்டு. முக்கிய விடயங்கள் யாவற்றிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலமே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. ஒரு நாட்டிற்கு ஒரு வாக்கு மட்டுமே இருந்தபோதிலும் வழமையாகப் பல உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்றே ஒரு நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இக்குழுவுக்குத் தூதுவர் ஒருவர் தலைமை தாங்குவது வழக்கம்.

பொதுச்சபையின் வழமையான கூட்டத் தொடர் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதத்தில் தொடங்கி வருட இறுதி வரை நடைபெறும். பாதுகாப்புச் சபை அல்லது பெரும்பான்மையான அங்கத்தவர்களின் ஒப்புதலுடன் தனியொரு அங்கத்துவ நாடு விடுக்கும் வேண்டுதலுக்கமைய பொதுச்சபையின் விசேட கூட்டங்களும் நடத்தப்படலாம். பொதுச்சபை ஒவ்வொரு வருடமும் ஒரு தலைவரைத் தெரிவுசெய்யும். அவரே சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார்.



பொதுச்சபை : 191 நாடுகளின் பிரதிநிதிகளும் கூடும் சபாமண்டபம். 1952 ஒக்டோபர் 14 இல் ஏழாவது கூட்டத் தொடருக்காகவே சபை இங்கு முதன்முறையாகக் கூடியது.

**பணிகள்**

* பாதுகாப்புச் சபையின் பரிசீலனையிலுள்ள விடயங்கள் தவிர்ந்த மற்றெந்த விடயம் தொடர்பாகவும் ஆராய்ந்து சிபாரிசுகளைத் தெரிவித்தல்.
* இராணுவ மோதல்கள் மற்றும் ஆயுதப்போட்டி தொடர்பான பிரச்சினைகளை ஆராய்தல்.
* சிறுவர், இளைஞர் மற்றும் பெண்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராய்தல்.
* நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்தல்.
* ஐக்கிய நாடுகளை நடத்துவதற்கு ஒவ்வொரு அங்கத்துவ நாடும் எவ்வளவு நிதி வழங்க வேண்டும் என்பதையும் இந்த நிதி எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்பதையும் தீர்மானித்தல்.

வாக்களிப்பு

பொதுச்சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் யாவும் அங்கத்துவ நாடுகளின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் சிபாரிகள் மட்டுமே. எனினும், பொதுச்சபையானது உலகிலுள்ள ஏறத்தாழ எல்லா நாடுகளின் குரலையும் பொது அபிப்பிராயத்தையும் பிரதிபலிப்பதால் இந்தச் சிபாரிசுகளுக்குப் பெருமதிப்பு உண்டு.

கூட்டங்கள்

ஒவ்வொரு வழமையான கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் பொதுச்சபையானது ஒரு பொது விவாதத்தை நடத்துகிறது. நாடுகள் மற்றும் அரசாங்கங்களின் தலைவர்கள் அங்கு உரை நிகழ்த்துவது வழக்கம். 1995 இல் ஐ. நா. அதன் 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது சகல அங்கத்துவ நாடுகளின் தலைவர்களும் நியூயோர்க்கிலுள்ள தலைமையகத்தில் கூடினார்கள்.

பிரதான குழுக்கள்

பொது விவாதத்தின் பின்னர், பொதுச்சபையின் பெரும்பாலான கலந்துரையாடல்கள் அதன் ஆறு பிரதான குழுக்களிலேயே இடம்பெறுகின்றன :

* முதலாம் குழு (ஆயுத பரிகரணமும், சர்வதேச பாதுகாப்பும்)
* இரண்டாம் குழு (பொருளாதாரமும் நிதியும்)
* மூன்றாம் குழு (சமூகம், மனிதாபிமானம், கலாசாரம்)
* நான்காம் குழு (விசேட அரசியலும், குடியேற்ற ஆட்சி நீக்கமும்)
* ஐந்தாம் குழு (நிர்வாகமும், வரவு-செலவுத் திட்டமும்)
* ஆறாம் குழு (சட்டத்துறை)

பொதுச்சபை மேற்கொண்ட சில நடவடிக்கைகள் :

* 1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஆபிரிக்க புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான திட்டம் (1986-1990)-ஒட்டுமொத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு முறைக்கு வழங்கப்படும் 40 சதவீதமான தொகை ஆபிரிக்காவுக்கு கிடைக்கிறது.
* 1989 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டது.
* சமூக அபிவிருத்தி தொடர்பான உலக தலைவர்களின் மாநாடு-1995, இந்த மாநாட்டில் சமூக அபிவிருத்திக்கான திட்டம் நிறைவேற்றப்பட்டது.
* மிதிவெடிகளையும் கண்ணிவெடிகளையும் பயன்படுத்துவது, களஞ்சியப்படுத்தி வைப்பது, தயாரிப்பது, மாற்றாருக்கு விநியோகிப்பது போன்ற செயல்களைத் தடைசெய்வதும், அவற்றை அழித்தொழிப்பதுமான உடன்படிக்கை, 1997 ஆம் ஆண்டில் ஒட்டாவா நகரில் நிறைவேற்றப்பட்டது. 2003 ஆம் ஆண்டு டிசம்பர் அளவில் 134 நாடுகள் அதில் கைச்சாத்திட்டிருந்தன.
* நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பான உலகத் தலைவர்களின் மாநாடு-2002 ஆம் ஆண்டு ஜொஹன்னஸ்பேர்க்கில் நடந்த மாநாட்டில் அங்கத்துவ நாடுகள் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் பற்றி இணங்கியிருந்தன.

மேலதிக விபரங்கள் : www.un.org/ga என்னும் இணையத் தளத்தில்




பொதுச்சபையின் ஒவ்வொரு நாடுகளுக்கும் ஒவ்வொரு வாக்கு கிடைக்கிறது. இந்தக் கோட்பாடு சிறியவை, பெரியவை என்ற பேதமில்லாமல் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது. சீனாவின் சனத்தொகை 100 கோடியைத் தாண்டுகிறது. அதற்குக் கிடைப்பது ஒரு வாக்காகும். ஐக்கிய நாடுகள் சபையின் மிகச்சிறிய அங்கத்துவ நாடான பாலவ் இராச்சியத்தின் சனத்தொகை 17,000. அதுவும் ஒரு வாக்கையே பெறுகிறது.

பாதுகாப்புச் சபை : பாதுகாப்புச் சபையே உலக சமாதானத்தின் பிரதான பாதுகாவலனாக விளங்குகிறது. பொதுச்சபையானது எந்தவொரு உலகப் பிரச்சினை பற்றியும் ஆராயும் உரிமையைக் கொண்டிருக்கும் அதேவேளையில் பாதுகாப்புச் சபையானது சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களையே கவனிக்கிறது. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் சகல ஐ. நா. அங்கத்துவ நாடுகளும் இணங்கியுள்ளன.



பாதுகாப்புச் சபை : சபாமண்டபத்தை நோர்வே அன்பளிப்புச் செய்தது. வடிவமைத்தவர் ஆர்ன்ஸ்டீன் ஆர்னி போர்க் (நோர்வே). நோர்வே கலைஞர் பேர் குரோக் வரைந்த சுவரோவியம் கிழக்குப்புறச் சுவரில் காணப்படுகிறது. சமாதானத்திற்கும் தனிமனித சுதந்திரத்திற்குமான நம்பிக்கையை இது சித்திரிக்கிறது.

### அங்கத்துவம்

பாதுகாப்புச் சபையில் பதினைந்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவற்றுள் சீனா, பிரான்ஸ், ரஷ்ய சம்மேளனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய ஐந்தும் நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும். ஏனைய பத்து அங்கத்துவ நாடுகளும் இரண்டு வருடப் பதவிக்காலத்திற்கென புவியியல் ரீதியான பிரதிநிதித்துவ அடிப்படையில் பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்படுகின்றன.

### பணிகள்

* சர்வதேச மோதல்களுக்கு வழி கோலக் கூடிய ஏதேனும் பிணக்கை அல்லது பிரச்சினையை விசாரித்தல்.

* தீர்வுக்கான வழிகளையும் நிபந்தனை களையும் சிபாரிசு செய்தல்.

* ஏதேனும் அச்சுறுத்தலுக்கு அல்லது ஆக்கிரமிப்புக்கு எதிரான நடவடிக்கைளைச் சிபாரிசு செய்தல்.

* செயலாளர் நாயகத்தின் நியமனத்தைப் பொதுச் சபைக்குச் சிபாரிசு செய்தல்.

### கூட்டங்கள்

பாதுகாப்புச் சபையானது பொதுச்சபை நடத்துவதைப் போன்ற கிரமமான கூட்டங்களை நடத்துவதில்லை. எந்த வேளையிலும் குறுகியகால முன்னறிவித்தலில் சபை கூட்டப்படலாம். ஐ. நா. வில் அங்கம் வகிக்கின்ற அல்லது அங்கம் வகிக்காத எந்தவொரு நாடோ அல்லது செயலாளர் நாயகமோ ஏதேனும் ஒரு பிணக்கை அல்லது சமாதானத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலைப் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும்.

சபையின் தலைமைப் பதவியானது மாதாந்த அடிப்படையில் அங்கத்துவ நாடுகளினால் மாறிமாறி வகிக்கப்படுகிறது. நாட்டுப் பெயர்களின் ஆங்கில அரிச்சுவட்டு ஒழுங்கில் இந்தப் பதவி மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

4-CM 005453

வாக்களிப்பு

பாதுகாப்புச் சபையின் வாக்களிப்பு முறை பொதுச்சபையின் வாக்களிப்பு முறையிலிருந்து வேறுபட்டது. பாதுகாப்புச் சபையில் முக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்குக் குறைந்தபட்சம் ஒன்பது நாடுகள் "ஆம்" என்று வாக்களிக்க வேண்டும். எனினும், ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளில் ஏதேனும் ஒன்று "இல்லை" என்று வாக்களித்தால் அத்தீர்மானம் "வீட்டோ" செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.

---

மேலும் அறிய : www.un.org/overview/organs/sc.html

---

**பாதுகாப்புச் சபை சமீப காலத்தில் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் :**

* 1948 தொடக்கம் இன்று வரையான அமைதி காக்கும் பணிகள்- 1948 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 56 அமைதி காக்கும் இயக்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 2005 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையில் சேவையில் இருந்த இயக்கங்களின் எண்ணிக்கை 16.

* ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்புக்கு எதிரான நடவடிக்கைகள்- 1990 நெருக்கடி தொடர்பான தமது யோசனைகளை கைவிடாமல் செயற்படுத்துவதற்கும், பிராந்தியத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் மீள நிலைநாட்டுவதற்கும் "தேவையான அனைத்து நடவடிக்கைகளையும்" மேற்கொள்ள வழிவகுப்பதற்கு குவைத்துடன் ஒத்துழைத்து நடந்துகொள்ள அங்கத்துவ நாடுகளுக்கு சபை அனுமதி வழங்கியது.

* ஈராக்கின் அணுவாயுத திட்டங்களை சோதிப்பதற்காக நிபந்தனைகள் மற்றும் எல்லைகள் இல்லாத வசதிகளை தாமதமின்றி பெற்றுக்கொடுக்க வழிவகுக்குமாறு வலியுறுத்தும் 1441 இலக்க தீர்மானத்தை நிறைவேற்றியது.

* சர்வதேச சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக மாறியதால் முன்னைய யுகோஸ்லாவியா, லிபியா, ஹசினி, லைபீரியா, சோமாலியா, சியரா-லியோன் போன்ற பல நாடுகளுக்கு எதிராக தடைகளை விதித்தது.

* ஹைட்டியில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு இடைக்கால பல்தேசிய படையொன்றை அனுப்பியது.

## சமீப நோக்கு

**வீட்டோ உரிமை ஐந்து பிரதான வல்லரசுகளுக்கு மட்டுமே இருப்பது நியாயமானதா ?**

ஐக்கிய நாடுகளை உருவாக்குவதில் உலகின் ஐந்து பிரதான வல்லரசுகள் முக்கிய பங்கினை வகித்தன. இரண்டாவது உலகப் போரின் முடிவுக்கும் அந்நாடுகளே வழிகோலின. சீனா, பிரான்ஸ், ரஷ்ய சம்மேளனம் (முன்பு சோவியத் யூனியன்), ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய இந்த ஐந்து நாடுகளும் சர்வதேச சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணுவதில் தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகிக்க வேண்டுமென ஐ. நா. சாசனத்தை வரைந்தவர்கள் எண்ணினார்கள். குறிப்பாக, போர்-சமாதானம் தொடர்பான விடயங்களில் இந்த ஐந்து வல்லரசுகளினதும் இணக்கமான செயற்பாடு சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்குச் சிறந்த வழியாகுமென உணரப்பட்டது. ஆகவே, வழமையான நடைமுறை விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களில் ஏதேனும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படும்போது இந்த "ஐம்பெரும்" நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு "எதிர்மறை வாக்கு" அளிக்குமாயின் பாதுகாப்புச் சபையினால் அத்தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது. நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த விசேட தடுப்பு அதிகாரமே "வீட்டோ உரிமை" என்று அழைக்கப்படுகிறது.




நிகழ்ச்சிநிரலை அங்கீகரித்தல், சபையின் விவாதங்களில் பங்குபற்ற வருமாறு அங்கத்தவ நாடுகளுக்கு அழைப்பு விடுத்தல், நடைமுறை விதிகளை அங்கீகரித்தல் போன்ற வழமையான காரியங்களில் தீர்மானம் எடுப்பதற்குப் பாதுகாப்புச் சபையின் 15 அங்கத்துவ நாடுகளில் ஏதேனும் 9 நாடுகள் "ஆம்" என்று வாக்களித்தால் போதுமானது. இவ்விடயங்களில் நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு வீட்டோ உரிமை கிடையாது.

பாதுகாப்புச் சபை சீர்திருத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட வேண்டுமெனப் பல நாடுகள் அண்மைக்காலமாகக் கோரி வருகின்றன. எனினும், இது எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதில் இன்னும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. வீட்டோ உரிமையை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படுவது சாத்தியமில்லை என்று சில அங்கத்துவ நாடுகள் கருதுகின்றன. உலக சமாதானத்தை அச்சுறுத்தும் விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது நடைமுறை ஒழுங்குகள் மூலம் இந்த உரிமை மட்டுப்படுத்தப்பட வேண்டுமென வேறு சில நாடுகள் விரும்புகின்றன. எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவருவதாக இருந்தாலும் அதற்கு முன்னர் ஐ. நா. சாசனம் மாற்றியெழுதப்பட வேண்டும்.

**வீட்டோக்கள் 1945-1999 :**
**யார், எத்தனை தடவை ?**

| | |
|---|---|
| சீனா | 4 |
| பிரான்ஸ் | 18 |
| ரஷ்யா (முன்பு சோவியத் யூனியன்) | 119 |
| ஐக்கிய இராச்சியம் | 32 |
| ஐக்கிய அமெரிக்கா | 72 |

1999 செப். 1 இல் இருந்தவாறு

பாதுகாப்புச் சபையின் அங்கத்துவத்தைப் விரிவுபடுத்துவதற்கான யோசனைகளைப் பொதுச்சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு செயற்குழு 1994 முதல் ஆராய்ந்து வருகிறது. புதிய நிரந்தர அங்கத்துவ நாடுகளைத் தெரிவுசெய்யும்போது ஆபிரிக்காவின் சார்பில் ஒரு நாடும் ஆசியாவின் சார்பில் ஒரு நாடும் லத்தீன் அமெரிக்காவின் சார்பில் ஒரு நாடும் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனச் சில நாடுகள் யோசனை தெரிவித்துள்ளன. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் 2005 மார்ச் மாதம் வெளியிட்ட "In larger freedom" என்ற அறிக்கையிலும் சமகால உலகின் யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு பாதுகாப்புச்சபை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

பொருளாதார-சமூகநலச் சபை : "இக்கோசொக்" என்று சுருக்கமாக அழைக்கப்படும் இச்சபையே வர்த்தகம், போக்குவரத்து, கைத்தொழில்மயமாக்கல், பொருளாதார அபிவிருத்தி என்பவை தொடர்பான பொருளாதாரப் பிரச்சினைகளும் சனத்தொகை, சிறுவர், வீடமைப்பு, மகளிர் உரிமைகள், இனப்பாகுபாடு, போதைப்பொருள், பாரிய குற்றச்செயல்கள், சமூகநலம், இளைஞர், மனித சுற்றாடல், உணவு என்பவை தொடர்பான சமூகப் பிரச்சினைகளும் ஆராயப்படுகின்ற பிரதான ஐ. நா. களமாக விளங்குகிறது. கல்வி மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் உலகெங்கிலும் மனித உரிமைகள், சுதந்திரங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவிப்பது குறித்தும் அங்கத்துவ நாடுகள் மத்தியில் பொதுவான உடன்பாட்டை ஏற்படுத்த இச்சபை உதவுகின்றது.



பொருளாதார-சமூகநலச் சபை : சுவீடன் அன்பளிப்புச் செய்த இச்சபா மண்டபத்தை வடிவமைத்தவர் சுவீடனைச் சேர்ந்த ஸ்வென் மார்க்கெலியஸ்.

பணிகள் :

* சர்வதேச பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை ஆராய்வதற்கான முக்கிய அரங்கமாகச் செயற்படல்.
* உயர்ந்த வாழ்க்கைத்தரம், யாவருக்கும் தொழில் வசதி, பொருளாதார-சமூக முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
* சர்வதேச பொருளாதார, சமூக, சுகாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் கலாசார, கல்வித் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல்.
* மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவித்தல்.

அங்கத்துவம்

இக்கோசொக்கில் 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்நாடுகள் அனைத்தும் மூன்று வருடப் பதவிக் காலத்திற்கெனப் பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்படுகின்றன. இக்கோசொக் வழமையாக வருடம் முழுவதிலும் கூட்டங்களை நடத்துகிறது. பிரதான கூட்டத்தொடர் ஜூலையில் நடத்தப்படும். இச்சபையில் சாதாரண பெரும்பான்மை வாக்களிப்பின் மூலமே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

உப நிறுவனங்கள்

இக்கோசொக்கின் பணிகள் தனியொரு அமைப்பினால் மட்டும் கவனிக்க முடியாத அளவுக்குப் பரந்துபட்டவை என்பதால் அதற்கு உதவப் பல ஆணைக்குழுக்கள் உள்ளன. அவற்றுள் சில ஆணைக்குழுக்கள் செயற்பாட்டு ஆணைக்குழுக்கள் எனப்படும். குறிப்பிட்ட விடயங்களில் இக்கோசொக்கிற்கு ஆலோசனை அளிக்கும் அவை பின்வருமாறு :

* மனித உரிமைகள் ஆணைக்குழு, போதைப்பொருள் ஆணைக்குழு, சமூக அபிவிருத்தி ஆணைக்குழு, சனத்தொகைக்கும் அபிவிருத்திக்குமான ஆணைக்குழு, மகளிர் அந்தஸ்து பற்றிய ஆணைக்குழு, புள்ளிவிபர ஆணைக்குழு, குற்றத்தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி ஆணைக்குழு, நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஆணைக்குழு, விஞ்ஞான-தொழில்நுட்ப அபிவிருத்திக்கான ஆணைக்குழு.

ஏனையவை பிராந்திய ஆணைக்குழுக்கள் எனப்படும். வெவ்வேறு பிராந்தியங்களின் விசேட பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் அவை பின்வருமாறு :

* ஆபிரிக்க பொருளாதார ஆணைக்குழு (ECA), ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு (ECE), லத்தீன் அமெரிக்க-கரீபியன் பொருளாதார ஆணைக்குழு (ECLAC), ஆசிய-பசுபிக் பொருளாதார-சமூக ஆணைக்குழு (ESCAP), மேற்காசிய பொருளாதார-சமூக ஆணைக்குழு (ESCWA), இக்கோசொக் சபையானது செயற்பாட்டு மற்றும் பிராந்திய ஆணைக்குழுக்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. விசேட முகவராண்மைகள், ஐ. நா. நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றின் சேவைகளையும் அது பெற்றுக்கொள்கிறது. அநேகமான சந்தர்ப்பங்களில் விசேட வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவை இணைந்து பணியாற்றுவதுமுண்டு.

ஐ. நா. வில் 14 விசேட முகவராண்மைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தனக்கெனப் புறம்பான அங்கத்துவ அமைப்பையும் வரவு-செலவுத் திட்டத்தையும் தலைமை அலுவலகத்தையும் கொண்டுள்ள தனியமைப்பாகும். வளர்முக நாடுகளின் விசேட பிரச்சினைகளை ஆராய்ந்து குறிப்பிட்ட துறைகளில் ஆலோசனைகளை வழங்கி உதவிபுரியும் இம்முகவராண்மைகள் பின்வருமாறு :


* சர்வதேச தொழில் தாபனம் (ILO)
* ஐ. நா. உணவு, விவசாயத் தாபனம் (FAO)
* ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாசாரத் தாபனம் (UNESCO)
* உலக சுகாதாரத் தாபனம் (WHO)
* உலக வங்கி
* சர்வதேச நாணய நிதியம் (IMF)
* சர்வதேச சிவில் விமானத்துறைத் தாபனம் (ICAO)
* அனைத்துலகத் தபால் ஒன்றியம் (UPU)
* சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU)
* உலக வளிமண்டலவியல் தாபனம் (WMO)
* சர்வதேச கடற்றுறை தாபனம் (IMO)
* உலக புலமை சொத்துத் தாபனம் (WIPO)
* சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் (IFAD)
* ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தித் தாபனம் (UNIDO)

இவற்றைத் தவிர, வேறு இரண்டு தனியான முகவராண்மைகளும் உள்ளன. சர்வதேச அணுசக்தி முகவராண்மை (IAEA), உலக வர்த்தகத் தாபனம் (WTO) என்பனவே அவையாகும்.

குறிப்பிட்ட விசேட துறைகளில் பணியாற்றுவதற்காக சில ஐ. நா. நிகழ்ச்சித் திட்டங்களும் வேறு நிறுவனங்களும் பொதுச்சபையினால் உருவாக்கப்படுகின்றன. அவை பொருளாதார-சமூகநலச் சபையுடன் நெருங்கிய முறையில் தொடர்புகொண்டு செயற்படுகின்றன. பெரும்பாலும் அவற்றின் அறிக்கைகள் பொதுச்சபைக்கும் பொருளாதார-சமூகநலச் சபைக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் வருமாறு :

* ஐ. நா. சிறுவர் நிதியம் (UNICEF), அண்மிய கிழக்கிலுள்ள பலஸ்தீன அகதிகளுக்கான ஐ. நா. நிவாரண-வேலைகள் முகவராண்மை (UNRWA), அகதிகளுக்கான உயர் ஸ்தானிகரின் அலுவலகம் (UNHCR), உலக உணவுத் திட்டம் (WFP), பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்குமான ஐ. நா. நிலையம் (UNITAR), ஐ. நா. வர்த்தக-அபிவிருத்திப் பேரவை (UNCTAD), ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (UNDP), ஐ. நா. சனத்தொகை நிதியம் (UNFPA), ஐ. நா. சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP), ஐ. நா. பல்கலைக்கழகம் (UNU), மகளிர் மேம்பாட்டுக்கான சர்வதேச ஆராய்ச்சி-பயிற்சி நிலையம் (INSTRAW), மனித குடியிருப்புக்களுக்கான ஐ. நா. நிலையம் (UNCHS).

நம்பிக்கைப் பொறுப்புச் சபை : ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட வேளையிலே உலகின் பல பகுதிகளில் மக்கள் தமக்குச் சொந்தமான அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலையில் இருந்தனர். இவற்றுட் சில பகுதிகள் முதலாவது உலக யுத்தத்தின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சிப் பேராண்மைகளின் பொறுப்பில் விடப்பட்ட பிரதேசங்கள். மற்றையவை, இரண்டாவது உலக யுததத்தின் விளைவாக எதிரி நாடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பிரதேசங்கள். ஐக்கிய நாடுகள் ஆரம்பிக்கப்பட்டதும் இப்பிரதேசங்கள் யாவும் ஐ. நா. வின் விசேட பாதுகாப்பிற்குள் கொண்டுவரப்பட்டு, நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்கள் என்று அழைக்கப்பட்டன. இப்பிரதேசங்களில் வாழும் மக்களின் சமூக முன்னேற்றத்தைக் கவனிப்பதற்காக ஐ. நா. நம்பிக்கைப் பொறுப்புச் சபை அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில், இவ்வாறான பதினொரு பிரதேசங்கள் இருந்தன. இவற்றில் அநேகமானவை ஆபிரிக்காவிலும் பசுபிக் பிராந்தியத்திலுமே காணப்பட்டன.



நம்பிக்கைப் பொறுப்புச் சபை : சபாமண்டபத்தை ஃபின் யூல் (டென்மார்க்) என்பவர் வடிவமைத்தார். தளபாடங்களை டென்மார்க் வழங்கியது. கைகளை உயர்த்தி தூக்கிய நிலையிலான ஒரு பெண்ணின் 9 அடி உருவச் சிலை ஒரு பக்கச் சுவரோரமாகக் காணப்படுகிறது. இதனைத் தேக்குமரத்தில் செதுக்கியவர் டென்மார்க்கைச் சேர்ந்த ஹென்றிக் ஸ்டார்க்கி.

### அங்கத்துவம்

நம்பிக்கைப் பொறுப்புச் சபையில் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளான சீனா, பிரான்ஸ், ரஷ்ய சம்மேளனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்துவ நாட்டுக்கும் ஒரு வாக்கு உண்டு. சாதாரண பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

### கூட்டங்கள்


நம்பிக்கைப் பொறுப்புச் சபை வருடத்திற்கு ஒரு தடவை மே - ஜூன் காலத்தில் கூடுவது வழக்கம். நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவுள்ள நாட்டிடம் இருந்து கிடைக்கும் அறிக்கைகளைப் பரிசீலித்தல், சம்பந்தப்பட்ட பிரதேசம் சுதந்திரத்தை அல்லது சுயாட்சியைப் பெறுவதற்கு வழிகாட்டப்படுகின்றதா என்பதை சோதித்தல், பிரதேசத்தினால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்தல், பிரதேசத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பி எவ்வாறான உதவிகள் தேவைப்படுகின்றன என்பதை அறிதல் ஆகியன சபையின் பணிகளாகும். கடைசி நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசமான பாலாவு ஐக்கிய அமெரிக்காவின் நிர்வாகத்தில் இருந்தது. 1994 இல் இதுவும் சுயாட்சி உரிமையைப் பெற்றுக்கொண்டதால் சுமார் அரை நூற்றாண்டு காலமாக இயங்கி வந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. இனிமேல் தேவையேற்படும் பட்சத்தில் மாத்திரம் இச்சபை கூடும்.

நம்பிக்கைப் பொறுப்புச் சபையை கலைத்துவிட வேண்டுமென செயலாளர் நாயகம் கோபி அனான் 2005 மார்ச் மாதம் பொதுச்சபையில் சமர்ப்பித்த அறிக்கையில் யோசனை கூறியுள்ளார்.

### தகவல் ஏடு - குடியேற்ற ஆட்சி நீக்கம்

1945 இல் உலக மக்களில் அரைப்பங்கினர் பிறரின் கட்டுப்பாட்டில் உள்ள நாடுகளிலேயே வசித்தனர். குடியேற்ற நாடுகள் என்றழைக்கப்பட்ட இந்நாடுகள் பிரிட்டன், பிரான்ஸ், போர்த்துக்கல் போன்ற ஒருசில வலிமைமிக்க நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்தன. குடியேற்ற ஆட்சி நீக்கம் என்ற செயற்பாட்டின் மூலம் இவற்றில் அனேகமான நாடுகள் சுயாட்சி பெற்றுக்கொள்ள ஐக்கிய நாடுகள் உதவியது. சகல குடியேற்ற நாடுகளுக்கும், மக்களுக்கும் விரைவாக சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் பிரகடனம் ஒன்றை பொதுச்சபை 1960 இல் நிறைவேற்றியது. அதற்கடுத்த வருடம் குடியேற்ற ஆட்சி நீக்கம் தொடர்பானதொரு விசேட குழு அமைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் குடியேற்ற ஆட்சி ஒழிப்பு முயற்சிகளின் பலனாக 80 க்கு மேற்பட்ட முன்னாள் குடியேற்ற ஆட்சி நாடுகள் இப்பொழுது ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன. தற்சமயம், 1.5 மில்லியன் மக்கள் மாத்திரமே பிறரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வசிக்கிறார்கள்.

**சர்வதேச நீதிமன்றம் :** சட்டத் தீர்ப்புக்களை வழங்கும் பிரதான ஐ. நா. உறுப்பாண்மை சர்வதேச நீதிமன்றமாகும். இந்த நீதிமன்றத்தில் நாடுகள் மட்டுமே வழக்குத் தாக்கல் செய்ய முடியும். தனிப்பட்டவர்கள் இங்கு வழக்காட முடியாது. ஒரு நாடு இந்த நீதிமன்றத்தின் விசாரணைக்கு இடமளிக்கச் சம்மதிக்கும்போது நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்பிற்குப் பணிந்து நடப்பதாகவும் வாக்களிக்க வேண்டும். ஐ. நா. வின் ஏனைய அமைப்புக்கள் இந்த நீதிமன்றத்திடம் ஆலோசனைக் கருத்துக்களைப் பெற முடியும்.



சர்வதேச நீதிமன்றம் : நெதர்லாந்து, ஹேக் நகரில் உள்ளது.

#### அமைப்பு முறை

நீதிமன்றம் நெதர்லாந்தின் ஹேக் நகரில் நிரந்தரமாக இயங்கி வருகிறது. பொதுச்சபை, பாதுகாப்புச் சபை ஆகியவற்றால் தெரிவுசெய்யப்பட்ட 15 நீதிபதிகள் அதில் அங்கம் வகிக்கின்றனர். ஒரு நாட்டிலிருந்து ஒன்றிற்கு மேற்பட்ட நீதிபதிகள் தெரிவுசெய்யப்பட முடியாது. தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஒன்பது நீதிபதிகள் அது குறித்து இணக்கத்திற்கு வரவேண்டும்.

#### சர்வதேச நீதிமன்றம் அண்மையில் வழங்கிய சில தீர்ப்புக்கள்

* 1994 இல் லிபியா-சாட் எல்லைப் பிணக்கில் தீர்ப்பு வழங்கியது.
* 1996 இல் ஈரானிய எண்ணெய் மேடைகள் அமெரிக்கப் போர் விமானங்களினால் அழிக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தின் நியாயாதிக்க வரம்பு பற்றி ஐக்கிய அமெரிக்கா முன்வைத்த ஆட்சேபனைகளை நிராகரித்தது.
* 1997 இல் தன்யூப் நதியில் அணைக்கட்டுத் தொகுதி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பான 1977 ஆம் ஆண்டின் உடன்படிக்கையை அமுல்செய்யும்படி ஹங்கேரியையும் ஸ்லோவாக் குடியரசையும் பணித்தது.
* பலஸ்தீன மண்ணை ஊடறுத்து இஸ்ரேல் அமைத்த வேலி சர்வதேச சட்டங்களுக்கு முரணானதென தீர்ப்பளித்தது.

**சில ஐ. நா.**
**விசேட முகவராண்மைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும்**

UNDP : ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமானது நிலைத்து நீடிக்கக் கூடிய அபிவிருத்திக்கான ஆற்றலைப் பெற்றுக்கொள்ள நாடுகளுக்கு உதவுகிறது. அது 132 நாட்டு அலுவலகங்களின் ஊடாக 174 வளர்முக நாடுகளிலும் பிரதேசங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகிறது.

மேலும் அறிய : www.undp.org

---

UNICEF : ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் என்பது சிறுவர்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் பாடுபடுகின்ற பிரதான ஐ. நா. அமைப்பாகும். உலகில் மிகப் பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்களின் நலனுக்காகவும் அது பாடுபடுகின்றது.

மேலும் அறிய :
www.unicef.org

---

UNEP : ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் சுற்றாடலைப் பாதுகாப்பதில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதுடன் தலைமைத்துவத்தையும் வழங்குகிறது. சுற்றாடல் கண்காணிப்பு, மதிப்பீடு, முன்னெச்சரிக்கை போன்ற நடவடிக்கைகளுக்கு அது உதவிபுரிகின்றது.

மேலும் அறிய : www.unep.org

---

UNFPA : ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியமானது குடும்பத் திட்டம், பாலியல் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகள் உட்பட இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரத் திட்டங்களுக்கு உதவுகிறது. துரித சனத்தொகை அதிகரிப்புடன் தொடர்புடைய பிரச்சினைகளிலும் அது கவனம் செலுத்துகிறது.

மேலும் அறிய : www.unfpa.org

---

WFP : உலக உணவுத் திட்டமானது மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்படும்போது உயிர்களைக் காப்பாற்றுவதற்காக உணவு உதவியைப் பயன்படுத்துகிறது. "வேலைக்காக உணவு" என்ற திட்டத்தின் மூலம் தனிப்பட்டவர்களும் சமூகங்களும் சுயமுயற்சியில் தங்கியிருக்கும் நிலையை அடையவும் அது உதவுகின்றது.

மேலும் அறிய : www.wfp.org

---

UNHCR : அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் அகதிகளுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு வழங்குவதுடன் அவர்கள் தாமாகவே தமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல உதவுவதன் மூலம் அல்லது வேறு நாடுகளில் அவர்களைக் குடியமர்த்துவதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகாண முயற்சி செய்கிறது.

மேலும் அறிய : www.unhcr.ch

---

ILO : சர்வதேச தொழில் தாபனம் அடிப்படை மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கும் தொழில் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்குமான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கின்றது.

மேலும் அறிய : www.ilo.org

---

FAO : உணவு விவசாயத் தாபனம் பட்டினியையும் மந்தபோஷாக்கையும் ஒழித்து, போஷாக்கு மட்டங்களை உயர்த்துவதற்குப் பாடுபடுகிறது. அங்கத்துவ நாடுகள் தமது விவசாயத் துறையைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்வதற்கும் அது உதவுகின்றது.

மேலும் அறிய : www.fao.org

---

UNESCO : ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசாரத் தாபனம் இன்றைய உலகின் முக்கிய விடயங்களையிட்டு அறிவூட்டும் ஒரு சிந்தனைக் களஞ்சியமாக விளங்குவதுடன் அறிவு மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த வழிகாட்டிகளையும் வகுக்கின்றது. கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், தொலைத்தொடர்பு ஆகியவற்றில் தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு சர்வதேச மத்திய நிலையமாகவும் அது செயற்படுகிறது.


மேலும் அறிய :
www.unesco.org

---

WHO : உலக சுகாதார தாபனம் சுகாதாரத் துறையில் சர்வதேச நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துகிறது. நோய்த் தடுப்புச் சம்பந்தமான ஆய்வுகளையும் அது ஒருங்கிணைத்து ஊக்குவிக்கிறது.

மேலும் அறிய : www.who.org

செயலகம் : செயலாளர் நாயகத்தின் தலைமையில் ஐக்கிய நாடுகளின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுவலர்களின் தொகுதியே செயலகமாகும். இன்னுமொரு வழியில் சொல்வதானால், ஐ. நா. வினால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள அனைவரும் செயலகத்தின் அங்கத்தவர்கள் ஆவர். செயலகம் நியூயோர்க்கில் அமைந்துள்ளது. அதன் பணிகள் உலகெங்குமுள்ள பிராந்திய அலுவலகங்களிலும் நடைபெறுகின்றன. ஏனைய ஐ. நா. உறுப்பாண்மைகளுக்கான சேவைகளை வழங்குவதும் அவற்றினால் முன்வைக்கப்படும் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை நிர்வகிப்பதும் செயலகத்தின் கடமைகளாகும்.



நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமையகம் : உலகின் சகல பகுதிகளையும் சேர்ந்த 4,500 க்கு அதிகமானோர் இங்கு பணிபுரிகின்றனர்.

#### பணிகள்

* அரசாங்கங்களின் பிரதிநிதிகள் உண்மை விபரங்களை ஆராய்ந்து தமது சிபாரிசுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் பின்னணித் தகவல்களைத் திரட்டித் தொகுத்தளித்தல்.
* ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களைச் செயற்படுத்த உதவுதல்.
* சர்வதேச மாநாடுகளை ஒழுங்குசெய்தல்.
* பேச்சுக்களையும் ஆவணங்களையும் ஐ. நா. வின் உத்தியோகபூர்வ மொழிகளில் மொழிபெயர்த்தல்.

#### அமைப்பு முறை

செயலாளர் நாயகமே ஐக்கிய நாடுகளின் பிரதான அதிகாரியாவார். அவருக்கு உதவியாக சர்வதேச சிவில் சேவையாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்யும் இராஜதந்திரிகள் போலல்லாது, சகல அங்கத்துவ நாடுகளுக்காகவும் பணியாற்றுகின்றனர். இவர்கள் அரசாங்கங்களிடமிருந்து அல்லாது செயலாளர் நாயகத்திடமிருந்தே உத்தரவுகளைப் பெறுகின்றனர்.

உலகெங்கும் ஐ. நா. வின் கூட்டுமொத்தமான அமைப்பில் அதாவது, நியூயோர்க்கிலுள்ள செயலகம், அதன் பிராந்திய அலுவலகங்கள், விசேட முகவராண்மைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் 50,000 க்கு மேற்பட்ட மக்கள் வேலைசெய்கின்றனர். இவர்களில் சுமார் 4,500 பேர் நியூயோர்க்கிலுள்ள தலைமையகத்தில் கடமையாற்றுகின்றனர்.

5-CM 005453

### ஐ. நா. செயலாளர் நாயகம் நியமிக்கப்படுவது எப்படி ? அவரது பணி யாது !

செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபையின் சிபாரிசுக்கு அமையப் பொதுச்சபையினால் ஐந்து வருட பதவிக்காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். ஐ. நா. உருவாக்கப்பட்டதிலிருந்து இதுவரை ஏழு பேர் மட்டுமே செயலாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

* ட்ரிக்வி லீ (நோர்வே) 1946-1952
* டாக் ஹமர்ஷோல்ட் (சுவீடன்) 1953-1961
* ஊ தாண்ட் (பர்மா, தற்போது மியன்மார்) 1961-1971
* குர்ட் வால்ட்ஹைம் (ஒஸ்திரியா) 1972-1981
* ஹாவியர் பெரஸ் டி குவெல்யா (பெரு) 1982-1991
* பூத்ரொஸ் பூத்ரொஸ் காலி (எகிப்து) 1992-1996
* கொபி அனான் (கானா) 1997 முதல் இன்றுவரை.



பிரதிச் செயலாளர் நாயகம் லூயிஸ் பிறெஷே : செயலாளர் நாயகம் கொபி அனானுடன் காணப் படும் இவரே ஐ. நா. வில் மிக வுயர்ந்த பதவி வகிக்கும் பெண் அதிகாரியாவார்.

எழுத்துமூல விதியெதுவும் இல்லாவிடினும், செயலாளர் நாயகம் பதவியானது வெவ்வேறு பிராந்தியங்களுக்குச் சுழற்சி முறையில் வழங்கப்படுவது இப்பொழுது மரபாகிவிட்டது. கடந்த 30 ஆண்டுகளை எடுத்துக்கொண்டால், பர்மா (ஆசியா) நாட்டைச் சேர்ந்த ஊ தான்டை அடுத்து ஒஸ்திரியா (மேற்கு ஐரோப்பா) நாட்டைச் சேர்ந்த குர்ட் வால்ட்ஹைமும் அதனைத் தொடர்ந்து பெரு (லத்தீன் அமெரிக்கா) நாட்டவரான ஹாவியர் பெரஸ் குவெல்யாவும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் இவ்விரண்டு பதவிக்காலங்கள் செயலாற்றினர். 1992 இல் ஆறாவது செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட எகிப்து (ஆபிரிக்கா) நாட்டவரான பூத்ரொஸ் பூத்ரொஸ்காலி ஒரு பதவிக்காலமே செயலாற்றினர். ஆகவே 1997 இல் மற்றுமொரு ஆபிரிக்க நாடான கானாவைச் சேர்ந்த கோபி அனான் நியமிக்கப்பட்டார்.

#### செயலாளர் நாயகம் ஆற்றும் சில பணிகள்

* உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடியவை என்று தாம் கருதும் பிரச்சினைகளைப் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருதல்.

* பொதுச்சபையினால் அல்லது ஏனைய ஐ. நா. உறுப்பாண்மைகளினால் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் எவையெனச் சிபாரிசு செய்தல்.

* அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான பிணக்குகளில் "மத்தியஸ்தர்" என்ற முறையில் செயற்படுதல்.

செயலாளர் நாயகம் என்பவர் தனது பதவி அந்தஸ்தையும் நடுநிலைப் போக்கையும் "வருமுன் காக்கும் இராஜதந்திர" நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் ஒருவராகவே பொதுமக்கள் பார்வையில் பிரபல்யம் பெறுகிறார். இங்கு "வருமுன் காக்கும் இராஜதந்திரம்" எனப்படுவது ஏதேனும் சர்வதேசப் பிரச்சினைகள் ஏற்படுவதை, மோசமடைவதை அல்லது பரவுவதைத் தடுப்பதற்காக அவர் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிக்கும். சில சமயங்களில், செயலாளர் நாயகத்தின் மத்தியஸ்தம் அல்லது செல்வாக்கின் பயனாக, ஏதேனும் பிரச்சினைகள் பொதுச்சபையின் அல்லது பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படாமலும் நேரடி மோதலாக உருவெடுக்காமலும் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்படுவதுமுண்டு.

செயலாளர் நாயகம் கொபி அனான் சமீபத்தில் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் :

* ஐக்கிய நாடுகளை மீள்-வலுப்படுத்தும் நோக்கில் மறுசீரமைப்பு யோசனைகளை வெளியிட்டமை-1997,

* மேற்கு சஹாரா, சைப்ரஸ், தஜிகிஸ்தான், சியரா-லியோன், அங்கோலா ஆகிய நாடுகளில் சமாதான முயற்சிகளுக்கு முன்னின்று புத்துயிரூட்டியமை.

* செலவினங்களைக் குறைத்து, நிர்வாக ரீதியிலான சேமிப்புக்களின் ஊடாக அபிவிருத்தி இலாபப் பங்கை உருவாக்கியமை.

* 2000 ஆம் ஆண்டில் மில்லேனிய அறிக்கையை உருவாக்கி, மில்லேனிய மாநாட்டை நடத்தியமை.

* அபிவிருத்தி, பாதுகாப்பு, மனித உரிமை மேம்பாடு மற்றும் ஐக்கிய நாடுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கூடிய யோசனைகள் அடங்கிய அறிக்கையை 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுச்சபையில் சமர்ப்பித்தமை.

## 3 சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஐ. நா. ஆற்றும் பணிகள்

1995 ஆம் ஆண்டில் உலக நாடுகள் பாதுகாப்புத் துறைக்காக ஒவ்வொரு நிமிடமும் 1.5 அமெரிக்க டொலர்களைச் செலவிட்டன. அதாவது, மொத்தச் செலவினம் சுமார் 800 பில்லியன் அமெரிக்க டொலர்கள். அனைவருக்கும் அடிப்படைச் சமூக சேவைகளை வழங்க அடுத்த பத்து வருடங்களுக்கு ஆண்டுதோறும் தேவைப்படுவது 40 பில்லியன் அமெரிக்க டொலர்கள். அதாவது, மொத்தம் 400 பில்லியன் அமெரிக்க டொலர்கள். 1995 இன் உலக இராணுவச் செலவுடன் ஒப்பிடுகையில் இது அரைவாசி மட்டுமே. 64 நாடுகளில் 110 மில்லியனுக்கு அதிகமான நிலக்கண்ணிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த தசாப்தத்தில் ஆயுத மோதல்களின் விளைவாக 2 மில்லியனுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உயிரிழந்தனர். உலகிலுள்ள அரசாங்கங்களில் அரைவாசியானவை தத்தமது நாட்டு மக்களின் உடல்நலத்தைப் பாதுகாப்பதற்குச் செலவிடுவதைப் பார்க்கிலும் கூடுதலான பணத்தை இராணுவத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செலவிடுகின்றன. முப்பது முன்னணிக் கைத்தொழில் நாடுகள் 22 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பாரம்பரிய ஆயுதங்களை 1995 இல் ஏற்றுமதி செய்தன. இது உலக மொத்தத்தில் 94% ஆகும். 1995 ஆம் ஆண்டில் குவைத் நாட்டின் இராணுவச் செலவினம் தலைக்கு 2,091 அமெரிக்க டொலர்களாகும். தென்னாபிரிக்காவில் இது 88 அமெரிக்க டொலர்களாக இருந்தது. மெக்ஸிக்கோவில் 30 அமெரிக்க டொலர்கள். வியட்நாமில் 12 அமெரிக்க டொலர்கள். கொஸ்டறீக்காவில் 6 அமெரிக்க டொலர்கள். 1995 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவினால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட அபிவிருத்தி உதவி அதன் பாதுகாப்புச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 3% மட்டுமே.

# 3 சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஐ. நா. ஆற்றும் பணிகள்

**சமாதானத்தைப் பாதுகாக்கவே ஐ. நா. உருவாக்கப்பட்டது. இப்பணியை அது எவ்வாறு செய்கிறது ?**

போர்-சமாதானப் பிரச்சினைகள் உட்பட மிகச் சிக்கலான பிரச்சினைகளைக் கவனத்திற்குக் கொண்டுவரவும் ஆராயவும் உலக நாடுகளுக்கு இடமளிக்கும் ஒரு சர்வதேச அரங்கமாக ஐக்கிய நாடுகள் விளங்குகிறது. அரசாங்கத் தலைவர்கள் நேருக்குநேர் சந்தித்துப் பேசும்போது சமரச முயற்சிக்கு அடித்தளம் இடப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் இதன் மூலம் பிணக்குகள் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்படுகின்றன. ஏராளமான நாடுகள் ஒரே குரலில் வேண்டுகோள் விடுக்கும்போது அதற்குச் செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் பிணக்கில் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கு ஏற்படுகிறது. செயலாளர் நாயகம் நேரடியாக அல்லது தனது பிரதிநிதி ஒருவரின் மூலம் சமரச முயற்சிக்கு ஏற்பாடு செய்வதுமுண்டு.



ஐ. நா. அவதானிகள், 1993 இல் எல் சல்வதோரில் ஆயுதங்களை அழித்துவிட உதவினர். ஐ. நா. அமைதி காப்பாளர்கள் பொதுத்தேர்தலை கண்காணித்ததுடன் நீதி பரிபாலனம் மற்றும் தேர்தல் முறைச் சீர்திருத்தங்களுக்கும் வழிகாட்டினர்.

சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவதற்கான பிரதான பொறுப்பு ஐ. நா. சாசனத்திற்கமைய பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது அங்கத்துவ நாடுகளின் கட்டாய கடமையாகும். சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய ஏதேனும் பிணக்கு சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, சபையானது முதல் நடவடிக்கையாகப் பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகொண்டு சமாதான வழியில் இணக்கத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்கிறது. யுத்தம் மூளுமாயின் முதலில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தச் சபை முயல்கிறது. அதன் பின், அமைதிகாக்கும் படையினர் அனுப்பிவைக்கப்படுவார்கள். அல்லது சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகப் பொருளாதார, இராணுவத் தடைகளைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஐ. நா. ஏதேனும் போர்களை நிறுத்தியுள்ளதா ?**

பல பிணக்குகள் முழு அளவிலான யுத்தங்களாக வெடிப்பதைத் தடுப்பதற்கு ஐ. நா. உதவியுள்ளது. அவ்வாறே, பல பிணக்குகளை அது சமாதானமாகத் தீர்த்து வைத்துள்ளது. பல சந்தர்ப்பங்களில், திடீர் நெருக்கடிகளைத் தணிப்பதற்கான வழிமுறைகளையும் ஐ. நா. வழங்கியுள்ளது. பேர்லின் நெருக்கடி (1948-1949), கியூபா ஏவுகணை நெருக்கடி (1962), 1973 இன் மத்திய கிழக்கு நெருக்கடி என்பன இதற்கு உதாரணங்களாகும். இச்சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் ஐக்கிய நாடுகளின் தலையீட்டினால் வல்லரசுகளுக்கிடையிலான யுத்தம் தவிர்க்கப்பட்டது. கொங்கோ யுத்தம் (1964), ஈரான்-ஈராக் யுத்தம் (1988) ஆகியவற்றையும் எல் சல்வதோர் (1992), மொஸாம்பிக் (1994), குவாத்தமாலா (1996) ஆகிய நாடுகளில் இடம்பெற்ற யுத்தங்களையும் முடிவுக்குக் கொண்டுவருவதில் ஐ. நா. பிரதான பங்கினை வகித்தது. நமீபியாவின் சுதந்திரத்திற்கும் வழிகோலும் வகையில் அங்கு முதன்முறையாக நடத்தப்பட்ட சுதந்திரமான, நீதியான பொதுத்தேர்தலை ஐ. நா. வின்

இடைக்கால உதவிக் குழு மேற்பார்வை செய்தது. கம்போடியாவில் ஏற்படுத்தப்பட்ட ஐ. நா. இடைக்கால அதிகாரசபை யுத்த நிறுத்தத்தையும் பிறநாட்டுத் துருப்புக்களின் வெளியேற்றத்தையும் கண்காணித்ததோடு, பல்வேறு அரச அலுவலகங்களை மேற்பார்வை செய்தல், சுதந்திரமும் நீதியுமான தேர்தல்களை ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டது. முன்னாள் யூகோஸ்லாவியாவில் இராணுவ நடவடிக்கையற்ற வலயங்களில் தங்கியிருந்த குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் ஐ. நா. பாதுகாவல் படை தனது பங்களிப்பைச் செய்தது.

**ஒரு நாடு பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை உதாசீனம் செய்தால் என்ன நடக்கும் ?**

தீர்மானங்கள் அலட்சியம் செய்யப்படுமானால் அவற்றின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்குப் பாதுகாப்புச் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஒரு நாடு சமாதானத்திற்கு அச்சுறுத்தலை அல்லது சீர்குலைவை ஏற்படுத்தினால் அல்லது ஆக்கிரமிப்புச் செயலில் ஈடுபட்டால் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளும் வேறு தடைகளும் கொண்டுவரப்படலாம். சில சந்தர்ப்பங்களில் ஆயுத பலத்தைப் பயன்படுத்துவதற்கும் சபை அதிகாரமளிக்கப்படலாம். எனினும், சமாதான வழிகளில் பிணக்கிற்குத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகள் எதுவுமே பயனளிக்காத பட்சத்தில், ஓர் இறுதி வழியாகவே இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது வழக்கம்.

1966 இல் ரொடீஷியாவின் (தற்போது ஸிம்பாப்வே) சிறுபான்மை வெள்ளையின அரசாங்கத்திற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடித்த தென்னாபிரிக்காவின் சிறுபான்மை வெள்ளையின அரசாங்கத்திற்கு எதிராக 1977 இல் ஆயுத விநியோகத் தடை கொண்டுவரப்பட்டது. அண்மைக் காலத்தில் லிபியா, சோமாலியா, யூகோஸ்லாவியா, ஈராக், ஹெய்த்தி, ருவாண்டா, லைபீரியா ஆகிய நாடுகளுக்கும் அங்கோலாவின் சில பகுதிகளுக்கும் எதிராக தடைகள் கொண்டுவரப்பட்டன.

**ஐ. நா. விடம் இராணுவப் படை ஒன்று உள்ளதா ?**

இல்லை. ஐ. நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் பங்குபற்றும் துருப்பினரை அங்கத்துவ நாடுகள் தாமாகவே முன்வந்து வழங்குகின்றன. பெரும்பாலும் ஐக்கிய நாட்டு அமைப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் சிவிலியன்களும் இந்த நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

**அப்படியாயின், அமைதிகாக்கும் நடவடிக்கை என்றால் என்ன ?**

பகை நாடுகளுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைக் கட்டுப்படுத்தவும் முடிவுக்குக் கொண்டுவரவும் உதவும் பொருட்டு ஐ. நா. வின் தலைமையில் பல்தேசியப் படைகளைப் பயன்படுத்துதல் என்பதே அமைதிகாத்தல் என்ற பதத்தின் மரபு ரீதியான வரைவிலக்கணமாகும். யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, அதனைப் பேணுவதற்கும் போரிடும் தரப்பினருக்கிடையே தாக்குதல் தவிர்ப்பு இடைவலயம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் ஒரு மூன்றாவது தரப்பு மேற்கொள்ள வேண்டிய பணியை அமைதி காக்கும் நடவடிக்கை நிறைவேற்றுகிறது. இதன் பயனாக, இராஜதந்திர வழிகள் மூலம் பிணக்கிற்



குத் தீர்வு காணும் முயற்சி இலகுவாகிறது. அமைதிகாப்பாளர்கள் களத்தில் சமாதானத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் ஐ. நா. சமரசப் பேச்சாளர்கள் பிணக்கில் சம்பந்தப்பட்ட குழுக்களின் அல்லது நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பிணக்கிற்குச் சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

அமைதி காக்கும் நடவடிக்கைகள் இரண்டு வகைப்படும் : அவதானிப்புப் பணிகள், அமைதி காக்கும் படை நடவடிக்கைகள் என்பனவே அவையாகும். அவதானிகள் ஆயுதமேந்தமாட்டார்கள். அமைதி காக்கும் படையினர் இலகு ஆயுதங்களை வைத்திருப்பர். தற்பாதுகாப்புக்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்துவர். கடமை வேளையில் அவர்கள் அணிந்திருக்கும் ஐ. நா. இலச்சினை மற்றும் நீலத் தலைக்கவசம் ஆகியவற்றின் மூலம் அவர்களை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளலாம். நீலத் தலைக்கவசம் இப்பொழுது ஐ. நா. அமைதி காப்பாளர்களின் அடையாளச் சின்னமாகப் பிரபல்யம் பெற்றுள்ளது. சகல அமைதிகாக்கும் நடவடிக்கைகளின்போதும் அவர்கள் அதனைத் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர். ஆபத்து வேளைகளில் அணிந்துகொள்கின்றனர். அமைதிகாக்கும் படையினர் தத்தமது நாட்டின் இராணுவச் சீருடைகளையே அணிகிறார்கள். அவர்கள் ஐ. நா. கொடியின் கீழ் ஒன்றாகப் பணியாற்றினாலும் அவர்கள் மீதான இறுதி அதிகாரம் அவர்களை வழங்கிய நாடுகளின் அரசாங்கங்களிடமே உள்ளது.

அமைதிகாக்கும் நடவடிக்கைகள் வழமையாகப் பாதுகாப்புச் சபையினால் முடிவுசெய்யப்பட்டுச் செயலாளர் நாயகத்தினால் வழிநடத்தப்படுகின்றன. நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நாட்டு அரசாங்கத்தினதும், முடியுமானால் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புக்களினதும் சம்மதம் பெறப்பட வேண்டும். அமைதிகாக்கும் படை வீரர்களும் சிவில் உத்தியோகத்தர்களும் பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்வார்கள். தாம் நிலைகொண்டுள்ள நாட்டின் உள்விவகாரங்களில் அவர்கள் தலையிட மாட்டார்கள்.

வழமையாக, ஒரு நெருக்கடி தோன்றிய பின்பே அமைதிகாக்கும் பணி ஆரம்பமாகிறது. ஆனால், பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கான முயற்சிகள் அதற்கு முன்பதாகவே தொடங்கப்பட்டுவிடும். புதிய பிணக்குகள் தோன்றுவதை அல்லது ஏற்கனவே உள்ள பிணக்குகள் போராக மாறுவதைத் தடுப்பதற்கு ஐ. நா. பல வழிகளில் முயற்சிசெய்ய முடியும். செயலாளர் நாயகம் தனது "செல்வாக்கை" உபயோகித்துத் தனிப்பட்ட முறையில் தொடர்புகளை ஏற்படுத்தலாம் அல்லது உண்மை விபரங்களை விசாரித்து அறிவதற்காகத் தூதுக்குழுக்களை அனுப்பிவைக்கலாம். இத்தகைய வழிமுறைகள் "வருமுன் காக்கும் இராஜதந்திரம்" எனப்படும்.

**அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் ஐ. நா. அதிகமாக ஈடுபடுவது ஏன் ?**

மோசமான இராணுவ அல்லது மனிதாபிமான நெருக்கடிகளுக்குப் பரிகாரம் காணும் வகையிலேயே அமைதிகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த காலங்களிலே, போரில் ஈடுபடும் நாடுகளுக்கிடையே சமாதானத்தைப் பேணுவதே அமைதி காப்பாளர்களின் முக்கிய பணியாக இருந்தது. ஆனால், தற்போது நாடுகளுக்குள்ளேயே யுத்தங்கள் இடம்பெறுகின்றன. உள்நாட்டுக் கலகங்கள், இன மோதல்கள் முதலியவற்றின் காரணமாக சில அரசாங்கங்கள் தத்தமது சொந்தப் பிரதேசத்திலேயே அதிகாரத்தை நிலைநாட்ட முடியாதிருக்கின்றன. இதனால் மக்கள் பெரும் துன்பம் அடைகின்றனர். இத்தகைய நிலைமைகளில், பிணக்கிற்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணம் வழங்கவும் ஐக்கிய நாடுகளின் உதவி அடிக்கடி நாடப்படுகிறது. எனவே, கஷ்டமான சூழ்நிலைகளின் மத்தியிலும் ஐ. நா. அமைப்பானது பிணக்கிற்குத் தீர்வுகாணும் முயற்சிகளையும் மனிதாபிமான உதவி வழங்குவதையும் ஒருங்கே மேற்கொள்கிறது.

**57 வருடகால அமைதி காத்தல் (1948-2005)**

| | |
|---|---|
| அமைதி காக்கும் இயக்கங்கள் | 56 |
| தற்போது அமுலாகும் இயக்கங்கள் | 16 |
| அமைதி காக்கும் படைவீரர்கள் | 750,000 |
| உயிரிழப்புக்கள் | 1,910 |
| பங்களித்த நாடுகள் | 130 |
| நொபெல் சமாதான பரிசு | 1-(1998) |

உதாரணமாக, முன்னாள் யூகோஸ்லாவியாவின் சில பகுதிகளில் பல்வேறு பிராந்தியக் குழுக்கள் கடும் மோதல்களில் ஈடுபட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அல்லது காயமடைந்தும் வீடுவாசல்களை இழந்தும் அல்லற்பட்டனர். இந்த நிலைமையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஐக்கிய நாடுகள் 1992 இல் ஐ. நா. பாதுகாவல் படை (UNPROFOR) ஒன்றை அனுப்பிவைத்தது. இப்படையினர் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு உதவிபுரிந்ததோடு பொஸ்னியா, ஹெர்ஸகோவினா பிரதேச மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தினர்.

அவ்வாறே, உள்நாட்டுக் கலகத்தினால் சீரழிந்துபோயுள்ள இன்னுமொரு நாடான சோமாலியாவிலும் யுத்த நிறுத்தத்தைக் கண்காணித்தல், மக்களுக்கான அவசர நிவாரணப் பொருள்களை விநியோகித்தல் ஆகிய நடவடிக்கைகளை ஐ. நா. அமைதிகாக்கும் படையினர் மேற்கொண்டனர்.

**ஈராக்-குவைத்தில் இடம்பெற்ற 'பாலைவனப் புயல்' தாக்குதல் ஓர் அமைதிகாக்கும் நடவடிக்கையா ?**

இல்லை. அது பாதுகாப்புச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தபோதிலும் ஐ. நா. வின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றல்ல. "பாலைவனப் புயல்" நடவடிக்கை அமெரிக்காவின் தலைமையில் ஒன்றிணைந்த ஒரு கூட்டணி நாடுகளினால் மேற்கொள்ளப்பட்டது. குவைத்திலிருந்து ஈராக்கை வெளியேற்றுவதற்குச் "சகல வழிகளையும்" கையாளும் அதிகாரத்தை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கும் வகையில் பாதுகாப்புச் சபை 1990 நவம்பர் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



குவைத், அல் மக்காவில் (1991) எரியும் எண்ணெய்க் கிணறுகளும் சேதமாக்கப் பட்ட ஒரு ஈராக்கிய தாங்கியும். இப்பொழுது, ஈராக்-குவைத் எல்லை களுக்கு இடைநிலையிலான அமைதி வலயத்தை ஐ. நா. அவதானிகள் கண்காணிக்கின்றனர்.

1950 இல் கொரியாவிலும் இவ்வாறான ஒரு நிலைமை உருவாகியது. அப்பிராந்தியத்தில் யுத்தம் மூண்டபோது, "ஆயுதத் தாக்குதலை முறியடிப்பதற்குத் தேவையான சகல உதவிகளையும் கொரியக் குடியரசுக்கு வழங்கும்" அதிகாரம் பாதுகாப்புச் சபையினால் அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்பட்டது. அத்துடன், இராணுவ உதவிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்க விரும்பும் நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப்படையினூடாக அவற்றை வழங்க வேண்டுமெனவும் பாதுகாப்புச் சபை கேட்டுக் கொண்டது. சோமாலியா (1992), ருவாண்டா (1994), ஹெய்த்தி (1994) ஆகிய நாடுகளில் சிக்கலான இராணுவ மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் தோன்றியபோது அவற்றை நிவர்த்தி செய்வதற்காகச் "சகல வழிகளையும்" கையாளப் பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகளுக்கு அனுமதி வழங்கியது. இங்கு குறிப்பிடப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமாதானத்தை நிலைநாட்டி, மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற எடுக்கப்பட்ட சர்வதேச முயற்சிகளுக்கு ஒரு நாடோ அல்லது ஒருசில நாடுகளின் குழுவோ தலைமைதாங்கியுள்ளன. பின்பு, இம்முயற்சிகள் ஐ. நா. அமைதிகாக்கும் குழுவினால் தொடரப்பட்டன.



சூடானுக்கு அவசர உணவு உதவி. போரினால் சீர்குலைந்த இந்நாட்டில் அநேகமான மக்கள் ஐ. நா. வின் உதவியிலேயே தங்கியுள்ளனர்.

சமாதானத்திற்காக ஐ. நா. வேறென்ன செய்கிறது ?

அமைதிகாக்கும் பணி நிறைவேற்றப்படுவதுடன் ஐ. நா. வின் சமாதான முயற்சி முடிந்துவிடுவதில்லை. யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களும் அகதிகளும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல ஐ. நா. உதவுகின்றது. அது நிலக்கண்ணிகளை அகற்றுகின்றது. வீதிகளையும் பாலங்களையும் செப்பனிடுகிறது. பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. தேர்தல்களைக் கண்காணித்தல், மனித உரிமைகளுக்கு எவ்வாறு மதிப்பளிக்கப்படுகிறது என்பதை அவதானித்தல் என்பனவும் ஐ. நா. வின் பணிகளாகும். "சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்" எனவும் அழைக்கப்படும் இச்செயற்பாடு 60க்கு மேற்பட்ட நாடுகளில் ஜனநாயக அமைப்புக்களைக் கட்டியெழுப்ப உதவியுள்ளது.

இராணுவத் துறையில் குறைப்புக்களை ஊக்குவிப்பதன் மூலம் ஆயுத பரிகரணத்திற்காகவும் ஐ. நா. பாடுபடுகின்றது. (பக். 31 இல் சமீப நோக்கைப் பார்க்கவும்)

**ஐ. நா. சமாதானத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுகிறது. ஆனால், உலகில் இன்று சமாதானம் குன்றியுள்ளது. இந்த நிலையில் ஐ. நா. தேவைதானா ?**

கடந்த 60 ஆண்டுகளில் உலகம் சுமார் 150 போர்களைச் சந்தித்துள்ளது. 1997 இல் மாத்திரம் 25 பெரிய யுத்தங்கள் இடம்பெற்றன என்று ஸ்டொக்ஹோமிலுள்ள சர்வதேச அமைதி ஆய்வு நிலையம் தெரிவிக்கிறது. அதிஷ்டவசமாக, இவற்றில் ஒன்றுகூட பேரழிவு விளைவிக்கும் உலக யுத்தமாக மாறவில்லை. சமாதானம், ஆயுதபரிகரணம் என்பன தொடர்பாக ஐ. நா. மேற்கொள்ளும் முயற்சிகளும் இதற்கு உதவிய ஒரு முக்கிய காரணம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

சிறிய போர்களைத் தடுத்து நிறுத்தவும் தீர்மானங்கள் முழுமையாக அமுல்செய்வதற்கும் ஆற்றல் கொண்ட ஒரு வலிமையான அமைப்பாக ஐக்கிய நாடுகள் மாற்றப்பட வேண்டுமெனப் பலர் நினைக்கின்றனர். ஆனால், ஐ. நா. செயற்பாடுகளின் பயன்விளைவானது அங்கத்துவ நாடுகளின் அரசியல் திடசங்கற்பத்திலேயே- அதாவது, தாமாகவே முன்வந்து ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்களை மதித்து அமுல்செய்வதில் அவை காட்டும் அக்கறையிலேயே தங்கியுள்ளது. அத்துடன் ஐ.நா.வை மேலும் வலிமையாக்குவதற்குப் பெரும் செலவாகும். போதிய நிதி இல்லாத காரணத்தால் ஐக்கிய நாடுகள் சில சந்தர்ப்பங்களில் மேலும் தீர்க்கமான முறையில் செயலாற்ற முடியாதிருக்கிறது.

கடுமையான சவால்களை எதிர்நோக்கப்படினும் சளைக்காமல் தொடர்ந்து முயற்சி செய்வதே ஐ.நா.வின் சிறப்பு வலிமையாகும். போரில் ஈடுபட்டுள்ள நாடுகள் அதனை நிறுத்துவதற்கான அரசியல் நோக்கத்தைக் கொண்டிருக்காதவிடத்து, ஐ.நா. அதன் அமைதிகாக்கும் படைகளைச் சிலசமயம் திருப்பி அழைப்பதுண்டு. எனினும், இராஜதந்திர மற்றும் பேச்சுவார்த்தை வழியிலான சமரச முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. நிலைமைகள் சீரடைந்ததும் அமைதிகாக்கும் படையினர் மீண்டும் அனுப்பிவைக்கப்படலாம்.

உலகிலுள்ள சகல மக்களுக்கும் சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த இன்னும் எவ்வளவோ காலம் செல்லக்கூடும். போர்கள், வறுமை, மனித உரிமை மீறல்கள் என்பன இன்னமும் பரந்து காணப்படுகின்றன. ஆனால், ஐக்கிய நாடுகள் தொடர்ந்து செயற்பட வேண்டியதற்கான பிரதான காரணமும் அதுவே. அதன் பணி இன்னமும் முடிந்துவிடவில்லை. ஐ.நா. இல்லாதிருந்தால் தற்சமயம் அது ஆற்றிவரும் பணிகளைச் செய்வற்கு வேறொரு பெயரில் வேறோர் அமைப்பை உலக நாடுகள் உருவாக்கியிருக்கக்கூடும் என்பார்கள்.

மேலும் அறிய : www.un.org/depts/dpko, www.un.org/aboutun

6-CM 005453

**ஆயுதப் பரிகணத்திற்காக**
**ஐ. நா. எடுத்த சில நடவடிக்கைகள்**

* வளிமண்டலத்திலும் விண்வெளியிலும் நீருக்கடியிலும் அணுசக்திப் பரிசோதனைகளைத் தடைசெய்யும் பகுதிப் பரிசோதனைத் தடை உடன்படிக்கை (1963).

* அணுசக்தி நாடுகளிடமிருந்து அணுசக்தியற்ற நாடுகளுக்கு அணுசக்தி ஆயுதங்கள் செல்வதைத் தடைசெய்யும் பரம்பல் தடை உடன்படிக்கை (1968).

* இரசாயன ஆயுதங்களின் உற்பத்தி, பாவனை, கையிருப்பு ஆகியவற்றைத் தடைசெய்யும் இரசாயன ஆயுதங்கள் ஒப்பந்தம் (1992).

* நிலத்திற்கு அடியிலான சகல அணுசக்திக் குண்டுவெடிப்புப் பரிசோதனைகளையும் தடைசெய்யும் விரிவான அணுச்சக்திப் பரிசோதனைத் தடை உடன்படிக்கை (1996).

* மிதிவெடிகளின் உற்பத்தி, பாவனை, கையிருப்பு, விற்பனை ஆகியவற்றை தடைசெய்யும் மிதிவெடித் தடை ஒப்பந்தம் (1997).



அணுகுண்டு வெடிப்பிலிருந்து உயிர் தப்பிய சிறுமி. 1945 இல் ஜப்பானின் ஹிரோஷீ மாவிலும் நாகசாகியிலும் 120,000 க்கு மேற் பட்ட மக்கள் அணுக்குண்டுத் தாக்குதலினால் கொல்லப் பட்டனர்.

## அமைதியைக் காப்பது மாத்திரமல்ல

மரபுவழியான அர்த்தத்தின்படி, அமைதிகாத்தல் என்பது போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்களை விலக்கி வைத்திருப்பதற்காக ஐ. நா. ஆணையின்கீழ் பல்தேசியத் துருப்புக்களை அனுப்புவதாகும். ஆனால் தற்காலத்தில், ஐ. நா. அமைதி காப்பாளர்கள் அதைவிடக் கூடுதலான பணிகளை ஆற்றுகின்றனர். இதோ சில உதாரணங்கள் :

* யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும் இராணுவ அவதானிப்பும்.
* படைக்கலைப்பும் மீள் ஒருங்கிணைப்பும்
* ஆயுத பரிகரணம்
* மனிதாபிமான உதவிகள்
* தேர்தலுக்கான உதவிகள்
* மனித உரிமைகள்
* சிவிலியன் பொலிஸ்
* நிலக்கண்ணி அகற்றுதல்
* பிராந்திய அமைப்புக்களுடன் ஒத்துழைப்பு



## பணத்தைக் கொண்டு என்ன வாங்கலாம்

| | | | |
|---|---|---|---|
| 100 அமெ. டொலருக்கு | 1 AK 47 துப்பாக்கி | அல்லது | 3,000 ஒரு வயதுக் குழந்தைகளின் கண்பார்வையைப் பாதுகாக்க போதுமான விட்டமின் "ஏ" வில்லைகள் |
| 100 மில்லியன் அமெ. டொலருக்கு | 10 மில்லியன் நிலக்கண்ணிகள் | அல்லது | 7.7 மில்லியன் குழந்தைகளை 6 பிள்ளைப்பருவ நோய்களிலிருந்து காப்பாற்றத் தேவைப்படும் தடுப்பு மருந்துகள் |
| 800 மில்லியன் அமெ. டொலருக்கு | 23 F-16 போர் விமானங்கள் | அல்லது | 1.6 பில்லியன் மக்களை அயடீன் குறைபாட்டு நோய்களில் இருந்து காப்பாற்ற 10 வருடங்களுக்குத் தேவைப்படும் அயடீன் கலந்த உப்பு |
| 2.4 பில்லியன் அமெ. டொலருக்கு | 1 அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் | அல்லது | 48 மில்லியன் கிராமிய மக்களுக்கு குடிநீர் சுகாதார வசதிகள் |
| 24 பில்லியன் அமெ. டொலருக்கு | 11 ரேடார் தவிர்ப்புக் குண்டுவீச்சு விமானங்கள் | அல்லது | பாடசாலை செல்லாத 135 மில்லியன் பிள்ளைகளுக்கு 4 வருடங்களுக்கு ஆரம்பக் கல்வி |

மேலதிக விபரங்களுக்கு : www.un.org/depts/dda

# நிலக்கண்ணிகளை முற்றாக ஒழிப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாடுபடுகிறது

- உலகெங்கிலும் 110 மில்லியன் நிலக்கண்ணிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுவதற்கு 1,100 ஆண்டுகள் எடுக்கலாம்.

- நிலக்கண்ணிகளினால் ஒவ்வொரு மாதமும் 800 பேர், பெரும்பாலும் அப்பாவிக் குடிமக்கள், உயிரிழக்கின்றனர். மேலும் அதிகமானோர் காயமடைகின்றனர் அல்லது முடமாகின்றனர்.

- நிலக்கண்ணியை வாங்க 3 அமெ. டொலர் செலவாகிறது. அதனை அகற்ற 1,000 அமெ. டொலர் செலவாகும்.

- ஒரு சதுர மைலுக்கு ஆகக் கூடுதலான நிலக்கண்ணிகளைக் கொண்டுள்ள நாடுகள் : பொஸ்னியா-ஹெர்ஸகோவினா (152), கம்போடியா (143), குறோவேசியா (137).

- நிலக்கண்ணிகளைத் தடை செய்யும் சர்வதேச உடன்படிக்கை 185 நாடுகளினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மூன்று நாடுகள் மட்டுமே கைச்சாத்திட மறுத்துள்ளன. உங்கள் நாடும் அவற்றில் ஒன்றா ?



இச்சிறுவனும், அவனது பாட்டனாரும் ஆப்கானிஸ்தானில் நிலக்கண்ணிகளால் தமது கால்களை இழந்தனர்.

மூலம் : உலகச் சிறுவர்களின் நிலைமை 1996, யுனிசெப்.

## சமீப நோக்கு

### ஆயுதபரிகரணம்

பேரழிவு உண்டுபண்ணும் ஆயுதங்களை ஒழிப்பதற்கு ஐக்கிய நாடுகள் எடுத்த நடவடிக்கைகளினாலும் வேறு சில காரணங்களினாலும் மனிதகுலம் மற்றுமொரு அணுகுண்டு யுத்தத்திலிருந்து இதுவரை தப்பியுள்ளது. ஆனால், உலகம் இன்னமும் ஆபத்து நிறைந்த ஓர் இடமாகவே உள்ளது. சேகரிப்பிலுள்ள ஆயுதங்கள் அதிகரித்து வருகின்றன. தினந்தோறும் அதிகமதிகமான மக்கள் யுத்தத்திற்குப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். ஆயுதப் போட்டிக்கான செலவினம் அதிகரித்துக்கொண்டே போகிறது.

1945 இல் ஜப்பானின் ஹீரோஷிமாவிலும் நாகசாக்கியிலும் இரண்டு அணுகுண்டுகள் போடப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாவது உலக யுத்தம் (1939-1945) முடிவுக்கு வந்தது. அதன் பின்னர், உலகில் சுமார் 150 யுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றினால் 20 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். இவர்களில் 80 சதவீதத்திற்கு அதிகமானோர் சாதாரண குடிமக்கள். இந்த யுத்தங்களில் எவருமே அணுசக்தி ஆயுதங்களைப் பயன்படுத்தாதபோதிலும் தற்சமயம் ஏழு "அணுசக்தி வல்லரசுகள்" உள்ளன என்பதை நாம் மறந்துவிட முடியாது. உலகெங்கும் சுமார் 15,000 மெகா தொன் அணுச்சக்தி ஆயுதங்கள் கையிருப்பில் உள்ளன. இது ஹீரோஷிமாவில் போடப்பட்ட குண்டுகளைவிட ஒரு மில்லியன் மடங்கு அதிகமானது.

**இரண்டாவது உலக யுத்தத்தின் பின் 150 க்கு மேற்பட்ட யுத்தங்களில் 20 மில்லியன் மக்கள் பலியானார்கள்.**

ஒவ்வொரு நிமிடமும் உலக நாடுகளில், குறிப்பாக வளர்முக நாடுகளில், 25 முதல் 30 வரையிலான பிள்ளைகள் மந்தபோஷாக்கு, பட்டினி, குணப்படுத்தக்கூடிய நோய்கள் முதலியவற்றின் காரணமாக உயிரிழக்கின்றார்கள். அதேசமயத்தில், உலக நாடுகள் இராணுவ நோக்கங்களுக்காக 1.5 மில்லியன் அமெ. டொலர்களைச் செலவிடுகின்றன. அதாவது, ஆண்டொன்றுக்கு 800 பில்லியன் அமெ. டொலர்களுக்கு மேல். வருடாந்தம் சுமார் 30 பில்லியன் அமெ. டொலர் பெறுமதியான ஆயுதங்கள் வளர்முக நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன.

ஆயுதங்களைக் குவித்தல், பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டுக்குமே பெருமளவு மனித வளங்களும் பொருள் வளங்களும் தேவை. வளங்கள் குறைவாகவே இருப்பதால் ஒரு துறைக்கான செலவு மற்ற துறையைப் பாதிக்கவே செய்யும். காலப்போக்கில், உலகமானது ஒன்றில் ஆயுதப் போட்டியைத் தொடரலாம் அல்லது நிலைத்திருக்கக்கூடிய சமூக-பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தலாம். ஆனால், இரண்டையுமே செய்யமுடியாதிருக்கும் என்ற கருத்து மேலோங்கி வருகிறது.

பொதுவான, முற்றுமுழுதான ஆயுதபரிகரணம் - அல்லது பேரழிவு உண்டுபண்ணும் ஆயுதங்களைப் படிப்படியாக ஒழித்தல் - ஐக்கிய நாடுகளின் இலட்சியங்களில் ஒன்றாகும். எனினும், அதன் உடனடி நோக்கம் யுத்த பீதியை, குறிப்பாக அணுசக்தி யுத்த பீதியை ஒழித்து, ஆயுதப் போட்டியை நிறுத்திப் பின்னோக்கித் தள்ளுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகும்.



## பிள்ளைப் பருவப் போர்வீரன் ஒருவனின் கதை

என் பெயர் லோறன்ஸ் மூர். ஐந்து வருடங்களுக்கு முன், எனது நாடு சிவில் யுத்தத்தில் சிக்கியபோது, நானும் ஒரு போராளிக் குழுவில் சேர்ந்துகொண்டேன். அப்பொழுது எனக்கு 15 வயது.

நான் பல மோதல்களில் பங்குபற்றினேன். முதலாவது மோதலிலேயே காயமடைந்து கள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைப் பெற்றேன். அப்பொழுதுதான் நான் ஏதோ ஓர் இயக்கத்திற்குச் சொந்தமானவன் என்பதை முதன்முறையாக உணர்ந்தேன்.

எங்கள் பக்கத்தில் பலர் உயிரிழந்தனர். நாங்களும் எதிரிகள் பலரைக் கொன்றோம். ஒரு நாள் இரவு, எனது நண்பனொருவன் என் கண் முன்னாலேயே இறந்தான். எனக்கு மிகவும் துக்கமாக இருந்தது. ஆனால், சண்டையிடுவதை நான் நிறுத்தவில்லை. யுத்தமென்றால் இப்படித்தான் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். போர்க்களத்தில் நானும் பலரை கொன்றிருக்கிறேன். ஆனால், சாதாரண குடிமக்களை ஒருபோதும் கொல்லவில்லை. எதிரிகளைக் கொன்றபோது எனக்கு மனநிறைவு ஏற்பட்டது. ஆனால், இதற்காக என்னை மன்னிக்கும்படி இப்பொழுது இறைவனை மன்றாடுகிறேன்.

எனது வயதையொத்த ஏனைய போராளிகள் பலரைப் போலவே நானும் பாடசாலைக்குச் சென்று கற்றிருக்கவில்லை. யுத்தம் முடிவடைந்தபோது எனக்கு ஏதாவது வேலை கிடைக்கும் என்று நம்பினேன். ஆனால், கல்வியோ தொழில் பயிற்சியோ இல்லாத எனக்கு வேலை எதுவுமே கிடைக்கவில்லை. அதேசமயத்தில், எங்கள் தலைவரின் மகன் பளபளப்பான புதிய மோட்டார் சைக்கிளில் நகர வீதிகளில் சுற்றிக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

பின்பு, என்னைக் கைது செய்தார்கள். அதிர்ஷ்டவசமாக, வெளிநாட்டுச் செய்தி நிருபர் ஒருவர் பணம் செலுத்தி எனக்கு விடுதலை வாங்கித் தந்தார்.

காடுகளில் ஒளித்திருந்து, மக்களைக் கொன்று குவித்து, எந்நேரமும் மற்றவர்களின் தாக்குதலுக்கு அஞ்சி வாழ்ந்த அந்த ஐந்து வருடங்களை இப்பொழுது நினைத்துப் பார்க்கும்போது, நான் எவ்வளவு மூடத்தனமாக நடந்துகொண்டேன் என்பது புரிகிறது. உயர்நிலைக்கு வந்ததும், யாரால் தமக்கு இந்த நிலை கிடைத்தது என்பதையே மறந்துவிடும் ஆட்களுக்காக நாம் எமது வாழ்க்கையைத் தியாகம் செய்திருக்கிறோம்.

1988 ஆம் ஆண்டில் 25 நாடுகளைச் சேர்ந்த 200,000 க்கு அதிகமான 16 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் யுத்தங்களில் பங்குபற்றினார்கள். 1989 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஐ. நா. சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்தின்படி, பிள்ளைகளை ஆயுதப்படைகளுக்குச் சேர்த்துக்கொள்ளுதல் சட்டவிரோதமாகும்.

(மூலம் : நியூயோர்க் டைம்ஸ்/உலகச் சிறுவர்களின் நிலை, 1996)

உலக சனத்தொகையில் 1.1 பில்லியன் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதிகள் கிடையாது. சீரான மலசலகூட வசதிகள் இல்லாதவர்களின் எண்ணிக்கை 2.2 பில்லியனாகும். கைத்தொழில் நாடொன்றில் வசிப்பவர் வளர்முக நாடொன்றில் வசிப்பவரைப் பார்க்கிலும் இரு மடங்கு கூடுதலான நீரைப் பயன்படுத்துகிறார். ஆண்டு தோறும் 15 மில்லியன் ஹெக்டேயருக்கு அதிகமான காடுகள் அழிகின்றன: அதாவது, ஒவ்வொரு ஆறு நிமிடங்களிலும் ஒரு சதுர மைல் மழைக்காடு நாசமாகின்றது. உலக நிலப்பரப்பில் கால்வாசிப் பிரதேசம்- அதாவது, 3.6 பில்லியன் ஹெக்டேயர் நிலம்- கட்டாந்தரையாக மாறக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. பின்லாந்தில் வசிக்கும் ஒருவர் வளர்முக நாடொன்றில் வசிக்கும் சாதாரண மனிதர் ஒருவரைப் பார்க்கிலும் 27 மடங்கு கூடுதலான அச்சிடும் அல்லது எழுதும் காகிதங்களைப் பயன்படுத்துகிறார். ஸ்கண்டியநேவிய மக்கள் தமக்குக் கிடைக்கும் போத்தல்கள் மற்றும் ஜாடிகளில் மூன்றிலிரண்டு பங்கை மீளமீளப் பயன்படுத்துகின்றனர். ஆனால், வட அமெரிக்க மக்கள் நாலிலொரு பங்கையே அவ்வாறு செய்கின்றனர். மெக்ஸிக்கோ நகரில் வளி மாசடைதல் காரணமாக ஆண்டுதோறும் சுமார் 6,400 பேர் மரணமடைகிறார்கள். வளர்முக நாடுகளில் நகரங்கள் மாசடைவதன் விளைவாக ஏற்படும் மேலதிகச் சுகாதாரச் செலவினம் சுமார் 100 பில்லியன் அமெ. டொலராகும். கனடாவில் 48,000 ஏரிகள் அமிலத்தன்மை அடைந்துள்ளன. சுவீடனில் உள்ள 90,000 ஏரிகளில் குறைந்தபட்சம் 20,000 ஏரிகள் வளி மாசடைதலின் காரணமாக ஏதோ ஓர் அளவுக்கு அமிலத்தன்மை அடைந்துள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் சுமார் 50 பில்லியன் மக்கள் பருகுவது பீடைநாசினிகளினால் மாசுபடுத்தப்பட்ட நீராக இருக்கக்கூடும். 2100 ஆம் ஆண்டளவில் பூகோள வெப்பநிலை 5.8 பாகை செல்சியஸால் அதிகரிக்கக் கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**4** நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி

# 4 நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி

**சுற்றாடலுக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பு என்ன ?**

எம்மைச் சூழவுள்ள யாவுமே சுற்றாடல் ஆகும். நாம் சுவாசிக்கும் வளி, பருகும் நீர், எமது உணவுப் பயிர்கள், வளரும் மண், உயிரினங்கள் போன்ற அனைத்துமே சுற்றாடலில் அடங்குகின்றன. அபிவிருத்தி என்பது நாம் எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக இந்த இயற்கை வளங்களை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைக் குறிக்கும். நாம் எமது வாழ்க்கைக்கு நன்மையானது என்று கருதும் காரியங்களையே செய்கிறோம். ஆனால், நாம் செய்யும் காரியங்கள் சுற்றாடலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

மக்களாகிய நாம் ஒரு பக்கத்தில் பூமியுடனும் மறுபக்கத்தில் ஒருவருடனொருவரும் நெருக்கமாகத் தொடர்புகொண்டுள்ளோம். சில சமயங்களில் நாம் இதனை உணர்வதில்லை. எனினும், இந்தத் தொடர்புகள் இருக்கத்தான் செய்கின்றன. ஜேர்மனியில் உயிர்களைக் காப்பாற்றுவதற்குத் தேவையான மருந்தைத் தயாரிக்க கொஸ்டரீக்காவிலுள்ள தாவரங்கள் தேவைப்படலாம். லண்டனில் அல்லது மெக்ஸிக்கோ நகரில் வாகனங்கள் கக்கும் புகையினால் ராபாத்தில் அல்லது டோக்கியோவில் காலநிலை பாதிக்கப்படலாம். தொழிற்சாலைகளில் இருந்தும் வாகனங்களில் இருந்தும் வெளியேறும் காபனீரொக்சைட் போன்ற வாயுக்கள் வளிமண்டலத்தைச் சூடாக்குகின்றன என்பதை நாம் இப்பொழுது அறிவோம். இந்த வெப்ப அதிகரிப்பினால் உலகின் காலநிலை மாறக்கூடும். தாவரங்கள் காபனீரொக்சைட் வாயுவை உறிஞ்சி வளியைச் சுத்தப்படுத்த உதவுகின்றன. ஆனால், உலகெங்கிலும் பெருமளவு காடுகள் விறகுக்காக அல்லது விவசாய நிலத்தைப் பெறுவதற்காக அழிக்கப்படுகின்றன.

**நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி என்றால் என்ன ?**

வருங்காலச் சந்ததியினர் அபிவிருத்தி வாய்ப்புக்களைக் குறைத்துவிடாமல் நாம் எமது தற்போதைய தேவைகளை நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதையே இது குறிக்கும். இன்னுமொரு வழியில் சொல்வதானால், கிடைக்கக்கூடிய மூலவளங்களை நாம் மதிநுட்பமாகப் பயன்படுத்த வேண்டும். சேமிப்பை அதிகரித்து விரயத்தைக் குறைப்பதே நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியின் தாரக மந்திரமாகும். கைத்தொழில் நாடுகளில் பலர் அத்துமீறிய வாழ்க்கை நடத்துகின்றனர். உதாரணமாக, பெரும் செல்வந்த நாடொன்றில் வசிக்கும் ஒருவர் மிக வறிய நாடொன்றில் வசிக்கும் 80 பேரைப் பார்க்கிலும் கூடுதலான எரிபொருளைப் பயன்படுத்துகிறார். மிதமிஞ்சிய நுகர்வினால் வீண்விரயம் ஏற்படுகிறது. இதனால் மூலவளங்கள் அருகிப்போவதுடன் சுற்றாடலும் மாசடைகிறது.

மோசமான வறுமை, சனத்தொகை அதிகரிப்பு என்பனவும் சுற்றாடலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உணவு, இயற்கை வளங்கள், தொழில் முதலியவற்றை வழங்கும் நிலமும் காடுகளும் அருகிவருவதால் மக்கள் உயிர்வாழ்வதற்குப் பெரும் கஷ்டப்படுகின்றனர். பலர் நகரங்களுக்குக் குடிபெயர்கின்றனர். இதனால் சனநெரிசல்மிக்க, சுகாதாரக் குறைவான, பாதுகாப்புக் குறைவான சேரிகள் தோன்றுகின்றன.

வறிய மக்கள் தமது உயிர்வாழ்க்கைக்காகச் சுற்றாடலை அழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டால், அதன் விளைவுகளைச் சகல நாடுகளுமே அனுபவிக்க நேரிடும்.



## வறுமை என்பது ......



"நான் தினமும் 13 மணி நேரம் வேலை செய்கின்றேன். ஆனால், எனக்கும் எனது மனைவிக்கும் இரு பிள்ளைகளுக்கும் உணவு வாங்குவதற்குப் போதிய பணத்தைக்கூட என்னால் சம்பாதிக்க முடியவில்லை. என்னைப் பொறுத்த வரையில், இதுதான் வறுமை"

ருதன் கீன் (28), சைக்கிளோ ட்றைவர், புனொம்பென், கம்போடியா.

"வறுமை என்பது ஒரு பெரும் பாவம். தீய செயல்களில் ஈடுபட அது உங்களைத் தூண்டும். பிறருக்கு அடிமையாக வாழ அது உங்களை நிர்ப்பந்திக்கும்"

டெம்போ சிங்காட்டே, கம்பியா.

"ஒரு வேளையேனும் போதியளவு உணவு கிடையாமையே வறுமையாகும்"

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு தொழிலாளி

## வறுமையைப் போக்க என்ன செய்ய வேண்டும் ?

சுமார் 1.3 பில்லியன் மக்கள் நாளொன்றுக்கு ஒரு டொலருக்குக் குறைவான பணத்தில் சீவிக்கிறார்கள். கிட்டத்தட்ட 1 பில்லியன் மக்கள் தமது அடிப்படை நுகர்வுத் தேவைகளையே பெறமுடியாத நிலையில் உள்ளனர். விவசாயம் செய்ய அவர்களிடம் காணி இல்லை. பணம் சம்பாதிக்கத் தொழில்கள் இல்லை. அன்றாட உணவை வாங்குவதற்கு வேறு வருமானங்களுமில்லை.

வறுமையை எதிர்த்துப் போராட வேண்டுமானால், நாடுகள் தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும். அதிக தொழில் வாய்ப்புக்களையும் வியாபார வழிகளையும் ஏற்படுத்த வேண்டும். அதே சமயத்தில், வறிய மக்களுக்கும் கடன், காணி, கல்வி, பயிற்சி போன்ற வசதிகள் அதிகமதிகமாக வழங்கப்பட வேண்டும். துரித சனத்தொகை அதிகரிப்பு வறுமைக்கான காரணங்களில் ஒன்றாகவும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்குத் தடையாகவும் அமைவதுண்டு. எனவே, வறிய நாடுகள் தமது சனத்தொகை அதிகரிப்பைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்திக்கொள்வதும் அவசியமாகும். சனத்தொகைப் பெருக்க வீதம் அதிகமாகவுள்ள நாடுகளில் ஆள் வருமான வளர்ச்சியும் நீர் விநியோகம், பொதுச்சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளும் குறைவாகவே இருப்பதைக் காணலாம்.

### வறிய நாடுகளுக்கு உதவச் செல்வந்த நாடுகள் என்ன செய்கின்றன ?

வறுமையைப் போக்குவதற்கு உலகளாவிய முயற்சிகள் அவசியம். கைத்தொழில் நாடுகள் தமது மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.7 சதவீதம் வளர்முக நாடுகளுக்கான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக்காக ஒதுக்கப்படும் என்று 1980 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையில் வாக்களித்தன. எனினும், டென்மார்க், பின்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே தற்சமயம் இந்த இலக்கை அடைந்துள்ளன.

சகல உதவி வழங்கும் நாடுகளும் தமது இலக்குகளுக்கு அமைவாக நடந்திருந்தால் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித்தொகையானது தற்போதுள்ள (1997) 48.3 பில்லியன் அமெ. டொலரைப் பார்க்கிலும் 100 பில்லியன் அமெ. டொலர் கூடுதலாக இருந்திருக்கும். இத்தொகை சுமார் 10 வருடங்களுக்குக் கிடைத்திருக்குமானால் வளர்முக நாடுகளில் வசிக்கும் அனைவருக்கும் கல்வி, சுகாதாரப் பராமரிப்பு, குடும்பத் திட்டமிடல், சுத்தமான நீர், போதியளவு போஷாக்கு முதலிய அடிப்படைச் சமூக வசதிகளை உறுதிப்படுத்த முடிந்திருக்கும்.

1995 ஆம் ஆண்டு டென்மார்க், கொப்பன்ஹேகன் நகரில் சமூக அபிவிருத்திக்கான உலக உச்சி மாநாடு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு தலைவர்கள் தத்தமது அரசாங்கங்கள் வறுமை ஒழிப்பு நடவடிக்கையை "ஒரு கட்டாய சமூக, அரசியல், பொருளாதார நடவடிக்கையாக" மேற்கொள்ளுமெனை உறுதிமொழி வழங்கினர். அதன் பின்னர், பல நாடுகள் வறுமையைக் குறைப்பதற்கான கால இலக்குகளை நிர்ணயித்துச் செயற்பட்டு வருகின்றன. வேறு பல நாடுகள் நீண்டகால உபாயங்களைத் திட்டமிடும் நோக்கத்துடன் வறுமை சம்பந்தமான மதிப்பீடுகளை ஆரம்பித்துள்ளன.

### வறுமையை ஒழிப்பதற்கு ஐ. நா. என்ன செய்கிறது ?

உலகிலுள்ள பல நாடுகள் வெளி உதவி இல்லாமல் தமது மக்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியாத நிலையில் உள்ளன. வறுமையைக் குறைத்து, பசியைப் போக்கி, சுகாதார மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கான உலகளாவிய முயற்சிக்கு ஐ.நா. தலைமை தாங்குகிறது. உண்மையில், ஐ.நா. அதன் செல்வ வளங்களில் 80 சதவீதத்தை இதற்காகவே செலவிடுகிறது. இதோ, அது மேற்கொள்ளும் பணிகளுக்குச் சில உதாரணங்கள் :

* இலட்சக்கணக்கான அகதிகளுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கும் உணவு, இருப்பிடம், அவசர மருத்துவ உதவி ஆகியவற்றை வழங்குகிறது.

* கடன், காணி, தொழில்நுட்பம், தொழிற் தேர்ச்சி போன்ற உற்பத்தி வளங்கள் அதிகமானோருக்குக் கிடைப்பதை ஊக்குவிக்கிறது.
* வசதி குறைந்த பிரிவினர், சிறு சமூகத்தினர் மற்றும் பெண்களுக்கு விசேட உதவிகளை வழங்குகிறது.
* பிள்ளைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்து வழங்கி, ஒவ்வொரு வருடமும் 2 மில்லியனுக்கு மேற்பட்ட பிள்ளைகளை இளவயது மரணத்திலிருந்து காப்பாற்றுகிறது.
* போதைப் பொருள்களின் விநியோகம், பாவனை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடிக்க உலக நாடுகளுக்கு உதவுகிறது.
* வளர்முக நாடுகள் அவற்றின் சனத்தொகைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவி கோரும்போது அந்த உதவியையும் வழங்குகிறது.

## பணத்தால் விலைகொடுத்து வாங்கக்கூடியவை

| | | |
|---|---|---|
| டொலர் 1 | மூலம் | மேற்கு ஆபிரிக்க கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களின் போஷாக்கை பெருமளவில் மேம்படுத்தக்கூடிய தாவரத்தின் 5 கன்றுகள் |
| டொலர் 10 | மூலம் | ஒரு விவசாயிக்கு வருடம் பூராவும் குடும்பத்தில் அனைவருக்கும் முட்டை வழங்கும் 10 கோழிக்குஞ்சுகள் |
| டொலர் 30 | மூலம் | தாயகம் திரும்பும் பொஸ்னிய அகதிக்கு ஒரு வருடத்திற்கு போதுமான விதை, உரம், காய்கறிகள் போன்றவை |



### வறுமையை ஒழிப்பதற்காக...

வளர்முக நாடுகளிலுள்ள அரசாங்கங்களும் பொது அமைப்புக்களும் வறுமைக்கான மூல காரணங்களைப் போக்குவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஐ.நா. அமைப்பு உதவுகிறது. இதோ, சில உதாரணங்கள் :

சீனா : சுமார் 80 மில்லியன் மிக வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனான "8-7" நிகழ்ச்சித் திட்டம், வறிய குடும்பங்களைத் தெரிவு செய்து அவற்றைச் சுய உதவிக் குழுக்களாக ஏற்பாடு செய்ய உள்ளூர் அமைப்பொன்று மேற்கொள்ளும் முயற்சிக்கு யூ. என். டி. பி. உதவுகிறது. நிலைத்திருக்கக் கூடிய விவசாய அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் டபிள்யூ. எவ். பி. உணவு உதவிகளை வழங்குகிறது.

சூடான் : வரட்சிக்கு இலக்காகும் ஐந்து பிரதேசங்களில் "பங்கு பற்றுதல்" வழிமுறை மூலம் வறுமையை எதிர்த்துப் போராட அரை மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு ஐ. நா. முகவராண்மைகள் உதவுகின்றன.

எதியோப்பியா : பாடசாலைகள், சிகிச்சை நிலையங்கள், வடிகால் அமைப்புகள், பொது மலசல கூடங்கள், சிறிய அணைக் கட்டுகள், வருமானம் தேடித்தரும் தொழில் முயற்சிகள் என்பன உட்பட 200 க்கு மேற்பட்ட வேலைத் திட்டங்களினால் 1,220,000 க்கு அதிகமான மக்கள் பயனடைந்துள்ளனர்.

பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவுகள், நேபாளம், இலங்கை : 50,000 க்கு மேற்பட்ட கிராமவாசிகள் தமது உற்பத்தி வளங்களை ஒன்றுதிரட்டிப் பயன்படுத்த உதவுவதன் மூலமும் அவர்களுக்கு வங்கிக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும் அவர்கள் பயனுள்ள சமூகக் குழுக்களாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேலும் அறிய : www.undp.org, www.worldbank.org

### மில்லேனிய அபிவிருத்தி இலக்குகள்

2000 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் நடந்த ஐக்கிய நாடுகளின் மில்லேனிய மாநாட்டில் உலகத் தலைவர்கள் வறுமை, பட்டினி, பிணி, எழுத்தறிவின்மை, சுற்றாடல் மாசுபடுதல், பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுதல் போன்றவற்றை ஒழிப்பதற்காக கால அட்டவணையுடன் கூடிய, உறுதியான இலட்சியங்கள், இலக்குகள் அடங்கிய தொகுதி குறித்து இணக்கம் கண்டார்கள். அவை தற்போது மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் என்ற பெயரில் உலக நிகழ்ச்சி நிரலில் முன்னணி இடங்களை வகிக்கின்றன.

## மில்லேனிய அபிவிருத்தி இலட்சியங்கள் 8, இலக்குகள் 18

**1. கொடிய வறுமையையும், பட்டினியையும் ஒழித்தல்**
- * ஒரு டொலருக்குக் குறைவான வருவாயுடன் வாழும் மக்களின் எண்ணிக்கையை அரை வாசியாக குறைத்தல்
- * பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைத்தல்

**2. அனைத்துலக அடிப்படைக் கல்வியை மெய்ப்படுத்தல்**
- * அனைத்து சிறுவர்களும், சிறுமியர்களும் முழுமையான ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தல்

**3. ஆண்-பெண் சமத்துவத்தை மேம்படுத்தி, பெண்களை வலுப்படுத்தல்**
- * 2005 அளவில் ஆரம்ப, இரண்டாம் நிலைக் கல்வியிலும், 2015 அளவில் அனைத்து மட்டத்திலும் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வை நீக்குதல்

**4. குழந்தைகளின் இறப்பு வீதத்தைக் குறைத்தல்**
- * ஐந்து வயதிற்கு குறைவான சிறுவர்கள் மத்தியில் இறப்பு வீதத்தை மூன்றில் இரண்டு பங்கால் குறைத்தல்

**5. தாய்மாரின் சுகாதாரத்தை மேம்படுத்தல்**
- * தாய் மரண வீதத்தை நான்கில் மூன்று பங்கால் குறைத்தல்

**6. எச்ஐவி/எயிட்ஸ், மலேரியா உள்ளிட்ட நோய்களைக் கட்டுப்படுத்தல்**
- * எச்ஐவி/எயிட்ஸ் பரவுதலை நிறுத்தி, பின்னோக்கிச் செல்ல வைத்தல்
- * மலேரியா உள்ளிட்ட நோய்கள் தொற்றுவதைத் தடுத்து நிறுத்துதல்

**7. சுற்றாடல் பாதுகாப்பு நலன்களை உறுதி செய்தல்**
- * நிலையான அபிவிருத்தி மூலோபாயங்களை தேசிய கொள்கைகள், செயல்திட்டங்களுடன் சேர்த்தல், சுற்றாடல் வள அழிவை தடுத்தல்
- * சுத்தமான குடிநீரை விநியோகித்தல், வசதிகள் குறைந்த மக்களின் எண்ணிக்கையை அரைமடங்காகக் குறைத்தல்
- * 2020 அளவில் குறைந்தபட்சம் பத்து கோடி சேரிவாசிகளின் வாழ்க்கையில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்

**8. அபிவிருத்திக்காக உலக அளவிலான பங்காளித்துவத்தை கட்டியெழுப்புதல்**
- * சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொண்ட, எதிர்வுகூறக்கூடிய, பாதகமற்ற திறந்த சந்தை மற்றும் நிதிக்கட்டமைப்பை மேலும் அபிவிருத்தி செய்தல். இதில் தேசிய, சர்வதேச மட்டங்களில் சிறந்த அரச விமர்சனம், அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பும் அடங்குகிறது.
- * அபிவிருத்தி குன்றிய நாடுகளின் விசேட தேவைகளை நிறைவேற்றுதல், அவற்றுக்கான தீர்வை மற்றும் ஏற்றுமதி பங்கீடுகள் அற்ற வசதிகளை செய்து கொடுத்தல், கூடுதல் கடன்பளுவை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு அதிக கடன் நிவாரணங்களை வழங்குதல், இருதரப்பு உத்தியோகபூர்வ கடன்களை ரத்துச் செய்தல், வறுமையை ஒழிப்பதற்கு திடசங்கற்பம் பூண்ட நாடுகளுக்கான உத்தியோகபூர்வ உதவிகள் ஆகியனவும் அடங்கும்.
- * அபிவிருத்தி அடைந்துவரும், நிலத்தால் சூழப்பட்ட மற்றும் சிறிய தீவு நாடுகளின் விசேட தேவைகளை நிறைவேற்றுதல்
- * நீண்டகால கடன்பளுவை தாங்கிக்கொள்ளும் வகையில் தேசிய, சர்வதேச செயற்பாடுகள் மூலம் வளர்முக நாடுகளின் கடன் பிரச்சினைகள் தொடர்பான முழு முயற்சிகளை எடுத்தல்.
- * வளர்முக நாடுகளின் ஒத்துழைப்போடு இளைஞர்களுக்காக கௌரவமான, பயனுள்ள தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவது.
- * மருந்துற்பத்தி நிறுவனங்களின் ஒத்துழைப்போடு வாங்கக் கூடிய விலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்ள வளர்முக நாடுகளுக்கு வாய்ப்பளித்தல்
- * தனியார் துறையின் ஒத்துழைப்போடு நவீன தொழில்நுட்பத்தின் குறிப்பாக தகவல் தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்களைப் பெற்றுக்கொடுத்தல்.

மில்லேனிய அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள www.un.org/millenniumgoals என்ற இணையத் தளத்தை நாடவும்.

எமது சூழலைப் பாதுகாக்க ஐ.நா. என்ன செய்கிறது ?

சூழலைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதில் ஐ.நா. முக்கிய பங்கை வகிக்கிறது. அது ஆய்வுகளை நடத்தி, சூழல் நிலைமைகளைக் கண்காணித்து, நாடுகளின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான வழிகள் குறித்து அரசாங்கங்களுக்கு ஆலோசனை வழங்குகிறது. தேசிய எல்லைகளைத் தாண்டிச் செல்லும் விசேட சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகச் சர்வதேசச் சட்டங்களை இயற்றும் பொருட்டு அரசாங்கங்களை ஒருங்கிணைந்து செயற்பட வைப்பது ஐ.நா.வின் மிகப் பிரதான பணிகளில் ஒன்றாகும். இதோ, சில உதாரணங்கள் :

* அருகிவரும் உயிரினங்களின் சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பந்தம் (1973) வனஜீவ ராசிகளிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்களின் வியாபாரத்தைக் கட்டுப் படுத்த உதவுகிறது.


**அதிக வேகத்தில் அதிக மக்கள்**

* ஒவ்வொரு வினாடியும் நான்கு முதல் ஐந்து குழந்தைகள் பிறக்கின்றன. ஒரு வினாடியில் இரண்டு பேர் மரணிக்கிறார்கள்.

* உலகச் சனத்தொகை 2 பில்லியனாகுவதற்கு 1927 ஆண்டுகள் எடுத்தன. ஆனால், தற்போதைய தொகையான 6 பில்லியனை அடைவதற்கு ஒரு வாழ்நாளுக்கும் குறைந்த காலமே தேவைப்பட்டது. 2050 ஆம் ஆண்டிற்குள் உலகச் சனத்தொகை 9 பில்லியனாக அல்லது அதற்கு மேலாக அதிகரித்துவிடக்கூடும்.

* நாம் உலகச் சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தத் தவறினால் அனைத்து மக்களுக்கும் போதிய வளங்கள் இல்லாமற் போகக்கூடும்.

* தீங்கிழைக்கும் கழிவுப் பொருள்கள் தொடர்பான பாஸல் ஒப்பந்தம் (1989) நச்சுத்தன்மையான கழிவுகள் எங்கேனும் வீசப்படுவதை அல்லது விற்கப்படுவதைத் தடுக்கிறது.



* காலநிலை மாற்றம் சம்பந்தமான ஐ. நா. கட்டுக்கோப்பு ஒப்பந்தம் (1992) பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி கைத்தொழில் நாடுகளைக் கேட்டுக்கொள்கிறது.

* காலநிலை மாற்றம் சம்பந்தமான ஒப்பந்தத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட கியோட்டோ உப ஒப்பந்தம் (1977) பச்சை வீட்டு வாயுக்களின் குறைப்பிற்கான சட்ட பூர்வ இலக்குகளைநிர்ணயிக்கிறது.

சூழல் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் 1992 இல் உலகத் தலைவர்களின் மாநாடு ஒன்றை ரியோ டி ஜெனீரோ நகரில் கூட்டியது. புவி உச்சிமாநாடு என்று அழைக்கப்பட்ட இந்த மாநாட்டில் 100 க்கு மேற்பட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அங்கீகரித்த "நிகழ்ச்சித் திட்டம் 21" என்ற ஆவணம் எமது

* தினமும் மூன்று உயிரின வகைகள் இல்லாதொழிகின்றன. ஐ.நா. இந்நிலையை மாற்ற விரும்புகிறது.

* 1992 இல் புவி உச்சி மாநாட்டில், நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான அனைத்துலகத் திட்டமொன்றை உலகத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

சூழலைப் பாதுகாப்பதற்கும் சுற்றாடலுக்குப் பெரும் தீங்கு உண்டுபண்ணாத அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் வழிகோலும் விரிவான செயற்றிட்டம் ஒன்றை எடுத்துக்கூறுகின்றது. பல நாடுகளின் தேசிய திட்டங்களுக்கு இதுவே இன்று அடிப்படையாக விளங்குகிறது. 1,800 க்கு மேற்பட்ட நகரங்கள் தமக்குரிய உள்ளூர் நிகழ்ச்சித்திட்டம் 21 ஆவணத்தை உருவாக்கியுள்ளன.

**புவி உச்சி மாநாட்டின் பின்னர் நடந்தது என்ன ?**

"புவி உச்சி மாநாடு +5" 1997 ஜுன் மாதம் நியுயோர்க் நகர ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நடந்தது. உலகம் பல விடயங்களில் முன்னேற்றத்தைக் கண்டுவரும்போதிலும், அதன் சுற்றாடல் தொடர்ந்தும் மாசடைவதாக மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. சுத்தமான குடிநீர், மின்வலு, போக்குவரத்து, சுற்றுலா போன்ற பல துறைகள் சார்ந்த எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதிநிதிகள் இணங்கினார்கள்.

1992 புவி உச்சி மாநாட்டு பின்னர் முன்னேற்றம், சவால்கள், புதிய நெருக்கடிகள் ஆகியவற்றை ஆராய்வதற்காக 2002 ஆகஸ்ட் 26 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 4 ஆந் திகதி வரை தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பேர்க் நகரில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பான உலகத் தலைவர்களது மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் முன்னுரிமை வழங்கப்படவேண்டிய துறைகள் தொடர்பான செயல்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

**தகவல் ஏடு- வைசூரி ஒழிந்துவிட்டது**

வைசூரி, சயரோகம், போலியோ, ஏற்புவலி, சின்னம்மை, குக்கல், தொண்டைக்கரப்பான் போன்றவை பல வளர்முக நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களை பாதிக்கும் ஆறு ஆட்கொல்லிகளாகும். யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் முயற்சிகளால் உலகில் 80 சதவீதமான பிள்ளைகள் தடுப்பு மருந்தேற்றப்பட்டிருக்கிறார்கள். இதன் மூலம் 30 இலட்சம் சிறுவர்களின் உயிர்களைப் பாதுகாக்க முடிந்திருக்கிறது. போலியோ உலகின் மேற்கு அரைக்கோளத்தில் இருந்து ஒழிக்கப்பட்டுள்ளது. வைசூரி பூமியில் இருந்து முற்றாக ஒழித்துக்கட்டப்பட்டுள்ள மற்றுமொரு நோயாகும்.

சோமாலியாவின் மர்க்கா நகரைச் சேர்ந்த அலி மாலின் கடைசியாக கண்டறியப்பட்ட வைசூரி நோயாளியாவார். 1977 ஒக்டோபர் மாதம் அவர் இந்த நோயினால் ஓரளவு பாதிக்கப்பட்டாலும், விரைவில் குணமடைந்துவிட்டார். அவர்தான கடைசி நோயாளி என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி தெரிந்துகொள்வதற்காக, வைசூரியால் பீடிக்கப்பட்ட ஒருவரை இனங்காணும் நபருக்கு ஆயிரம் டொலர் சன்மானத்தை வழங்கப் போவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது. ஆனால், ஒரு நோயாளியேனும் கண்டுபிடிக்கப்படவில்லை. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 1979 இல் வைசூரி உலகத்தில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது.

அனர்த்தங்களை எதிர்கொள்ளல்

வெள்ளப்பெருக்கு, பூமியதிர்ச்சி, சூறாவளி, புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் விளைந்த தருணத்திலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட வருவோர் மத்தியில் ஐக்கிய நாடுகள் முதன்மை வகிக்கிறது. ஐக்கிய நாடுகள் விடுக்கும் மனிதாபிமான சேவைகளுக்கான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து, உலகெங்கிலும் வாழும் பல இலட்சக்கணக்கான மக்களுக்கு உதவியாக வழங்கப்படும் தொகையைக் கொண்டு வருடாந்தம் 100 கோடி டொலருக்கும் அதிகமான தொகை சேகரிக்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி சுமாத்ரா தீவுக்கு அருகில் உள்ள கடலின்கீழ் நிகழ்ந்த பாரிய பூகம்பமும், அதன் விளைவாக உருவான பேரலைகளும் கடலைப் பெருக்கெடுக்கச் செய்து இந்தோனேஷியா, இலங்கை உள்ளிட்ட 12 ஆசிய நாடுகளில் இரண்டு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டன. மேலும் பத்து இலட்சம் பேர் பாதிக்கப்பட்டார்கள். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விரைந்து அவசர நிவாரண உதவிகளை முதன்முதலில் வழங்கியவற்றில் ஐக்கிய நாடுகளும் ஒன்றாகும். அவ்வமைப்பு மருந்து வகைகள், உலருணவு, ரின்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள், பாய்கள், கூரைத்தகடுகள், போர்வைகள் போன்றவற்றை விநியோகித்தது. நிவாரணச் சேவைகளை வழங்குவதற்காக முகாம்கள் நிறுவப்பட்டன. மருத்துவ நிபுணர்கள் முகாம்களுக்குச் சென்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

செயலாளர் நாயகம் தலைமையிலான ஐக்கிய நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் மேலதிக நிவாரணங்களை வழங்குவதற்காகவும், நிலைமையை நேரில் கண்டறிவதற்காகவும் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு விஜயம் செய்தார்கள். நிவாரண, மீள்கட்டமைப்பு பணிகளுக்காக 976 மில்லியன் டொலர்களை வழங்கி உதவி செய்யுமாறு ஐக்கிய நாடுகள் முழு உலகத்திற்கும் வேண்டுகோள் விடுத்தது. ஐக்கிய நாடுகளின் பல்வேறு நிறுவனங்கள் இன்றும் பாதிக்கப்பட்ட நாடுகளில் புனர்வாழ்வு பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

### உலகமயமாக்கல் பற்றிய மீளாய்வு

உலக மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிவருகின்றனர். திரைப்படங்களும் ஜனரஞ்சக இசையும் நாட்டுக்கு நாடு விரைவாகப் பரவுகின்றன. முக்கியமான செய்தி நிகழ்வுகள் உலகெங்குமுள்ள தொலைக்காட்சித் திரைகளில் ஒரே நேரத்தில் காட்டப்படுகின்றன. பூகோளத்தின் சகல பகுதிகளிலுமுள்ள மக்களும் செய்மதிமூல தொலைபேசி மற்றும் இன்டர்நெட் என்பவற்றின் வாயிலாக உடனுக்குடன் தொடர்புகொள்கின்றனர்.

இந்த உலகமயமாக்கல் நடைமுறையில் வியாபார நடவடிக்கைகள் பெரும் பங்கினை வகிக்கின்றன. ஜெனிவாவில் நிலைகொண்டுள்ள ஐ.நா. வர்த்தக அபிவிருத்திப் பேரவையின் கணிப்புப்படி, வெளிநாடுகளில் ஏற்படுத்தப்பட்ட தொழில் முயற்சிகளின் சம்பாத்தியம் 1987 ஆம் ஆண்டில் 850 பில்லியன் அமெ. டொலருக்குக் குறைவாக இருந்தது. 1997 இல் 2,100 பில்லியன் அமெ. டொலர் வரை அதிகரித்தது. அதைப்போலவே, உலக வர்த்தகமும் துரித கதியில் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் பெரும் பகுதியானது வட அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள பெரிய பல்தேசிய நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனினும், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களைச் சேர்ந்த வளர்முக நாடுகளின் பங்கும் இப்பொழுது அதிகரித்து வருகிறது.

இதுவரை, உலகமயமாக்கல் நடைமுறையானது வறிய மற்றும் செல்வந்த நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவியுள்ளது. அத்துடன், மக்கள் தாம் விரும்பும் தொழிலை, கலாசாரத்தை அல்லது இருப்பிடத்தைத் தெரிவுசெய்யவும் செல்ல விரும்பும் இடத்திற்குச் செல்லவும் மிக விரிவான வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். எனினும், உலகமயமாக்கலினால் சில சமயங்களில் பாதகமான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன.

1997 இல் முன்னணி நிறுவனங்களின் விற்பனைச் சம்பாத்தியம் பல நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ. உ. உ.) யை விட அதிகமாக இருந்தது

| நாடு அல்லது நிறுவனம் | மொ. உ. உ. அல்லது விற்பனை (பில்லியன் அமெ. டொலர்) |
|---|---|
| ஜெனரல் மோட்டர்ஸ் | 164 |
| தாய்லாந்து | 154 |
| நோர்வே | 153 |
| ஃபோர்ட் மோட்டோர் | 147 |
| மிற்சுயி அண்ட் கோ. | 145 |
| சவுதி அரேபியா | 140 |
| மிற்சுபிசி | 140 |
| போலந்து | 136 |
| இத்தோச்சு | 136 |
| தென்னாபிரிக்கா | 129 |
| ரோயல் டச்சு/ஷெல் குறூப் | 128 |
| மருபெனி | 124 |
| கிரேக்கம் | 123 |
| சுமிட்டோமோ | 119 |
| எக்ஸோன் | 117 |
| டொயோட்டோ மோட்டோர் | 109 |
| வல் மார்ட் ஸ்டோர்ஸ் | 105 |
| மலேசியா | 98 |
| இஸ்ரேல் | 98 |
| கொலம்பியா | 96 |
| வெனிசுவேலா | 87 |
| பிலிப்பீன்ஸ் | 82 |

மூலம் : 'போர்ப்ஸ் சஞ்சிகை/யூஎன்டிபி.

1997 இன் பிற்பகுதியில் தென்கிழக்காசியாவில் தோன்றிய நாணயப் பிரச்சினைகள் ஒரு பங்குச் சந்தை நெருக்கடியாக மாறி, மெதுவாக அசையும் கடலலைபோல ஒரு கண்டத்திலிருந்து மறுகண்டத்திற்குப் பரவிச் சென்றது. 1998 இன் இறுதியளவில், கைத்தொழில் நாடுகள் மட்டுமன்றி வளர்முக நாடுகளும் பொருளாதாரத் "தொற்றுநோயை" அனுபவித்தன. சில நாடுகளில் இதன் தாக்கம் விரைவாக மாறிவிட்டது எனினும், பல ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளினதும் ரஷ்யாவினதும் பொருளாதாரங்களில் இதன் தாக்கம் இன்னும் சில வருடங்களுக்கு உணரப்படும். வறுமையை ஒழிப்பதற்கான ஐ.நா. இலக்குகள் பின்னடைவு கண்டன. நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும், இலட்சக்கணக்கானோர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பொருளாதார உலகமயமாக்கல் நன்கு செயற்படும்போதுகூட- அதாவது, வியாபாரம் பெருவளர்ச்சி காணும்போதுகூட- உலகமயமாக்கலினால் ஆபத்தான பக்க விளைவுகள் ஏற்படக்கூடும். பாரம்பரியங்களும் தேசிய கலாசாரங்களும் ஹொலிவூட், இன்டர்நெட் முதலியவற்றின் செல்வாக்கிற்கு இரையாகிவிடும். முறையான சூழல் பாதுகாப்பு ஒழுங்குகள் இல்லாத நாடுகளில் பிறநாட்டு முதலீட்டாளர்களினால் ஆரம்பிக்கப்படும் புதிய தொழிற்சாலைகள் சுற்றாடலுக்குப் பெரும் தீங்கிழைக்கும். போதைப் பொருள்களும் கறுப்புப் பணமும் உலகெங்கிலும் தாராளமாகப் புழக்கத்திற்கு வரும். தேசிய அரசாங்கங்களினால் பிரயோகிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்வதால், இன ரீதியான பிணக்குகளும் சிவில் யுத்தங்களும் அடிக்கடி தலைதூக்குவதுடன் அவற்றால் பாரதூரமான விளைவுகளும் ஏற்படும்.

உலகமயமாக்கலை அனைவரும் நன்மை பயக்கக்கூடிய வழிமுறையாக மாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் முனைகிறது. உலகமயமாக்கலின் அனுகூலங்களான துரித பொருளாதார அபிவிருத்தி, சிறந்த வாழ்க்கைத் தரம், புதிய வாய்ப்புக்கள் போன்றவை நியாயமான முறையில் பகிரப்படவில்லை. இதன் காரணமாக, உலகமயமாக்கலுக்கு எதிரான சக்திகள் தலைதூக்கியிருக்கின்றன. உலகமயமாக்கல் ஊடாக அனைவருக்கும் நன்மைகள் கிடைக்க வேண்டுமானால், அந்த நடைமுறை மக்களை மையமாகக் கொண்டு செயற்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் நம்புகிறது. தனது அனைத்து முயற்சிகளையும் அந்த இலக்கை நோக்கி நகர்த்தி வருகிறது.

# 5 மனித உரிமைகள்

உலகிலுள்ள ஆறு பேரில் ஒருவர் தினமும் ஒரு டொலருக்குக் குறைவான பணத்திலேயே சீவிக்கிறார். வளர்முக நாடுகளில் பாடசாலைக்குச் செல்லவேண்டிய வயதிலுள்ள 100 மில்லியனுக்கு மேற்பட்ட பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலைகளில் சேர்க்கப்படுவதில்லை. ஆபிரிக்காவின் சகாராப் பிரதேச நாடுகளில் முதலாம் வகுப்பில் சேர்க்கப்படும் பிள்ளைகளில் அரைவாசிக்கும் குறைவானவர்களே ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்றனர். அபிவிருத்தி குன்றிய 48 நாடுகளில் 90 சதவீதமான பெண்கள் இடைநிலைப் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. தொழிலாளர்கள் பாடசாலைக்குச் செல்லும் காலத்தை ஒரு வருடத்தினால் அதிகரிக்க முடியுமாயின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 9% அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். கைத்தொழில் நாடுகளில் வசிக்கும் வளர்ந்தவர்களில் மூன்றிலொரு பங்கிற்கும் அதிகமானோர் உயர்நிலைப் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்வதில்லை. ஆபிரிக்காவில் 20 சதவீதமான பிள்ளைகள் தொழில் செய்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது ; லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்த எண்ணிக்கை 10 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருக்கிறது. கொரியக் குடியரசின் அரசாங்கம் வருடாந்தம் ஒரு ஆளுக்கு 160 அமெ. டொலர் என்ற அடிப்படையில் கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்கிறது ; மலேசியா முதலீடு செய்வது 150 அமெ. டொலர் ; இந்தியா 14 அமெ. டொலர் ; பாகிஸ்தான் 10 அமெ. டொலர் ; பங்களாதேஷ் 5 அமெ. டொலர்.

# 5 மனித உரிமைகள்

**மனித உரிமைகள் என்றால் என்ன ?**

நாம் மனிதப் பிறவிகளாக வாழ்வதற்கு அத்தியாவசியமான உரிமைகளே மனித உரிமைகளாகும். மனித உரிமைகள் இல்லாவிட்டால் நாம் முழுமையாக விருத்தியடையவோ அல்லது எமது மனிதப் பண்புகள், புத்திசாலித்தனம், ஆற்றல்கள், ஆன்மீக உணர்வுகள் முதலியவற்றைப் பயன்படுத்தவோ முடியாதிருக்கும்.

ஐக்கிய நாடுகள் 1948 ஆம் ஆண்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை நிறைவேற்றியபோது மனித உரிமைகள் சம்பந்தமாகச் சகல நாடுகளும் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு பொதுவான தராதரத்தை வகுத்துக் கொடுத்தது. செல்வந்தர்-வறியவர், பலம் பொருந்தியவர்-பலவீனமானவர், ஆண்கள்-பெண்கள் என்ற பேதமின்றி எல்லா இனங்களையும் மதங்களையும் சேர்ந்த சகல மக்களும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதில் தமக்குள்ள கடப்பாட்டினை அரசாங்கங்கள் இந்தப் பிரகடனத்தின் மூலம் ஏற்றுக்கொண்டன. இப்பிரகடனம் கட்டாயமானதொரு சர்வதேசச் சட்டத்தின் அங்கமாக அமையாதபோதிலும் உலக நாடுகளினால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளது.

பிரஜைகளின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும்படி நாடுகளைச் சட்டபூர்வமாக வற்புறுத்தும் பல சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகளும் ஐக்கிய நாடுகளினால் நிறைவேற்றப் பட்டுள்ளன. அவற்றுள் இரு சர்வதேச ஒப்பந்தங்கள் அதிமுக்கியமானவை. ஒன்று- பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றியது. மற்றது- குடியுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் சம்பந்தமானது. இவ்வுடன்படிக்கைகளும் கட்டாயமற்ற வேறு இரண்டு இணைப்பு ஒப்பந்தங்களும் சேர்ந்து "மனித உரிமைகளின் சர்வதேசச் சட்டவாக்கம்" என்று அழைக்கப் படுகின்றன.

**ஒவ்வொரு பிள்ளையும் இவற்றைப் பெற உரிமை கொண்டுள்ளது.**

+ தனக்கென ஒரு பெயரும் தனக்கென ஒரு நாடும்
+ பாலியல் துஷ்பிரயோகம் உட்படச் சகலவிதமான வன்முறைகளிலிருந்தும் பாதுகாப்பு.
+ கல்வி
+ சிந்தனைச் சுதந்திரம்



**• சிறுவர்கள் மனித உரிமைகளைக் கொண்டுள்ளார்களா ?**

பொதுவாக, வளர்ந்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகளையே சிறுவர்களும் கொண்டுள்ளனர். எனினும், அவர்கள் பராயமடையாதவர்களாக இருப்பதால் அவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். 1989 இல் நிறைவேற்றப்பட்ட சிறுவர் உரிமைகள் ஒப்பந்தம் 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட எவரும் தனது ஆற்றல்களை முழுமையாக விருத்தி செய்யவும் பசி, வறுமை, புறக்கணிப்பு, துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும் கொண்டுள்ள தனிப்பட்ட உரிமைகளை எடுத்துக்கூறுகின்றது. ஐக்கிய அமெரிக்கா, சோமாலியா என்பன தவிர்ந்த சகல நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை ஏற்கனவே சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளன அல்லது முறையாக அங்கீகரித்துள்ளன.

வாழ்க்கைக்கான உரிமையே இந்த உரிமைகளுள் மிக அடிப்படையானது. ஆரோக்கியமான, அமைதியான சூழலில் வாழவும் வளரவும் ஒவ்வொரு பிள்ளையும் உரிமை கொண்டுள்ளது.

**ஐ.நா. உதவியினால் ஏற்படுத்தப்பட்ட ஏனைய மனித உரிமைச் சட்டங்களும் ஒப்பந்தங்களும் எவை ?**

பெண்கள், பிள்ளைகள், வலது குறைந்தவர்கள், சிறுபான்மையினர், பழங்குடி மக்கள் போன்ற வலிமை குறைந்த பிரிவினருக்காக 70 க்கு மேற்பட்ட மனித உரிமை உடன்படிக்கைகளும் பிரகடனங்களும் ஐக்கிய நாடுகளின் முயற்சியினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான வலிமைமிக்க ஆயுதங்களாக விளங்கும் அவை, உலகெங்கிலும் ஒரு "மனித உரிமைக் கலாசாரம்" தோன்றுவதற்கு வழிகோலியுள்ளன. அவற்றுட் சில :

* இன ஒழிப்புக் குற்றத்தைத் தடுக்கும் ஒப்பந்தம் (1948) ஒரு தேசிய, இன, சாதி அல்லது மதப் பிரிவை முழுமையாக அல்லது பகுதியாக ஒழித்துக்கட்டும் நோக்குடன் புரியப்படும் சில செயல்களை இன ஒழிப்புக் குற்றங்களாக வரையறுத்துக் காட்டுகின்றது.

* சித்திரவதை மற்றும் அதுபோன்ற கொடிய, மனிதப் பண்புக்கு ஒவ்வாத கீழ்த்தரமான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு எதிரான ஒப்பந்தம் (1984) சித்திரவதைகளைத் தடுப்பதும் அவற்றைத் தண்டனைக்குரிய குற்றங்களாக்குவதும் அரசாங்கங்களின் பொறுப்பு என்பதை வலியுறுத்துகிறது.

* சகலவிதமான இனப் பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம் (1966) இனப் பாரபட்சங்களை ஒழிக்கும் பொறுப்பினை அரசாங்கங்களின் மீது சுமத்தியுள்ளது.

* பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான ஒப்பந்தம் (1979) இத்தகைய பாரபட்சங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கங்களைத் தூண்டுகின்றது.

**சர்வதேசச் சட்டங்களை நிறைவேற்றுவதைவிட வேறு என்ன வழிகளில் ஐ.நா. மனித உரிமைகளைப் பாதுகாக்கிறது ?**

சட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதை ஐ.நா. பின்வரும் வழிகளில் ஊக்குவிக்கிறது :

* நாடுகளின் மனித உரிமைச் செயற்பாடுகளைக் கண்காணிக்க ஐ.நா. ஆறு குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும்படி சம்பந்தப்பட்ட அரசாங்கங்களைக் கோருவதற்கும் கண்டனங்கள் மற்றும் சிபாரிசுகள் சகிதம் தமது தீர்மானங்களை வெளியிடுவதற்கும் உரிமை கொண்டுள்ளன.

* தகவல்களைச் சேகரித்து, ஆட்களைச் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுடன் உரையாடி, மனித உரிமைகளுக்கு அளிக்கப்படும் மதிப்பை மேம்படுத்துவதற்கான வழிகளைச் சிபாரிசு செய்யும் பொருட்டு விசேட தொடர்பாளர்கள் என்று அழைக்கப்படும் பிரதிநிதிகளை ஐ.நா. நியமிக்கிறது.

* திருமதி எலனர் ரூஸ்வேல்ட், ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் முதற் பெண்மணி, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் பெரிய பிரதியொன்றைப் பார்க்கிறார். பிரகடனத்தின் சிருஷ்டி கர்த்தாக்களில் அவரும் ஒருவர்.



* தன்னிச்சையான மற்றும் சட்டபூர்வமற்ற தடுப்புக் காவல் போன்ற பிரச்சினைகளை விசாரிக்கச் செயற் குழுக்களை அமைக்கிறது. மனித உரிமை மீறல்கள் பற்றி அவை சமர்ப்பிக்கும் அறிக்கைகள் சர்வதேச கவனத்தை ஈர்க்க உதவுகின்றன.

* தேசிய ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் நீதிமன்றங்கள், பாடசாலைகள் போன்ற அமைப்புக்களைப் பலப்படுத்தத் தொழில்நுட்ப உதவி வழங்குகிறது.

* மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றிச் சர்வதேச மாநாடுகளை நடத்தி, மனித உரிமை விடயங்களில் வெளிப்படையான அக்கறை காட்டும்படி அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்கிறது.

**தனிப்பட்டவர்கள் தமது மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி முறைப்பாடு செய்யலாமா ?**

ஆம். தனிப்பட்டவர்களும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க இடமளிக்கும் சில ஐ.நா. உடன்படிக்கைகள் உள்ளன. ஆனால், எந்த அரசாங்கத்திற்கு எதிராக முறைப்பாடு செய்யப்படுகிறதோ அந்த நாடு அவ்வுடன்படிக்கைகளை அங்கீகரித்திருக்க வேண்டும். மோசமானதும் தொடர்ச்சியானதுமான உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள், உள்நாட்டுப் பரிகார வழிகள் எதுவும்

சகல

மனிதர்களும்

சுதந்திர

புருஷர்களாகவும்

சமத்துவம்

வாய்ந்த

மக்களாகவுமே

பிறக்கின்றனர்.



இவற்றுக்கான
உரிமை
அனைவருக்கும்
உண்டு :

வாழ்க்கை,
சுதந்திரம்,
பாதுகாப்பு

கருத்து
வெளிப்பாட்டுச்
சுதந்திரம்

அடிமைத்
தனத்திலிருந்து
விடுதலை

நீதியான
விசாரணை

சட்டத்தின்
முன்னிலையில்
சமத்துவம்



பயனளிக்காத பட்சத்தில், ஓர் இரகசியத் தொடர்பாடல் நடைமுறையின் மூலம் ஐ.நா. வின் கவனத்திற்குக் கொண்டுவரப்படலாம்.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் 24 மணிநேர தொலைநகல் தொடர்பு வழியொன்றை ஏற்படுத்தியிருக்கிறார். மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் உறவினர்கள் அல்லது வேறு ஆட்கள் இந்த வழியினூடாக முறைப்பாடுகளைச் செய்யலாம். சுவிற்சர்லாந்து, ஜெனீவாவிலுள்ள இந்த தொலைநகல் இலக்கம் : 41-22-917-0092 என்பதாகும்.

**ஐ.நா. உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட வேறு சர்வதேசச் சட்டங்கள் எவை ?**

நவீன போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்களின் காரணமாக உலகம் சுருங்கியுள்ளது. எனவே, நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு இடமளிக்கும் வகையில் கூடுதலான சர்வதேசச் சட்டங்கள் தேவைப்படுகின்றன. ஐ.நா. வில் அங்கம் வகிக்கும் நாடுகள் கடந்த 50 ஆண்டுகளில் 480 க்கு மேற்பட்ட சர்வதேசச் சட்டங்கள் குறித்து உடன்பாடு கண்டுள்ளன. மனிதகுல வரலாற்றின் எஞ்சிய காலப்பகுதி முழுவதிலும் இவ்வளவு அதிகமான சட்டங்கள் வரையப்பட்டதில்லை. கடல்களின் நிர்வாகம் முதல் போதை மருந்துக் கட்டுப்பாடு ஈறாகவும் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முதல் தபால் விநியோக ஈறாகவும் விண்வெளி முதல் சுற்றாடல் பாதுகாப்பு ஈறாகவும் பல்வேறு துறைகளில் ஐ.நா. உதவியுடன் இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் சர்வதேச ஒத்துழைப்பிற்கு அடித்தளமிட்டுள்ளன.

**இச்சட்டங்களுள் பின்வருவனவும் அடங்கும் :**

* உடன்படிக்கைகளின் சட்டம் பற்றிய ஐ. நா. ஒப்பந்தம் (1968/1969).
* பண்டங்களின் சர்வதேச விற்பனை ஏற்பாடுகள் பற்றிய ஐ.நா. ஒப்பந்தம் (1980).
* கடற் சட்டம் பற்றிய ஒப்பந்தம் (1994).
* போதை மருந்துகளின் கள்ளக் கடத்தலுக்கு எதிரான ஒப்பந்தம் (1988)

போக்குவரத்துச் சுதந்திரம்

நாட்டுரிமை

திருமணம் செய்து குடும்பத்தை உருவாக்கும் உரிமை

தொழில்

சம வேலைக்குச் சம சம்பளம்



**ஐ. நா. அண்மையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினை உருவாக்கியது. அத்தகைய ஒரு நீதிமன்றம் அவசியந்தானா?**

ஆம், இத்தகைய ஒரு நீதிமன்றம் எமக்குத் தேவையானதுதான். தேசிய நீதிமன்றங்கள் செயற்பட முடியாத அல்லது செயற்பட விரும்பாத நிலைமைகளில் மட்டுமே இந்த நீதிமன்றம் செயற்படும். துரதிஷ்டவசமாக, யுத்தம் நிலவும் சில நாடுகளில் இத்தகைய குற்றங்களைச் சரியான முறையில் விசாரிப்பதற்குத் தகுந்த நீதிமன்றங்கள் இல்லாதிருக்கலாம். ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் தமது பிரஜைகளை, குறிப்பாக உயர் பதவிகளிலுள்ளவர்களை, விசாரிக்க மனமில்லாது இருக்கலாம். எனவே, அத்தகைய சந்தர்ப்பங்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒரு சிறந்த மாற்றுவழியாகும்.

1998 ஆம் ஆண்டு ரோமாபுரியில் கூடிய 160 நாடுகள் நிரந்தரமான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை அமைக்க இணங்கின. இன ஒழிப்பு, யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் முதலியவற்றைப் புரிவோர் இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார்கள். 60 அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் ஒப்பந்தத்தை அங்கீகரித்த பின்னர் நீதிமன்றம் செயற்படத் தொடங்கும்.

---

மேலும் அறிய : www.unhchr.ch, www.un.org/icc

---

உலகெங்கும் பெண் பிள்ளைகள் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது. பொதுவாக, அவர்களுக்கு ஆண் பிள்ளைகளை விடக் குறைவாகவே உணவு கொடுக்கப்படுகிறது. பல நாடு களில் 5 அல்லது 6 வயதான சிறுமிகள் கூட நீண்ட நேரம் வேலைசெய்ய நிர்ப்பந் திக்கப்படுகின்றனர். 6 வயதிற்கும் 11 வயதிற்கும் இடைப்பட்ட 80 மில்லியன் சிறுமிகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. ஐக்கிய நாடுகள் 1989 இல் நிறைவேற்றிய "சிறுவர்களின் உரிமை"

தகவல் ஏடு

சிறுமிகளைப் பாடசாலைக்கு அனுப்புதல்



"பாகிஸ்தானில் ஆப்கான் அகதிகளுக்கான பாடசாலையில் பயிலும் சிறுமிகள். மாதத்திற்கு 20 தினங்களாவது பள்ளிக்குச் செல்லும் சிறுமிகளின் குடும்பங்களுக்கும் மாதம் முழுவதும் வேலைசெய்யும் அவர்களின் ஆசிரியைகளுக்கும் உலக உணவுத் திட்டம் 4 லீற்றர் சமையல் எண்ணெய்யை வழங்குகிறது.

உடன்படிக்கை சிறுமிகளின் கல்விக்குக் கூடுதலான பணத்தைச் செலவிடுமாறு உலக நாடுகளின் அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்கிறது. ஐ.நா. வின் முயற்சி காரணமாக, ஆரம்பப் பாடசாலை செல்லும் வயதை அடைந்த 77 சதவீதமான பிள்ளைகள் இப்பொழுது பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். 1960 இல் இருந்த 50 சதவீதத்திற்கும் குறைவு என்ற நிலையுடன் ஒப்பிடு கையில் இது நல்ல முன்னேற்றமாகும். எனி னும், இதனை இன்னும் முன்னேற்ற வேண்டியுள்ளது.




அனைவருக்கும் எழுத்தறிவை வழங்குவதற்கு அடுத்த பத்து ஆண்டுகளில் ஒவ்வொரு வருடமும் 7 பில்லியன் அமெ. டொலர்கள் மட்டுமே மேலதிகமாகத் தேவைப் படும். ஐரோப்பிய மக்கள் ஐஸ் கிறீம் வாங்குவதற்காக ஆண்டொன்றிற்கு 11 பில்லியன் அமெ. டொலர்களைச் செலவிடுகின்றனர்.

---

மூலம் : யுனிசெப்

---



## இன ஒதுக்கல் : மனித குலத்திற்கு எதிரான குற்றம். ஐ.நா. அதனை எதிர்த்துப் போராடுகிறது

தென்னாபிரிக்க வெள்ளையினத்தவர் பேசும் "அப்ரிகான்ஸ்" மொழியில் "அப்பாரதீற்" என்றால் ஒதுக்கிவைத்தல் என்று அர்த்தமாகும். தென்னாபிரிக்காவில் 80 சதவீத மக்கள் கறுப்பு இனத்தவராக இருந்தபோதிலும் சிறுபான்மை வெள்ளையினத்தவரே நீண்ட காலமாக அந்நாட்டை ஆண்டு வந்தனர். ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த இன ஒதுக்கல் கொள்கையின் காரணமாக கறுப்பு இனத்தவர்களின் மிக அடிப்படையான மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்டன. இன ஒதுக்கல் என்பது மனிதகுலத்திற்கு எதிரான குற்றச் செயலெனக் கண்டித்த ஐக்கிய நாடுகள் அமைப்பு, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அக்கொள்கைக்கு எதிரான இயக்கத்தை இடைவிடாது மேற்கொண்டது. ஈற்றிலே, 1994 ஏப்ரல் மாதம் தென்னாபிரிக்காவில் முதன் முறையாக ஐ.நா. உதவியுடன் நடத்தப்பட்ட சுதந்திரமான, பல்லினத் தேர்தல்களைத் தொடர்ந்து இன ஒதுக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. வெள்ளையின ஆட்சியாளர்களினால் பல ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலே இன ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட புதிய தென்னாபிரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஆனார்.



## வேலை செய்யும் பிள்ளைகள்

பத்து வயதான ஷிரீன் தோட்டியாக வேலை செய்கிறாள். அவள் ஒருபோதும் பாடசாலைக்குச் சென்றதில்லை. ஆனால், வாழ்க்கையின் பொருளாதாரத் தத்துவங்களை அவள் நன்கு அறிந்து வைத்திருக்கிறாள். 30 முதல் 50 சதம் பெறுமதியான கழிவுக் கடதாசியை அல்லது பிளாஸ்டிக் பைகளை விற்றால் அன்றைய சாப்பாட்டை வாங்கலாம். சம்பாத்தியம் குறைவாக இருந்தால் பட்டினி. இதுதான் தெருவோரங்களில் சீவியம் நடத்தும் பிள்ளைகள் எதிர்நோக்கும் கொடுமை.

ஷிரீனைப்போல இலட்சக்கணக்கான பிள்ளைகள் வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக நகர்ப்புற வீதிகளில் ஏதாவது வேலை செய்கிறார்கள். அவர்களில் பலருக்கு வசிப்பிடமும் வீதிகள்தான். பெரும்பாலும் வளர்முக நாடுகளில் (செல்வந்த நாடுகளிலும் இல்லாமலில்லை) காணப்படும் இப்பிள்ளைகளுக்குக் குப்பைமேடுகள் சிறந்த "பொக்கிஷக் களஞ்சியங்கள்" ஆவதுண்டு. பிளாஸ்டிக் பைகள், பழைய டயர்கள், பழைய வாகனப் பாகங்கள், வெற்றுப் போத்தல்கள், தகரங்கள் முதலியன சேகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. உதாரணமாக, பிலிப்பீன்ஸ் தலைநகரான மணிலாவிலுள்ள "புகைமலை" என்ற பிரசித்திபெற்ற குப்பை மேட்டில் ஆறு மணித்தியாலங்கள் பொருள்களைச் சேகரிக்கும் ஒரு சிறுவன் அதற்கு அருகிலுள்ள தொழிற்சாலையில் 10 மணிநேரம் வேலை செய்யும் ஒரு பெரிய ஆளைவிடக் கூடுதலாகச் சம்பாதிப்பான்.

ரஜனி என்ற 13 வயதுச் சிறுமி, வளையல் தொழிச்சாலை ஒன்றில் வேலை செய்கிறாள். அவள் வசிப்பதும் அங்குதான். இத்தொழிற் சாலையில் எல்லாமாக 200,000 க்கு அதிக மானோர் வேலை செய்கின்றனர். அவர்களில் 50,000 பேர் பிள்ளைகள். கண்ணாடி வளையல்கள் 1,500 முதல் 1,800 பாகை சென்ரிகிறேட் வரையிலான வெப்பநிலையில் உருக்கி வார்க்கப்படும் உலைகளுக்கு அருகே இச்சிறுவர்கள் வேலை செய்கின்றனர். அஸ்பெஸ்டஸ் போன்ற நச்சு மூலகங்களின் தாக்கத்திற்கும் அவர்கள் இலக்காகக்கூடும். நாள் முடிவில் ரஜனிக்குக் கிடைக்கும் சம்பளம் 40 அமெ. சதத்திற்குச் சமமான தொகை மட்டுமே. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு உதாரணங்களும், பிள்ளைகள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள், ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஐ.நா. விரும்புகிறது. ஆகக்குறைந்த வயதெல்லை சம்பந்தமாக சர்வதேச தொழில் தாபனம் ஏற்படுத்திய 138 ஆம் இலக்க ஒப்பந்தம் 15 வயதிற்குக் கீழ்ப்பட்ட எவரும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படலாகாது என்றும் 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் அபாயம் நிறைந்த வேலைகளில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் வரையறை செய்கிறது.

# 6 60 வருட கால முன்னேற்ற அறிக்கை

மிகவும் சிறந்த, மிகவும் பாதுகாப்பான, மிகவும் நியாயமான உலகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஆரம்பகாலம் முதல் ஐக்கிய நாடுகளின் இலட்சியமாக இருந்தது. இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக ஐக்கிய நாடுகளும் அதன் நிறுவனங்களும் 1945 ஆம் ஆண்டு தொடக்கம் நிறைவேற்றிய பணிகள் சுருக்கமாக தரப்படுகின்றன.

### அமைதியையும் பாதுகாப்பையும் பேணுதல்

அமைதி காப்பதற்காகவும் போர் நிறுத்தங்களை கண்காணிப்பதற்காகவும் 56 இயக்கங்களை ஸ்தாபித்து, பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அமைதியான பின்னணியை ஏற்படுத்தவும் பல இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைப் பேணிப் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளால் முடிந்தது. தற்போது, அமைதி காக்கும் 14 நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

### அமைதி காத்தல்

இதுவரை 176 பிராந்திய நெருக்கடிகளை அமைதி வழியில் சமரசம் செய்த பெருமையை ஐக்கிய நாடுகள் கொண்டிருக்கிறது. ஈரான்-ஈராக் போருக்கு முடிவு கட்டியமை, ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகளை வெளியேற்றியமை, எல்சல்வடோர், கௌத்தமாலா ஆகிய நாடுகளின் யுத்தத்தை நிறுத்தியமை, கிழக்குத் தீமோருக்கு சுயாட்சி பெற்றுக்கொடுத்தமை போன்றவற்றை சமீபத்தைய வெற்றிகளாகக் குறிப்பிட முடியும். ஐக்கிய நாடுகள் போர் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக ஆரவாரமற்ற ராஜதந்திர முறைகளையே பயன்படுத்தியது.

### காலனித்துவ நாடுகளுக்கு விடுதலை

1945 ஆம் ஆண்டில் 750 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் காலனித்துவ நாடுகளிலோ, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலோ வசித்து வந்தார்கள். இவ்வாறான மக்களைக் கொண்ட 80 நாடுகள் விடுதலை பெற்று ஐக்கிய நாடுகளின் அங்கத்துவம் பெற்றிருக்கின்றன. இன்று காலனித்துவ ஆட்சியின்கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியனைத் தாண்டவில்லை. இவர்களுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் ஈடுபட்டிருக்கிறது.

### ஜனநாயக மேம்பாடு

இன்று உலகில் உள்ள அரசுகளில் 60 சதவீதமானவை ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்படுபவையாகும். 1986 ஆம் ஆண்டில் இது 40 சதவீதமாக காணப்பட்டது. ஐக்கிய நாடுகள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடத்துவதற்கு ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு உதவி செய்திருக்கிறது. கம்போடியா, நமீபியா, எல்-சல்வடோர், எரிட்ரியா, மொசாம்பிக், நிக்கரகுவா, தென்னாபிரிக்கா, கிழக்குத் தீமோர், ஆப்கானிஸ்தான் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

### அபிவிருத்தியை அடைதல்

ஐக்கிய நாடுகள் முறையின் ஊடாக வளர்முக நாடுகளுக்கு கடனாகவும் உதவியாகவும் ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும் தொகை 10 பில்லியன் டொலர்களைத் தாண்டுகிறது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மிகப்பெரிய பலதரப்பு அபிவிருத்தி உதவி மூலமாகக் காணப்படுகிறது. அது அங்கத்துவ நாடுகளின் அரசாங்கங்கள், ஐக்கிய நாடுகளின் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிப் பணியாற்றி 5,000 இற்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு நிதியுதவி செய்கிறது. இதற்காக செலவழிக்கப்படும் தொகை 1.3 பில்லியன் டொலர்களைத் தாண்டுகிறது. அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கான நிதித் திட்டமிடலில் முன்னணி வகிக்கின்ற உலக வங்கி 1946 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கியுள்ள கடன்தொகை 350 பில்லியன் டொலர்களை எட்டுகிறது. 2003 ஆம் ஆண்டு 100 நாடுகளுக்கு 18.5 பில்லியன் டொலர்கள்

வழங்கப்பட்டன. அதனைவிடுத்து ஐக்கிய நாடுகள் சிறுவர் ஸ்தாபனம் (Unicef) 138 நாடுகளில் சிறுவர்களுக்கான தடுப்பு மருந்தேற்றல், சுகாதார சேவைகள், போஷாக்கு, கல்வி நடவடிக்கைகளுக்காக 800 மில்லியன் டொலர்களை செலவழிக்கிறது.

#### மனித உரிமை மேம்பாடு

கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதரும் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டிய உரிமைகள் எவ்வாறானவை என்பதைக் குறிப்பிடும் மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலக சாசனம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இந்த ஆவணம் அரசியல், சிவில், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பல ஒப்பந்தங்களுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. மனித உரிமை மீறல்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு சித்திரவதைகள், நபர்கள் காணாமல் போதல், முறையற்ற விதத்தில் தடுத்து வைக்கப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக உலகத்தின் கவனத்தை ஈர்த்து, மனித உரிமை மேம்பாடு தொடர்பாக அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது.

#### சுற்றாடல் பாதுகாப்பு

ஐக்கிய நாடுகள் உலக சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களை வடிவமைப்பதில் முக்கிய பங்கை வகித்தது. 1992 ஆம் ஆண்டு ரியோ-டி-ஜெனிரோ நகரில் இடம்பெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு, புவி மாநாடு, உயிர்ப்பன்முகத் தன்மை மற்றும் சுவாத்திய மாற்றங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் பலவற்றிற்கு வழிவகுத்தன. நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டமான "21 ஆவது நிகழ்ச்சி நிரல்" (Agenda 21) அனைத்து நாடுகளின் இணக்கப்பாட்டுடனும் நிறைவேற்றப்பட்டது. பூமியின் ஓசோன் படலத்தை பாதுகாக்கும் நோக்கிலான மொன்ரியேல் பிரகடனம் என்ற ஆவணத்தை உருவாக்குவதிலும் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் பிரிவு முக்கிய பங்காற்றியது.

#### சர்வதேச சட்டங்களை உருவாக்குதல்

மனித உரிமைகள் தொடக்கம் விண்வெளி ஆராய்ச்சி வரையிலான உடன்படிக்கைகள் வரை பலதரப்பட்ட விடயங்களைக் கையாளக்கூடிய 300 க்கு மேற்பட்ட சர்வதேச உடன்படிக்கைகள் ஐக்கிய நாடுகளின் முயற்சியுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

#### தென்னாபிரிக்காவில் நிற பேதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்

ஆயுதத் தடைகளை விதித்தது தொடக்கம் நிறபேத விளையாட்டுக்களுக்கு எதிரான ஒப்பந்தத்தை வரைந்தது வரை பலதரப்பட்ட நடைமுறைகளை அமுல்செய்து கறுப்பர்கள்-வெள்ளையர்கள் என்ற நிறபேதத்தை ஒழிப்பதற்கு ஐக்கிய நாடுகள் முன்னின்று பாடுபட்டது. பொதுச்சபையில் "மனிதகுலத்திற்கு எதிரான குற்றச்செயல்" என்றே நிறபேதம் வர்ணிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் சமமான முறையில் பங்குபற்றினார்கள். அதன் பின்னர் பெரும்பான்மையைப் பெற்ற அரசாங்கம் நிறுவப்பட்டது.

#### நெருக்கடிகளில் சிக்கியோருக்கு நிவாரணம் அளித்தல்

யுத்தம், படுகொலைகள், சித்திரவதைகள் போன்றவற்றால் நிர்க்கதியான 30 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம், ஐக்கிய நாடுகளின் ஏனைய நிறுவனங்களுடன் சேர்ந்து 1951 ஆம் ஆண்டு முதல் நிவாரணங்களை வழங்கியுள்ளது. சமகாலத்தில் அகதிகளின் எண்ணிக்கை 19 மில்லியனைத் தாண்டுகிறது. இந்த எண்ணிக்கையில் அனேகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு உணவு, இருப்பிடம், மருத்துவம், கல்வி ஆகியவற்றுடன் தாயகம் திரும்புவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

பெண்ணுரிமை மேம்பாடு

பெண்களின் வாழ்க்கை, அபிவிருத்தி, தம்து வாழ்க்கையைத் தாமே வடிவமைத்துக் கொள்ளல் போன்ற விடயங்களில் அவர்களை வலுப்படுத்துவது ஐக்கிய நாடுகளின் நெடுநாள் நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் ஏற்பாடு செய்த பெண்கள் தொடர்பான சர்வதேச மாநாடுகளில் மகளிர் அபிவிருத்திக்கான பல நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மகளிர் உரிமைகள் தொடர்பான சாசனமும் உருவாக்கப்பட்டது.

வைசூரியை ஒழித்தல்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 13 வருட கால முயற்சியின் பலனாக 1980 ஆம் ஆண்டு வைசூரியை பூமியில் இருந்து முற்றாக ஒழித்துக்கட்ட முடிந்தது. இதன் மூலம் தடுப்பு மருந்தேற்றல், கண்காணித்தல் நடவடிக்கைகளுக்காக செலவான ஒரு பில்லியன் டொலரை சேமிக்கக்கூடியதாக இருந்தது. இது வைசூரியை ஒழிப்பதற்காக செலவழிக்கப்பட்ட தொகையின் மூன்று மடங்கிற்கு சமமானதாகும். உலகின் மேற்கு அரைக்கோளத்தில் இருந்து போலியோவை ஒழித்துக்கட்டுவதற்கும் உலக சுகாதார ஸ்தாபனம் உதவியது.

உலகளாவிய தடுப்பு மருந்தேற்றல்

போலியோ, ஏற்புவலி, சின்னம்மை, குக்கல், தொண்டைக்கரப்பான், ஷயரோகம் போன்றவை இன்னமும் ஒவ்வொரு வருடமும் 80 இலட்சம் சிறுவர்களைப் பலிகொள்கின்றன. 1974 ஆம் ஆண்டு இந்த நோய்களுக்கான தடுப்பு மருந்துகளை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களில் 5 சதவீதமானோர் மாத்திரமே பெற்றார்கள். ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் முயற்சியால் தடுப்பு மருந்தேற்றல் 80 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஒவ்வொரு வருடமும் 30 இலட்சம் சிறுவர்களின் உயிர்களைப் பாதுகாக்க முடிந்துள்ளது.

வளர்முக நாடுகளில் முதலீட்டு ஊக்குவிப்பு

வடக்கு-தெற்கு, தெற்கு-தெற்கு, மேலைத்தேய-கீழைத்தேய நாடுகளுக்கு மத்தியில் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை ஐக்கிய நாடுகள் நிறைவேற்றுகிறது. இந்தப் பணிகள் ஐக்கிய நாடுகள் தொழில்நுட்ப அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளல்

இயற்கையாலும் மனிதனாலும் தோற்றுவிக்கப்படும் அனர்த்தங்களின் அழிவுதரும் விளைவுகளில் இருந்து பத்து இலட்சம் மக்களைக் காப்பாற்றுவதற்கு உலக வானிலை அறிவியல் அமைப்பால் முடிந்திருக்கிறது.

ஆயிரக்கணக்கான நிலப்பகுதிகளைக் கண்காணித்தல், செய்மதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனர்த்த முன்னெச்சரிக்கை முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வரட்சியைக் கட்டுப்படுத்துவதற்கும் எண்ணெய்ப் படிமங்களைக் கண்டறிவதற்கும் உதவி செய்கிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள்

உலக உணவுத் திட்டம் ஒவ்வொரு வருடமும் 2 மில்லியன் தொன்களுக்கு அதிகமான உணவுப் பொருட்களை விநியோகிக்கிறது. இதனால், கடும் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் 30 மில்லியனுக்கு அதிகமான மக்கள் பயனடைகிறார்கள்.

### கண்ணிவெடிகளை அகற்றுதல்

ஐக்கிய நாடுகள் உள்ளூர் மோதல்கள் இடம்பெறும் பல நாடுகளில் கண்ணிவெடிகளை அப்புறப்படுத்தும் சர்வதேச முயற்சிகளில் முன்னணி வகிக்கிறது. ஆப்கானிஸ்தான், அங்கோலா, கம்போடியா, எல்-சல்வடோர், மொஸாம்பிக், ருவாண்டா, சோமாலியா, இலங்கை ஆகிய நாடுகள் அவற்றுள் சிலவாகும். கண்ணிவெடிகளில் சிக்கி ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கிறார்கள், அங்கவீனமுறுகிறார்கள்.

### சனத்தொகையை திட்டமிடல்

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் தனது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் குடும்பங்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு தத்தமது வாழ்க்கையை கட்டமைத்துக் கொடுக்கக்கூடிய வலுவைப் பெற்றுக்கொடுக்கிறது. இந்தப் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதன் பயனாக, வளர்முக நாடுகளில் பிரசவங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. 1960 ஆம் ஆண்டு ஒரு பெண்ணுக்கு ஆறு குழந்தைகள் என்றிருந்த எண்ணிக்கை தற்போது 3.5 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. 1960 இல் உலகத்தின் 10 சதவீதமான குடும்பங்கள் பயனுள்ள குடும்பத் திட்டமிடல் முறைகளைப் பயன்படுத்தின. இன்று அது 55 சதவீதமாக அதிகரித்துள்ளது.

### போதைப்பொருளுக்கு எதிரான போர்

ஐக்கிய நாடுகளின் சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் திட்டம் (UNDCP) சட்டவிரோத போதைப் பொருட்களுக்கு எதிரான கேள்வியைக் குறைப்பதற்கும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறது. வருவாய்க்காக போதைப்பொருள் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளை அதில் இருந்து விடுவித்து, மாற்று வருவாய் முறைகளை அறிமுகப் படுத்துவதற்கும் உதவி செய்திருக்கிறது.

### பொருளாதார மறுசீரமைப்பை ஊக்குவித்தல்

ஐக்கிய நாடுகள் பல நாடுகளில் பொருளாதார முகாமைத்துவ வளர்ச்சிக்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றுடன் இணைந்து விரிவான பணிகளைப் பூர்த்திசெய்திருக்கிறது. அரசுகளின் நிதித்துறை சார்ந்த அதிகாரிகளைப் பயிற்றுவித்தல், தற்காலிக கொடுப்பனவு நிலுவை இடர்ப்பாடுகளை எதிர்கொண்டிருக்கும் நாடுகளுக்கான நிதித் திட்டமிடல் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

### தொழிலாளர் உரிமை மேம்பாடு

சர்வதேச தொழில் ஸ்தாபனம் தொழிலாளர் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கும் எப்போதும் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது. ஒன்றுகூடும் சுதந்திரம், அமைப்பாக சேரும் உரிமை, ஆதிவாசிகள் மற்றும் பழங்குடிகளின் உரிமைகள், வேலைவாய்ப்பு மேம்பாடு, சமமான சம்பள வேறுபாடு, சிறுவர் உழைப்புச் சுரண்டலை ஒழித்தல் போன்றவை முன்னுரிமை வழங்கப்படும் விடயங்களாகும்.

### உலகின் சமுத்திர பயன்பாட்டை சீர்செய்து, நிலையான தன்மையை ஏற்படுத்தல்

1994 ஆம் ஆண்டு அமுலான ஐக்கிய நாடுகள் சமுத்திர சட்ட பிரகடனம் சமுத்திர மற்றும் கடல் நிர்வகிப்பு தொடர்பான முக்கியமான முயற்சியாகும். இந்தப் பிரகடனத்தில் கடற்பரப்பு சார்ந்த அதிகாரங்கள், எல்லை நிர்ணயம், ஆழ்கடல் கடற்படை பயணங்கள், கரையோர மற்றும் ஏனைய அரசுகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள், கடல்சார்ந்த சூழலை பேணிப்பாதுகாப்பது தொடர்பான பொறுப்புக்கள், சமுத்திரவியல் ஆராய்ச்சிகளை வழிநடத்தல், கடல்வாழ் உயிரினங்களை பாதுகாத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்டங்கள் உள்ளன.

**புலமைச்சொத்துக்களை பாதுகாத்தல்**

உலக புலமைச் சொத்து ஸ்தாபனம் (WIPO) புதிய படைப்புக்களுக்கு பாதுகாப்பு வழங்கி, 30 இலட்சத்திற்கும் அதிகமான விளம்பரச் சின்னங்கள் தொடர்பான ஆவணத்தைப் பேணுகிறது.

**பெண்களின் எழுத்தறிவை மேம்படுத்தல்**

பெண்களின் கல்வி வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் இலக்காகக் கொண்ட திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. இவற்றின் மூலம், வளர்முக நாடுகளில் 1970 ஆம் ஆண்டு 36 சதவீதமாகக் காணப்பட்ட பெண்-எழுத்தறிவு 1995 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக அதிகரித்தது.

**வரலாற்றுச் சிறப்புமிக்க, கலாசார, புராதன ஸ்தலங்களைப் பேணிப் பாதுகாத்தல்**

யுனெஸ்கோவின் முயற்சியால் இலங்கை, கிரேக்கம், எகிப்து, இத்தாலி, இந்தோனேஷியா, கம்போடியா உள்ளிட்ட 81 நாடுகளில் வரலாற்றுச் சின்னங்களை பேணிப் பாதுகாக்க முடிந்திருக்கிறது. கலாசார மதிப்புடைய சொத்துக்களை பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச பிரகடனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

# 7 ஐக்கிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு

ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகள் முதலில் தொடங்கிய வளர்முக நாடுகள் சிலவற்றில் இலங்கையும் ஒன்றாகக் காணப்பட்டது. 1955 ஆம் ஆண்டு திசெம்பர் 14 ஆந் திகதி இலங்கை ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் பெறுவதற்கு முன்னதாகவே 1952 ஆம் ஆண்டளவில் இத்தகைய உறவுகள் ஏற்பட்டன.

ஐக்கிய நாடுகளின் 11 ஸ்தாபனங்களது காரியாலயங்களைக் கொண்டதாக இலங்கையில் அதன் பணிகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு :-

* உணவு விவசாய ஸ்தாபனம் (FOA)
* புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (உலக வங்கி) (IBRD)
* சர்வதேச நாணய நிதியம் (IMF)
* ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
* ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA)
* அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் (UNHCR)
* ஐக்கிய நாடுகள் தகவல் மையம் (UNIC)
* ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF)
* உலக உணவுத் திட்டம் (WFP)
* உலக சுகாதார ஸ்தாபனம் (WHO)

ஐக்கிய நாடுகள் நிறுவன வலையமைப்பு இலங்கைக்கு நிதி, பொருள், தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் முக்கிய தோற்றுவாயாகக் காணப்படுகிறது. ஒருசில நிறுவனங்கள் பொருளாதார அபிவிருத்திக் கடன்களையும் நன்கொடைகளையும் வழங்குகின்றன. ஏனையவை சமாதான முயற்சிகள், மீள்திட்டமிடல், மீள்குடியேற்றம், மனித உரிமைகள், சிறந்த நிர்வாகம், வறுமை ஒழிப்பு, சிறுவர் மேம்பாடு, விவசாயம், சுகாதாரம், அனர்த்த நிவாரணங்கள், தகவல் தொழில்நுட்பம், சுற்றாடல், தொழிலாளர் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பான பொருளுதவி, பயிற்சி வசதிகள், நிபுணத்துவ தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றை வழங்குகின்றன.

இலங்கையில் செயற்படும் ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள் தொடர்பான சிறு குறிப்புக்கள் அடுத்தடுத்த பக்கங்களில் இடம்பெறும்.



59 ஆவது ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு ஐ. நா. கொழும்பு காரியாலய வளாகத்தில் இடம்பெற்ற வைபவத்தை சித்தரிக்கும் படம்.

# சர்வதேச தொழில் ஸ்தாபனம்
# INTERNATIONAL LABOUR ORGANIZATION – (ILO)

1919 வர்சேல்ஸ் உடன்படிக்கையின் மூலம் உருவான சர்வதேச தொழில் ஸ்தாபனம் 1946 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் விசேட அமைப்பாக மாறியது. சமூக நீதி, தொழிலாளர் உரிமை மேம்பாடு ஆகியன அதன் முக்கிய நோக்கங்களாகும்.

இந்த ஸ்தாபனம் அடிப்படை தொழிலாளர் உரிமைகள் தொடர்பான தராதரங்களை நிர்ணயித்து, சர்வதேச உழைப்பு விபரங்களைத் தொகுக்கின்றது. அது வேலைவாய்ப்பு கொள்கைகள், வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்குதல், தொழில் முயற்சி மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி, கூட்டுறவு அமைப்புக்கள், தொழிலாளர்களை நிர்வகித்தல், சட்ட மற்றும் தொழில்நுட்ப உறவுகள், சேவை நிபந்தனைகள், சிறுவர் உழைப்பு முதலான தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்தல், பாரபட்சத்தை ஒழித்தல், சமூக பாதுகாப்பு போன்ற துறைகளில் தொழில்நுட்ப சேவைகளை ஆற்றுகின்றது.

தொழில் செய்வோர்/தொழில் கொள்வோர் ஆகிய இருசாராரதும் சுயாதீன அமைப்புக்களுக்கான அபிவிருத்தி உதவிகளை வழங்குவது மற்றுமொரு பணியாகும். இவற்றிற்கு பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்கப்படும். முதலாளி, தொழிலாளி, அரசாங்கம் ஆகிய தரப்புகளுக்கு இடையிலான சமமான பங்களிப்பின் அடிப்படையிலான முத்தரப்பு கட்டமைப்பு ஐக்கிய நாடுகளின் சிறப்பம்சமாகும். சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு, மனித கௌரவம் போன்றவை பேணிப் பாதுகாக்கப்படும் பின்னணியில் சிறந்ததும், பயனுள்ளதுமான வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் வாய்ப்பளிப்பது ஐக்கிய நாடுகளின் பிரதான இலக்காக மாறியிருக்கிறது.

1984 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு தொழிலாளர் ஸ்தாபன காரியாலயம் பல நடவடிக்கைகள் ஊடாக இலங்கைக்கு ஒத்துழைப்பு நல்குகிறது. இதற்கு தெற்காசிய ஆலோசனைக் குழுவின் தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கின்றன. இந்த நடவடிக்கைகள் சிறந்த சேவை தராதரம் பற்றிய நிபந்தனைகளை நாட்டின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றுடன் இணைத்துக்கொள்வதற்கு துணைபுரிந்திருக்கிறது.

இந்த ஸ்தாபனம் தேசிய தொழில் கொள்கைகளை சட்டமாக்குவதுடன் சிறந்த சேவை தராதரங்களை தேசிய ஆக்கத்திறன் கொள்கைகளில் சேர்த்துக்கொள்வதற்கும் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சுடன் இணைந்து பணியாற்றியது. தற்போது மேற்கொள்ளப்படும் பிரதான தொழில்நுட்பத் திட்டங்கள் கீழ்வருமாறு :

* தொழில் சேவைகள் மற்றும் Jobsnet தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்
* தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் - மூன்றாவது கட்டம்
* எச்ஐவி. எயிட்ஸ் தொடர்பான வேலைத்தள விழிப்புணர்வுத் திட்டம்
* சுனாமி புனர்நிர்மாண முயற்சிகளின் பயன்களை அறிதல்
* சிறுவர் உழைப்பை ஒழிக்கும் இலங்கைத் திட்டம்
* வறிய மக்களின் அபிவிருத்திக்கான நுட்பமான கூட்டு தொழில்முயற்சி மேம்பாடு
* தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்தி
* வடக்கு-கிழக்கு கூட்டு மீள்-அபிவிருத்தித் திட்டம்
* யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தித் திட்டம்



சிறுவர் உழைப்பை ஒழிப்பது தொழில் ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கமாகும்.


# அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர்
# UNITED NATIONS HIGH COMMISSIONER FOR REFUGEES – UNHCR

அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் 1951 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் இயங்குகிறது. அது அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் அகதிகளுக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும் பாதுகாப்பு வழங்கி உதவி செய்கிறது. அகதிகளாக்காக இந்தியாவுக்கு சென்று பின்னர் தாயகம் திரும்பும் இலங்கையர்களுக்கு சொந்த இடங்களுக்குச் செல்லும் முன்னர் தேவையான தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்தல், நிரந்தரமாக வசிப்பதற்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவி செய்தல், வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றை கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளில் முக்கிய இடங்களைப் பெறுகின்றன. குடிநீர் விநியோகம், சுகாதார வசதிகள் ஆகியவற்றிற்கும் உயர் ஸ்தானிகராலயம் முன்னுரிமை வழங்கியுள்ளது.

1991 ஆம் ஆண்டு செயலாளர் நாயகத்தின் ஆலோசனைகளுக்கு அமைய உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. திறந்தவெளிக் கூடாரங்கள், துணி வகைகள், பாய்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், சமையலறைப் பண்டங்கள் போன்ற உணவு அல்லாத நிவாரணங்களை விநியோகித்தல் போன்றவை அகதிகளுக்கான சேவைகளில் சிலவாகும். சிறிய அளவிலான வேலைவாய்ப்பு, வருவாய்த் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தொழிற்பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அகதிகளுக்கான நலன்களைக் கவனிக்கும்போது குடிநீர் விநியோகம், சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

உயர் ஸ்தானிகராலயம் திசெம்பரில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க முன்வந்தது. முதல் ஐந்து மாதங்களில் வழங்கப்பட்ட உணவு-அல்லாத-நிவாரணப் பொருட்களின் பெறுமதி 12 மில்லியன் டொலரைத் தாண்டியது. அவற்றில் 39,500 பிளாஸ்ரிக் தகடுகள், 46,000 பிளாஸ்ரிக் பாய்கள், 25,500 நுளம்பு வலைகள் போன்றவையும் அடங்கும். இரண்டு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சமையல் பொருட்கள், துவாய்கள், சவர்க்காரம், வாளிகள், துணிவகைகள் போன்றவையும் விநியோகிக்கப்பட்டன. அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய சுனாமியால் நிர்க்கதியான மக்களுக்காக சனவரி மாதம் 1,498 கூடாரங்கள் விநியோகிக்கப்பட்டன. சுனாமியால் அழிந்துபோன அடையாள அட்டைகள் உள்ளிட்ட அத்தியாவசிய ஆவணங்களை மீளப்பெற்றுக்கொடுப்பதற்காக அகதிகள் உயர் ஸ்தானிகராலயம், அரசாங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் இணைந்து காலி, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நீதியமைச்சு 12 இடம்பெயர் சேவைகளை ஏற்பாடு செய்திருந்தது.



அகதிகளுக்கான நிழல்தரும் முயற்சிகள்

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்
# UNITED NATION DEVELOPMENT PROJECT – UNDP

1965 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் பூகோள அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பாகும். அது மிகவும் சிறந்த வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்காக அறிவு, அனுபவம், வளங்கள் ஆகியவற்றுடன் நாடுகளைத் தொடர்புபடுத்தும் அமைப்பாக விளங்குகிறது. அபிவிருத்தி நடைமுறையின் செயற்பாடுகள் 166 நாடுகளில் பரவியிருக்கின்றன. இது பூகோள மற்றும் தேசிய அபிவிருத்தி சவால்களை வெற்றிகொள்வதற்கான தீர்வுகளைத் தாமாகவே தேடிக்கொள்ள பல நாடுகளுக்கு உதவி செய்கிறது. மில்லேனிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அபிவிருத்தித் திட்டம் முன்னுரிமை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட, பயனுள்ள உறவுகள் 1967 வரை பின்னோக்கிச் செல்கிறது. இலங்கைக் காரியாலயம் பல விடயங்களில் ஈடுபடுகிறது. அவற்றில் ஐந்து விடயங்கள் முன்னுரிமை பெறுகின்றன.

### சமாதானத்தையும் இயல்பு நிலையையும் மீள ஏற்படுத்தல்

இரண்டு தசாப்த கால உள்நாட்டு ஆயுத நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் இலங்கை சமாதான பாதையில் பிரவேசித்திருக்கிறது. அதற்கு உதவும் முகமாக போர்நிறுத்தத் திட்டங்களும், அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. நிரந்தர வருமானத்தை ஏற்படுத்திக்கொடுத்தல், இனக்குழுக்களை மீண்டும் ஒன்றுபடுத்துதல், மீளக் குடியமர்த்துதல், சிறிய அளவிலான நிதித் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் புதிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பின்னணியை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றுக்காக உதவி செய்யப்படுகிறது. மக்கள் வாழ்க்கையில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்காக கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

### ஜனநாயக ஆட்சியும் மனித உரிமைகளும்

அபிவிருத்தித் திட்டம் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக இலங்கைக்கு வழங்கும் உதவிகள் நீதிமன்ற வாய்ப்புக்கள், மனித உரிமைகள், நாடாளுமன்ற ஆட்சியை பன்முகப்படுத்தல், உதவி முகாமைத்துவம், சமாதானத்துக்கான பங்களிப்பு போன்ற பல விடயங்களை உள்ளடக்குகிறது. நீதிமன்ற வாய்ப்புக்கள் தொடர்பான திட்டத்தின் கருப்பொருளாக அமைவது சலுகைகள் அற்ற மக்களுக்கு பூகோள நியாயங்களுக்கு அமைவாக சீரான இயந்திரத்தின் மூலம் தத்தமது பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதாகும். மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் உதவிகளை ஒருங்கிணைத்தல், தேசிய, பிராந்திய மட்டத்தில் முன்சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்தல் பொதுமக்களின் தேவைகளை அதிகாரிகள் கவனிக்கிறார்களா என்பதை உறுதி செய்வதற்கு வழிவகுக்கின்றன.

### வறுமையை ஒழித்தல்

தென்னிலங்கையில் அமுல்செய்யப்படும் யூஎன்டிபி திட்டங்கள் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புக்கள், வருவாய் மேம்பாடு, விவசாய தொழில்நுட்ப ஆக்கத்திறன் மேம்பாடு போன்ற இலக்குகளைக் கொண்டவை. பிராந்திய வலைப்பின்னலை வலுப்படுத்துதலும் சமூக அடிப்படையிலான ஸ்தாபனங்கள் வறுமையை ஒழிப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளை சீராக நிர்வகிக்க உதவுதலும் முக்கிய எதிர்பார்ப்புகளாகும். அபிவிருத்தித் திட்டம் தமது போர் நிறுத்த யோசனைத் திட்டங்கள் ஊடாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு உதவி செய்கிறது. ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைத்திருக்கக்கூடிய ஜீவனோபாய அபிவிருத்தி என்பது அதன் முக்கிய குறிக்கோளாகும்.

### எரிசக்தி, சுற்றாடல், இடர்காப்பு முகாமைத்துவம்

எரிசக்தியும் சுற்றாடலும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியில் தீர்க்கமான விடயங்கள் என்பதை அபிவிருத்தித் திட்டம் ஏற்றுக்கொள்கிறது. அவ்வமைப்பு உலகளாவிய, தேசிய, பிராந்திய மட்டத்தில் எழக்கூடிய சுற்றாடல் தொடர்பான சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கைக்கு உதவி செய்கிறது. ஓசோன் படலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய பதார்த்தங்களின் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான மொன்ட்ரியல் பிரகடனம் போன்ற சர்வதேச உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தவும் இதன் மூலம் வழிபிறக்கிறது. வெள்ளப்பெருக்கு, வரட்சி, புயல், பூமியதிர்ச்சி போன்ற இயற்கை அனர்த்த முகாமைத்துவ துறைகளில் யு.என்.டி.பி. அரசாங்கத்துடன் ஒத்துழைத்து செயலாற்றுகிறது.

எச்ஐவி/எயிட்ஸ் ஒழிப்பு முயற்சிகளில் உதவி செய்வதற்கும் யு.என்.டி.பி. இலங்கைக் காரியாலயம் முன்னுரிமை வழங்குகிறது. இந்த ஆட்கொல்லி பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவது, தவறான கருத்துக்களை களைவது, கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவது போன்றவற்றின் மூலம் நோய் பீடிக்கப்பட்டவர்களின் கௌரவத்தை பேணிப் பாதுகாக்கக்கூடிய கொள்கைகளை உருவாக்கும் முயற்சிகளுக்கு இந்தத் திட்டம் ஊக்கமளிக்கிறது.

**அவசர வேண்டுகோள்கள், 2005**

யு.என்.டி.பி. சுனாமி அனர்த்தத்தால் தீவிரமாக பாதிக்கப்பட்ட நாடென்ற வகையில் இலங்கைக்கு உதவி செய்வதற்காக பல குறுகிய கால திட்டங்களை வகுத்துள்ளது. இதற்குத் தேவையான நிதியை வழங்கி உதவி செய்யுமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் தொண்டர்கள் எட்டு மாவட்டங்களில் சேவையாற்றுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்ட பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (UNDP) வறுமை ஒழிப்பிற்கு கூடுதல் முன்னுரிமை அளிக்கிறது.

# உலக சுகாதார ஸ்தாபனம்
# WORLD HEALTH ORGANISATION – WHO

1948 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனம் ஐக்கிய நாடுகளின் நிறுவன கட்டமைப்பிற்குள் சர்வதேச சுகாதார நடைமுறைகளை மேற்கொள்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக இருக்கிறது. ஒவ்வொரு அங்கத்துவ நாட்டினதும் சுகாதார அமைச்சுகளுக்கு வழிகாட்டி, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி, வளத் திட்டமிடலை மேற்கொண்டு வருகிறது. இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தென்கிழக்காசிய பிராந்திய காரியாலயம் புதுடெல்லியில் அமைந்திருக்கிறது.

சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை காரியாலயம் தேவைக்கு ஏற்றவகையில் சுகாதார அமைச்சுக்கு வழிகாட்டி, ஆலோசனை வழங்குவதன் மூலமும், தொழில்நுட்ப தகவல்கள், வளங்கள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதன் மூலமும் நாட்டின் சுகாதார துறைக்கு உதவுகிறது. வறிய மற்றும் வசதிகள் குறைந்த குழுக்கள் மீது கவனம் செலுத்தி, சுகாதார சேவைகளை தேசிய, மாகாண, மாவட்டத்தில் வலுப்படுத்தி, சுகாதார வசதிகளை மிகவும் உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு வருவது இலங்கை காரியாலயத்தின் முக்கிய இலக்காகும்.

எந்தவொரு அனர்த்தத்திற்கும், சுகாதார நெருக்கடிக்கும் தயாராக இருக்கவேண்டிய தேவையை வலியுறுத்துவதுடன் நிபுணத்துவ அறிவை பெற்றுக்கொடுப்பதும் இலங்கை காரியாலயத்தின் மற்றுமொரு சேவையாகும்.

1952 இல் இலங்கைக் காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்ட நாள் தொடக்கம் உலக சுகாதார ஸ்தாபனம் அரசாங்கத்துடனும் சுகாதாரத் துறை சார்ந்த முக்கிய செயற்பாட்டாளர்களுடனும் நெருங்கிப் பணியாற்றி வருகிறது. அதன் பிரதான பங்காளியாக அமைவது சுகாதார அமைச்சாகும். WHO மூலம் வழங்கப்படும் வளங்கள் இருதரப்பு திட்டமிடலின் அடிப்படையில் கையாளப்படும். கடந்த காலத்தில் சுகாதாரத்துறை அபிவிருத்தியில் அரசாங்கத்தின் பங்களிப்பு அதிகரித்ததால், WHO, சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பும் வளர்ச்சி கண்டது.

2002 இற்கும் 2005 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் முன்னுரிமை வழங்கி தெரிவுசெய்யப்பட்ட ஆறு துறைகள் பின்வருமாறு :

* சுகாதார சேவை மறுசீரமைப்பும் நலன்புரிச் சேவை அபிவிருத்தியும்
* வெளிநாடுகளில் இருந்து பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல்
* சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்தி, சுற்றாடல் அபாயங்களைக் குறைத்தல்
* சுகாதார சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் செயற்றிறனையும், ஆக்கத்திறனையும் அதிகரித்தல்
* அவசர அனர்த்த நிலைமைகளுக்கு தயாராக இருத்தலும் துரித பதில் நடவடிக்கைகளை எடுத்தலும்
* பங்காளித்துவமும் ஒருங்கிணைத்தலும்

**இந்த முன்னுரிமைகளின் அடிப்படையில் கீழ்வரும் துறைகள் சார்ந்த திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன :**

* வெளிநாடுகளில் இருந்து பரவும், வெளிநாடுகளில் இருந்து பரவாத நோய்களைக் கண்காணித்தல், கட்டுப்படுத்தல், ஒழித்தல்

* குடும்பநல சுகாதாரம் (சிறுவர், விடலைப் பருவத்தோர், பெண்கள், கர்ப்பிணித் தாய்மார் ஆகியோரின் சுகாதார நலன்பேணல், எச்ஐவி/எயிட்ஸ் ஆகியவையும் அடங்கும்)

* நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியும் சுகாதார பின்னணியும் (போஷாக்கு, சுகாதாரமும் சுற்றாடலும், அனர்த்த தயார்நிலையும் பதில் நடவடிக்கைகளும்)

* சுகாதார தொழில்நுட்பமும் மருந்துகளும்

* சுகாதார தகவல் தொகுப்பு



ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவது சுகாதார ஸ்தாபனத்தின் நோக்கம்

# உலக உணவுத் திட்டம்
# WORLD FOOD PROGRAMME – WFP

உலக உணவுத் திட்டம் 1943 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் உணவு அமைப்பாக ஸ்தாபிக்கப்பட்டது. அது 1968 ஆம் ஆண்டு இலங்கையில் இயங்கத் தொடங்கியது. WFP அன்று தொடக்கம் இன்றுவரை 35 மில்லியன் டொலர் செலவிலான 55 உணவு உதவித் திட்டங்களில் பங்களிப்பு நல்கியது. "நெருக்கடிகளில் உயிர்களைக் காப்போம், அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உதவி செய்வோம், சமூகத்தின் சொத்துக்களை மீட்டெடுப்பதுடன் சுயபலத்துடன் எழுந்து நிற்க வறியவர்களுக்கு கைகொடுப்போம்" என்பது WFP இன் தொனிப்பொருளாகும்.

### தற்போதைய வேலைத்திட்டங்கள்

தென்னிலங்கையின் வேலைத்திட்டம் (2002-2006) ஜீவனோபாய வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன், சமூக சொத்துக்களை கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டது. வடக்கு-கிழக்கின் நீண்டகால நிவாரண, புனர்வாழ்வுத் திட்டம் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும், நெருக்கடிகளில் சிக்கியோரது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் உதவுகிறது. சுனாமியைத் தொடர்ந்து, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக துரித திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அனைத்துத் திட்டங்களும் சமாதானம், ஐக்கியம் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டவை.

உலக உணவுத்திட்டம் தாம் உதவியாக விநியோகிக்கும் பொருட்களை ஒவ்வொரு பகுதிக்கும் எடுத்துச்சென்று, களஞ்சியப்படுத்தி, விநியோகிக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்போடு செயல்படுகிறது. நிவாரண மற்றும் புனர்வாழ்வு, கல்வி, விவசாய அமைச்சுக்களின் பிரதான பங்காளியாகவும் விளங்குகிறது. ஒட்டுமொத்தத் திட்டமும் வேலைக்காக உணவு, பயிற்சிக்காக உணவு, உளநல சமூக உதவிகள், மேலதிக பயிற்சிகளுக்காக உணவு ஆகிய தொனிப்பொருட்களில் உருவாக்கப்பட்டுள்ளது. பட்டினியைப் போக்குவது மற்றும் கொள்கை மாற்றங்களை ஊக்குவிப்பதற்காக உதவி செய்வது போன்றே அறிவூட்டலும் WFP இன் மற்றுமொரு சேவையாகும்.

### வேலைக்காக உணவு

இதன் அர்த்தம், கமத்தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்ட விவசாயிகள் பாசனக் குளங்கள், வீதிகள் ஆகியவற்றில் வேலை செய்யும்போது உழைப்பிற்குரிய ஊதியமாக உணவை வழங்குதல் என்பதாகும். உணவு நிவாரணம் குடும்பத்தின் நாளாந்த உணவுத் தேவைகளை நிறைவேற்றும். மேலும், சொத்துக்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் சமூகங்களுக்கும் உதவி செய்யப்படும்.

### பயிற்சிக்காக உணவு

ஜீவனோபாய ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்கில் வடக்கு-கிழக்கின் ஐந்து மாவட்டங்களில் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் பயிற்சியுடன் குடும்பத்தின் நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் வழியிறக்கிறது.

### கல்விக்காக உணவு

WFP அனைத்து மாணவர்களுக்கும் 514 கலோரி சக்தி கிடைக்கக்கூடிய மதிய-காலை உணவை வழங்குகிறது. இதற்கு பலதரப்பு, இருதரப்பு பங்களிப்புக்கள் ஊடாக ஜப்பான், அவுஸ்திரேலிய, ஸ்விட்ஸர்லாந்து, ஸ்வீடன் அரசுகளின் மூலம் நிதி கிடைத்தது. பாடசாலை உணவுத் திட்டத்தின் ஓரம்சமாக பாடசாலை நேரத்தில் நாம் கற்க முடியாத பாடங்களை பாடசாலை விட்ட பின்னர் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

### தாய் சேய் போஷாக்கு


சுகாதார மருத்துவ அதிகாரி கிளினிக்குகள் மூலம் தேவையான வைட்டமின்கள், ஊட்டச்சத்துக்கள் அடங்கிய போஷாக்குள்ள உணவுக் கலவையான தானிய-சோயா கலவை விநியோகிக்கப்படும். உணவுத்திட்டம் போஷாக்குக் கல்வியை பரப்புவதற்காக சமூக செயற்பாட்டுத் திட்டங்களையும் பயன்படுத்திக்கொள்கிறது.

## தகவல்களும் தொடர்புகளும்

அறிவூட்டல் பணிகளுக்கும் உதவி வழங்கும் அரசுகளுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தியதால் 2004 ஆம் ஆண்டளவில் நிவாரண, புனர்வாழ்வு திட்டங்களுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் வழங்க முடிந்தது. 2003 இல் 11,000 மெற்றிக் தொன்களாக இருந்த பங்களிப்பு, 2004 இல் 35,000 மெற்றிக் தொன்னாக, மூன்று மடங்குகளால் அதிகரித்தது. பங்களிப்புச் செய்யும் அரசுகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியது. 2003 ஆம் ஆண்டில் பங்களிப்பு நல்கிய ஸ்விட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஸ்வீடன், கொரியா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளுக்கு மேலதிகமாக அதற்கடுத்த வருடத்தில் பின்லாந்து, கனடா, நெதர்லாந்து, டென்மார்க், பிரிட்டன் ஆகிய நாடுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் இணைந்துகொண்டன.

## சுனாமியால் நிர்க்கதியானோருக்கு WFP இன் உதவிகள்

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆந் திகதி பூகம்ப ஆழிப் பேரலைகள் இலங்கையைத் தாக்கியதைத் தொடர்ந்து பலர் நிர்க்கதியானார்கள். சிலர் முகாம்களில் தங்கியிருக்கிறார்கள். கூடுதலானவர்கள் உற்றார் உறவினருடன் வாழ்கிறார்கள். இந்த அனர்த்தத்திற்கு உதவிய WFP 910,000 பேருக்கு உணவு வழங்குகிறது. 2005 ஏப்ரல் அளவில் விநியோகிக்கப்பட்ட உணவுத் தொகை 35,000 மெற்றிக் தொன்னைத் தாண்டுகிறது. பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை திரும்பும்போது இது குறையும்.



பயனாளிகள் உணவு நிவாரணங்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

## உணவு விவசாய ஸ்தாபனம்
## FOOD AND AGRICULTURE ORGANISATION – FAO

இலங்கை ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் பெறுவதற்கு முன்னர் 1948 இல் உணவு விவசாய ஸ்தாபனத்துடன் இணைந்தது. கிராமிய மக்களின் போஷாக்கையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தல், விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், அவர்களின் பொது அபிவிருத்திக்கு வழிவகுத்தல் ஆகியவை 1945 இல் ஆரம்பிக்கப்பட்ட உணவு, விவசாய ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்.

இலங்கையில் FAO இன் செயற்பாடுகள் அனைத்து வழிகளும் விவசாயம், கடற்றொழில், கால்நடை அபிவிருத்தி, வனவள கைத்தொழில்கள், உணவுப் பாதுகாப்பு, நுண்ணுயிர் நோய்களைக் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்குகிறது. இந்த ஸ்தாபனத்தின் சமீபகால செயற்பாடுகளில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் ஆற்றல்களை மேம்படுத்தல், உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், குறுகிய மற்றும் நீண்டகால ஆய்வுகளை வழிநடத்தல் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. வடக்கு-கிழக்கில் நெருக்கடிகளுக்குப் பிந்திய காலப்பகுதியிலான விவசாய அபிவிருத்தி முயற்சிகளில் அது சம்பந்தப்பட்டுள்ளது. சமீபத்தில் உயாரக விதை நெல் உற்பத்தித் திட்டத்தையும் ஆரம்பித்தது.

கடந்த டிசெம்பர் மாத சுனாமியைத் தொடர்ந்து விவசாய, மீன்பிடித் துறைகள் தொடர்பான புனர்வாழ்வு முயற்சிகளில் ஐக்கிய நாடுகளின் பிரதான அமைப்பாக FAO குறிப்பிடப்பட்டது. அனர்த்த நிவாரணக் கட்டத்தில் விவசாய, மீன்பிடித் துறைகளில் ஏற்பட்ட சேதவிபரங்களை மதிப்பிட்டு, இலங்கையின் காணிப் பயன்பாடு தொடர்பான முழு அறிக்கையொன்றை தயாரிக்கும் நோக்கில் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது. இந்தக் குழுவினர் படகுத் துறைகளை புனரமைக்கும்போது எழும் தேவைகள் பற்றியும் கவனம் செலுத்தினார்கள்.

இலங்கையின் மீன்பிடித்துறை சார் வளர்ச்சிக்காக நடுத்தர அளவிலான வருவாய் மார்க்கத்தை தயாரிக்கும் முயற்சியில் இவ்வமைப்பு கடற்றொழில் நீரியல்வள அமைச்சிற்கு உதவி செய்கிறது. மிகவும் பொருத்தமான படகுகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றைக் கண்டறிதல், அவற்றைத் திட்டமிடல், தயாரித்தல் ஆகிய முயற்சிகளில் FAO தொழில்நுட்ப, நிதி உதவிகளை வழங்குகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம் மீன்பிடித்துறையை புனரமைப்பது மாத்திரமல்ல, அதன் செயற்றிறனையும், ஆக்கத்திறனையும் மேம்படுத்துவதும் தான். சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் படகு திருத்தும் நிலையங்களை ஸ்தாபிப்பதற்காக FAO உம் சீநோர் நிறுவனமும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கு ஜப்பான், இத்தாலி, கிரேக்கம் உள்ளிட்ட நாடுகள் நிதியுதவி வழங்குகின்றன.



அனைத்து வழிகளிலும் விவசாய அபிவிருத்திக்கு உதவி செய்தல்

# ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்
## UNITED NATIONS FUND FOR POPULATION – (UNFPA)

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் பங்களிப்பு ஆரம்பித்தது. அது குடும்பநல சுகாதாரம், குடும்பத் திட்டமிடல், சனத்தொகை கொள்கை உருவாக்கம் போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 1971 இல் அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுக்கு இடையிலான தூதுக்குழு குடும்பத் திட்டமிடல் பற்றி விசேட கவனம் செலுத்தியது. இந்தக் குழுவினர் சுகாதார சேவைகளை மீளமைப்பதற்காக முன்வைத்த முக்கியமான விதந்துரைகள் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. (1971 ஆம் வருட) ஐந்தாண்டு தேசிய திட்டம் குடும்பத்திட்டமிடல் மற்றும் தாய்சேய் நலன்புரித் திட்டங்களை இணைக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் இயங்கத் தொடங்கிய நாள் தொடக்கம் குடும்பத் திட்டமிடல், குடும்பநல சுகாதாரம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்த தேசியத் தலைவர்கள் தேசிய கொள்கைத் திட்டமிடலில் அவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார்கள். 1980 களில் சீரான சனத்தொகைத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டதுடன், நவீன கருத்தடை முறைகளும் சுலபமாக பரவத் தொடங்கின. குடும்பத் திட்டமிடல் பற்றிய கருத்துக்களை ஆக்கத்திறனுடைய முறையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும், சனத்தொகை செயற்பாடுகளில் மகளிர் அமைப்புக்களின் பணிகளை மேம்படுத்துவதற்கும் தேசிய திட்டம் பெரிதும் உதவியது.

குடும்பநல சுகாதாரத் துறையில் முக்கிய திருப்புமுனையாக அமைந்த 1994 ஆம் ஆண்டின் சனத்தொகையும், அபிவிருத்தியும் என்ற சர்வதேச மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் இலங்கையும் கைச்சாத்திட்டது. எனவே, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கான குடும்பநல சுகாதாரத் திட்டங்களை அமுல்செய்வதற்கு இலங்கை திடசங்கற்பம் பூண்டுள்ளது.

சனத்தொகை நிதியம் தற்போது இலங்கைக்கான உதவித் திட்டத்தின் ஆறாவது கட்டத்தை எட்டியிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 5 மில்லியன் டொலர்களாகும். இது அரசாங்கம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் வகுக்கப்பட்டது. குடும்பநல சுகாதார சேவை விநியோகம், குடும்பநல சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளக்கூடிய அறிவைப் பரப்புதல், ஆண்-பெண் சமத்துவம், வயது முதிர்ந்தோருக்கான பிரச்சினைகள், புலம்பெயர் பாலியல் வியாதிகள் மற்றும் எச்ஐவி/எயிட்ஸ் நோய்களை ஒழித்தல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பநல சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெண்களுக்கும், குறிப்பாக கர்ப்பிணித் தாய்மாருக்கும், விடலைப் பருவத்து யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோரின் உள சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களும் அமுல் செய்யப்படுகின்றன.



இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய பயிலரங்கு

# புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (உலக வங்கி)
# INTERNATIONAL BANK FOR RECONSTRUCTION AND DEVELOPMENT – (IBRD)

(உலக வங்கி என்ற பெயரால் அதிகமாக அறியப்படும்) புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி 1944 இல் பிரிட்டன் வுட்ஸ் மாநாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. கடன், பிணைக் காப்பீடுகள், நிதிச் சேவைகள் மூலம் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை உறுதி செய்வதன் மூலம் நடுத்தர உதவிகளையும், கடன்களையும் வழங்கக்கூடிய மிகவும் வறிய நாடுகளில் வறுமையை ஒழிப்பது அதன் நோக்கமாகும். சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA), சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC), பலதரப்பு முதலீட்டு பாதுகாப்பு நிறுவனம், சர்வதேச முதலீட்டு பிணக்கு மத்தியஸ்த சபை (ICSID) ஆகியவையும் இந்த வங்கியும் சேரும்போது உலக வங்கியின் குழு உருவாகிறது.

உலக வங்கி இலங்கைக்கு வழங்கும் உதவிகள் மூலம், அந்நாட்டின் சுயாதீன இலக்குகளை அடைவதற்கு ஒத்துழைப்பு நல்கப்படுகிறது. பொருளாதாரத்தைப் போன்றே மனிதகுல அபிவிருத்திக்கும் நிதி, தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகின்றன. உலக வங்கி 2003 ஏப்ரல் மாதம் இலங்கைக்கான புதிய மூலோபாயத்தை வகுத்தது. அதில் உள்ளடக்கப்படும் தொகை 800 மில்லியன் ஆகும். இந்தத் தொகை நான்காண்டு காலப் பகுதியில் வட்டியில்லாக் கடனாக அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் வழங்கப்படும். சமாதானம், அபிவிருத்தி, சமத்துவம் ஆகிய விடயங்களை சார்ந்ததாகவும் மூலோபாயம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், சுகாதார நலன்புரிச் சேவைகளில் வளர்ச்சியை எட்டுவதற்கு உலக வங்கி இலங்கைக்கு உதவி செய்கிறது. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் சமமான அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்பதில் உலக வங்கி உறுதியாக இருக்கிறது. நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் சுகாதார சேவைகள், நீர்ப்பாசன, நீர் விநியோக சேவைகள் ஆகியவற்றை வழமைக்குக் கொண்டுவருவதன் மூலம் மக்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்கும், இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்கும் உலக வங்கியின் மூலம் உதவிகள் கிடைக்கின்றன.

இலங்கை 1950 ஆம் ஆண்டில் உலக வங்கியுடன் இணைந்த பின்னர் மூன்று மில்லியன் டொலருக்கு அதிகமான பெறுமதியுடைய, 101 வட்டியில்லாக் கடன் கொடுப்பனவுகள் கிடைத்திருக்கின்றன. 2005 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலக வங்கியின் உதவியுடன் 15 திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. இவற்றுக்காக 569 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டிருந்தது. 1990-2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அமுல் செய்யப்பட்டவற்றில் மின்வலு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலான மின்வலு சேவைகள் திட்டம், வடக்கு-கிழக்கு விவசாய நீர்ப்பாசன திட்டம், சமூக நீர் விநியோகத் திட்டம், பொதுக் கல்வித் திட்டம், சுகாதார மற்றும் குடும்பத் திட்டமிடல் திட்டம் ஆகியவை பிரதானமானவை.



உலக வங்கி - பொருளாதார அபிவிருத்திக்கு கடனுதவிகள்

# சர்வதேச நாணய நிதியம்
# INTERNATIONAL MONETARY FUND – (IMF)

1944 ஆம் ஆண்டு பிரிட்டன் வுட்ஸ் மாநாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட மற்றுமொரு அமைப்பு சர்வதேச நாணய நிதியமாகும். இது நாடுகளுக்கு இடையிலான செலாவணி விகித ஸ்திரத்தன்மையைப் பேணி, சர்வதேச நிதித்துறை ஒத்துழைப்பை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டது. பலதரப்புக் கொடுப்பனவு முறையை உருவாக்குவதற்கும், அங்கத்துவ நாடுகளின் கொடுப்பனவு நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உதவிசெய்வது அதன் பணியாகும்.

இலங்கை 1950 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்துகொண்டது.

சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்குத் தேவையான வளங்களைத் தேடிக்கொள்ளும் பிரதான தோற்றுவாயாக அமைந்திருப்பது, அங்கத்துவ நாடுகளின் முதலீட்டுப் பங்கீட்டுத் தொகையாகும். இது முதலீட்டு பங்கீடுகள் (கோட்டா) என்றழைக்கப்படுகிறது. 2005 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பங்கீடுகளின் மொத்த பெறுமதி 212.7 பில்லியன் SDR ஆக அல்லது 293 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. ஒவ்வொரு நாடுகளுக்கும் உரித்தான பங்கீடுகள் சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார வலுவை அடிப்படையாகக் கொண்ட சூத்திரத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும்.

1965 தொடக்கம் 2001 வரையான காலப்பகுதியில் இலங்கை தனது பொருளாதார, நிதித் திட்டங்களுக்காக 12 தடவைகள் நாணய நிதியத்தின் வளங்களைப் பயன்படுத்தியிருக்கிறது. கொடுப்பனவு நிலுவைகளைச் செலுத்துவதற்காக எட்டு தடவைகள் வளப் பரிகரணத்தை மேற்கொண்டுள்ளது.

சமீப காலமாக, நாணய நிதியம் இலங்கைக்கு நடுத்தர வங்கிச் செயற்பாடுகள், தீர்வை சுங்கச் செலவினம், அரச செலவின முகாமைத்துவம், பொருளாதார புள்ளி விபரத் தொகுப்பு போன்ற பல துறைகள் சார்ந்த தொழில்நுட்ப உதவிகளை வழங்கியிருக்கிறது. இலங்கையின் அதிகாரிகளுக்கு பொருளாதார ஆய்வு, நிதிக் கொள்கை ஆய்வு, நிதி மற்றும் வங்கி சார்ந்த புள்ளி விபரங்கள், அரச நிதியங்கள், அரச செலவு முகாமைத்துவம் போன்ற பல துறைகளில் சீரான பயிற்சிகளை வழங்கியிருக்கிறது.



சர்வதேச நாணய நிதியம் - கொடுப்பனவு நிலுவைகளை செலுத்துவதற்கான நிதி வளப் பகிர்வு

# ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்
# UNITED NATION CHILDREN'S FUND – UNICEF

ஐக்கிய நாடுகள் உருவாகி ஒரு வருடத்திற்குப் பின்னர், அதாவது 1946 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் சிறுவர் அபிவிருத்திக்காக திடசங்கற்பம் பூண்டிருக்கும் உலகின் முன்னணி அமைப்பாகும். அது 157 நாடுகளிலும், பிராந்தியங்களிலும் அரசாங்கங்கள் மற்றும் சமூகக் குழுக்களுடன் இணைந்து இடர் நிவாரண, நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிதியம் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தை முக்கியமாகக் கருதுகிறது. இலங்கையில் யுனிசெப்பின் செயற்பாடுகள் சிறுவர்களை மையமாகக் கொண்ட நான்கு துறைகளை உள்ளடக்கியிருக்கிறது. அவை சுகாதாரமும் - போஷாக்கும், கல்வி, சிறுவர்களின் பாதுகாப்பு, குடிநீரும் - சுகாதார நலன்களும் ஆகியவையாகும்.

**சுகாதாரமும், போஷாக்கும்**

நெருக்கடிகளில் சிக்கிய, மிகவும் வறிய பிரதேசங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் வாழும் சிறுவர்களின் போஷாக்கு மட்டத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளடங்கலாக மந்தபோசனம், பிரசவத்தின் பின்னரான சிசு மரணம் என்பன இலங்கையின் முக்கியமான சுகாதார நெருக்கடிகளாகும்.

யுனிசெப் சுகாதார, போஷாக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்திருப்பது தாய் -சேய் சுகாதார சேவைகளை மேம்படுத்தி, அவற்றை விஸ்தரிப்பதாகும். அந்த அமைப்பு இலங்கையில் வைட்டமின் ஏ, கர்ப்பிணித் தாய்மாருக்கான இரும்புச்சத்து வில்லைகளுக்கான தேவைகளையும் நிறைவேற்றுகிறது.

**கல்வி**

அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி வாய்ப்பை உறுதி செய்தல், குறைந்த வசதிகளைக் கொண்ட சமூகத்தினரது கல்வியில் வளர்ச்சியை ஏற்படுத்துதல் என்பன யுனிசெப்பின் பிரதான இலக்குகளாகும். இவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேலதிகக் கல்வி மற்றும் சிறுவர் நட்புறவுப் பாடசாலை என்ற முறை ஸ்தாபிக்கப்படுகிறது.

சிறுவர் நிதியம் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும், தோட்டங்களிலும் மாணவர்கள் இடைநடுவில் பாடசாலைக் கல்வியைக் கைவிடுதல், தொடர்ந்து முதலாம் ஆண்டில் தங்கியிருத்தல் பற்றிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயல்கிறது. 2004 இல் "மீண்டும் பாடசாலைக்கு" என்ற திட்டத்துடன் தாம்விட்ட இடத்தில் இருந்து கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பலனாக இருபதாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் மீண்டும் ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் பாடசாலைகளில் இணைந்தார்கள்.

**சிறுவர்களின் பாதுகாப்பு**

இந்தத் திட்டம் சிறுவர்களுக்கு பாதுகாப்பான பின்னணியை உருவாக்குதல், நீதிமன்ற மறுசீராக்கல் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிவைப் பரப்புவதை இலக்காகக் கொண்டதாகும். நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான நிதியத்தின் செயற்பாடுகள் "யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான வேலைத்திட்டத்தை" அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலம் சிறுவர்களுக்கான சிறந்த கல்வி சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும், அத்தியாவசிய சேவைத் திட்டங்களுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன. சிறுவர் நிதியம் "வேலைத் திட்டத்தின்" கீழ் குறைந்த வயதுடைய சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதைக் கண்காணித்து, அதுபற்றி அறியத்தருவதோடு, சிறுவர்களை அதில் இருந்து விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கிறது.

**குடிநீரும், சுகாதார நலன் பாதுகாப்பும்**

சிறுவர் நிதியம் சுனாமிக்கு முன்னதாக பிரத்தியேகமான குடிநீர் - சுகாதார நலன்புரித் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்த இயற்கை அனர்த்தம் இலங்கையின் பல குடிநீர் -சுகாதார நலன்புரி வசதிகளுக்கு பெரும் சேதங்களை விளைவித்தது. குறிப்பாக, சிறுவர் உள்ளிட்ட பல தரப்பட்டோர் நோய் அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள். அனர்த்தம் நிகழ்ந்து 72 மணித்தியாலங்களுக்குள் யுனிசெப் ஆறு பவுசர்களை விலை கொடுத்தும், மேலும் ஆறு பவுஸர்களை கூலிக்கும் பெற்று 200 முகாம்களில் வாழும் 3,76,000 பேருக்கு சுத்தமான குடிநீரை விநியோகித்தது.

முல்லைத்தீவு, அம்பாந்தோட்டை, அம்பாறை மாவட்டங்களில் குழாய் நீர்த் திட்டங்களை ஆரம்பிக்கும் திட்டங்களை வகுத்தது.

சிறுவர் நிதியம் தற்போது பூரணமான குடிநீர், சுகாதார நலன்புரித் திட்டமொன்றைத் தொடங்கியுள்ளதோடு, பொதுமக்கள் பாதுகாப்பான குடிநீரையும் உரிய நலன்புரி வசதிகளையும் சுலபமாகப் பெற்றுக்கொள்ள வழிவகுப்பதற்கு அரச நிறுவனங்களோடு இணைந்து பணியாற்றுகிறது.



சிறுவர்களின் பரிபூரண அபிவிருத்தியே யுனிசெப்பின் முக்கிய நோக்கம்

# ஐக்கிய நாடுகள் தகவல் மையம்
# UNITED NATION INFORMATION CENTRE – (UNIC)

ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகள், பணிகள் பற்றிய தகவல்களை தொகுத்து விநியோகிப்பது ஐக்கிய நாடுகள் தகவல் மையத்தின் பிரதான நடவடிக்கையாகும். நாட்டில் ஐ.நா. வலைப்பின்னலின் தகவல்களைக் கையாளும் அமைப்பாகவும் திகழ்கிறது.

தகவல் மையம் பல திட்டங்களையும், வழிமுறைகளையும் பயன்படுத்தி தமது பொறுப்பை நிறைவேற்றுகிறது. ஊடகங்களால் வெளியிடப்படும் தகவல்களைத் தொகுப்பது; மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை செய்தி மஞ்சரியையும், தேசிய மொழிகளில் நூல்களையும் வெளியிடுவது; வீடியோ தயாரிப்புக்கள், செய்தியாளர் மாநாடுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகியவை முக்கியமானவை. சமீபத்தைய நாட்களில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட பிரசுரங்களில் ஐ.நா. தொடர்பான அடிப்படை தகவல்கள், ஐ.நா. குடும்பம், சமூகக்கல்வி மாணவர்களுக்கான செயற்பாட்டு ஆவணங்கள், ஐ.நா. சமாதானமும் பாதுகாப்பும், மனித உரிமைகள் ஆவணம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

குறிப்பாக, சமூகக்கல்வி ஆசிரியர்களுக்காக 2000 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட ஒருநாள் கருத்தரங்கு, அதில் கலந்து கொண்டோர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. சர்வதேச மாநாடுகளை அடிப்படையாக வைத்து அறிவூட்டல் திட்டங்களை அமுல்செய்யும் தகவல் மையம், ஐ.நா. தினம் பற்றிய பின்னணித் தகவல்களைத் தொகுப்பதற்கும் முன்னுரிமை அளிக்கிறது.

ஐ.நா. பொதுச்சபை, செயலகம் உள்ளிட்ட பிரதான காரியாலயங்களின் செயற்பாடுகள் பற்றி இலங்கைக்குள் தகவல்களை விநியோகிக்கும் பிரதான அமைப்பாக தகவல் மையம் விளங்குகிறது. ஐ.நா. உச்சிமாநாடுகள் நடைபெறும் சமயத்தில், தகவல் மையம் அவை பற்றி மக்களுக்கு அறியத்தருகிறது.

தகவல் மையத்தின் பொறுப்பில் நிர்வகிக்கப்படும் ஐ. நா. உசாத்துணை நூலகம் ஐக்கிய நாடுகளின் வரலாறு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அபூர்வ நூல்களையும், நூல்களையும் பெருமளவில் கொண்டிருக்கிறது. எவரும் நூலகத்திற்கு சென்று புத்தகங்களைக் கையாள முடியும்.



தகவல் மையமும், பதுளை வலயக் கல்விப் பணிமனையும் ஏற்பாடு செய்திருந்த
ஐ.நா. 60 ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்களும், மாணவர்களும்

# 8 இலங்கையில் இருந்து ஐக்கிய நாடுகளுக்கு

இலங்கை 1955 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது.

அன்று தொடக்கம் இன்று வரையிலான ஐம்பதாண்டு காலப்பகுதியில் இலங்கை ஐக்கிய நாடுகள் வலையமைப்பிற்குள்ளும், அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளிலும் நேரடியான, ஆக்கபூர்வமான பணிகளை, காரியங்களை நிறைவேற்றியிருக்கிறது. பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க முதற்கொண்டு அனைத்து அரசாங்கத் தலைவர்களும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மாநாட்டில் உரையாற்றினார்கள். 1974 - உலக சனத்தொகை மாநாடு, 1992- புவி மாநாடு உள்ளிட்ட அனைத்து சர்வதேச மாநாடுகளிலும் இலங்கை நேரடியாக பங்களிப்பு செய்தது. ஒரு தடவை அணிசேரா இயக்கத் தலைவராகவும், ஏனைய காலங்களில் இயக்கத்தின் ஆர்வமுடைய அங்கத்தவராகவும் இலங்கை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூத்ரோஸ்-பூத்ரோஸ் காலியின் சமாதானத்திற்கான நிகழ்ச்சி நிரல் என்ற ஆவணத்தையும், ஏனைய கொள்கை ஆவணங்களையும் தொகுக்கும் முயற்சிகளில் அர்த்தமுள்ள பங்களிப்பை நல்கியது.

கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் அனேகமான இலங்கையர்கள் ஐக்கிய நாடுகளின் பல பிரதான அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்தார்கள். இலங்கையின் நிரந்தர பிரதிநிதியான திரு. ஷேர்லி அமரசிங்க 1976 ஆம் ஆண்டு பொதுச்சபையின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். கலாநிதி காமினி கொரெயா 1973 இல் இருந்து 1984 வரை அன்க்டாட் செயலாளர் நாயகமாக சேவையாற்றினார். அணுவாயுதத் திட்டங்களை ஒழிக்கும் ஒப்பந்தத்தை காலவரையறையின்றி ஒத்திவைப்பதென தீர்மானிக்கப்பட்ட 1994 ஆலோசனை மாநாட்டின் தலைமைப் பொறுப்பை வகித்த திரு. ஜயந்த தனபால, பின்னர் ஐக்கிய நாடுகளின் ஆயுதக்களைவுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான செயலாளர் நாயகமாக கடமை புரிந்தார்.

ஒன்பதாண்டு காலமாக சர்வதேச நீதிமன்றத்தின் அங்கத்தவராக இருந்த திரு. கிறிஸ்டோபர் ஜீ. வீரமந்த்ரி அதன் உப தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

1960 இல் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமல்லாத அங்கத்துவ நாடாக தெரிவுசெய்யப்பட்ட இலங்கை, கொங்கோ நெருக்கடி சமயத்தில் முதலிடம் வகித்து முக்கிய பணிகளை நிறைவேற்றியது. ஐக்கிய நாடுகளின் பலதரப்பட்ட 25 அமைப்புக்களில் இலங்கை அங்கத்துவம் வகித்திருக்கிறது. மனித உரிமைகள் ஆணைக்குழு, விஷ போதைப்பொருள் ஆணைக்குழு, ஹபிடாட், சுற்றாடல் திட்டம், சர்வதேச தொழில் ஸ்தாபனம், யுனெஸ்கோ என்பன அவற்றுள் சிலவாகும். 1961 இல் கொங்கோவின் அமைதிகாக்கும் முயற்சிகளுக்கு சிறிய படையணியை வழங்கிய இலங்கை, 2003 தொடக்கம் 700 வீரர்களது ஆளணியைக் கொண்ட படைப்பிரிவோடு ஹைட்டியில் அமைதிகாக்கும் படையோடு இணைந்திருக்கிறது. இலங்கை முன்மொழிந்த இந்துமா சமுத்திர சமாதான வலய யோசனை, சர்வதேச வீடமைப்பு வருடத்திற்கான யோசனை ஆகியவை பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பொருளாதா வளர்ச்சிக்கான முட்டுக்கட்டைகளை நீக்கி, உயர்ந்த செயற்றிறனை அடைவதற்காக அரசாங்கம் அறிமுகம் செய்த கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புத் திட்டங்களுக்கும் சர்வதேச நாணய நிதியம் உதவி செய்தது.



ஐ.நா. பொதுச்சபை மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை தூதுக்குழு